733

# புலத்துறைமுற்றிய பூவையர்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 - DEC 1956
MADRAS

733
4-56

வித்துவான்
சிவ. பார்வதியம்மையார்.

ACC - TNAC
01247
1453

★

தஞ்சை
மகாலிங்கம் பதிப்பகத்தில்
அச்சிடப்பெற்றது.

Y15wx
N56
11 8199

1956 [விலை ரூ. 2-4-0

உ

# புலத்துறைமுற்றிய பூவையர்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 - DEC 1956
MADRAS

வித்துவான்

**சிவ. பார்வதியம்மையார்**

எழுதியது.

★

தஞ்சை
மகாலிங்கம் பதிப்பகத்தில்
அச்சிடப்பெற்றது.

**உரிமை ஆசிரியையது**

**1956**

[ **விலை ரூ. 2-4-0**

# உள்ளுறை.


1. சிறப்புப்பாயிரம் ... ... I
2. முன்னுரை ... ... IV
3. முகவுரை ... ... VII
4. நூல் .... ... 1
5. குறிப்புரை ... .... 105
6. பிழை திருத்தம் ... ... 113


112199

உ

தமிழ்த்தாயின் தவப்புதல்வரும், முத்தமிழ்ப் புலமை முற்றிய வித்தகரும், குணமென்னுங் குன்றேறி நின்று, வையத்துள் வாழ்வாங்குவாழ்ந்தவருமாகிய என் அருமைத் தந்தையார், நாவலர், பண்டித, **ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்** நினைவு மலராக இந்நூல் வெளியிடப்பெறுகின்றது.

*சிவ. பார்வதி.*



நாவலர், பண்டித, ந. மு. வேங்கடசாமி நாட்டார்.

சேலம் மாவட்டம், தோரமங்கலம் ஆசிரியர், புலவரேறு,

அ. வரதநஞ்சைய பிள்ளை அவர்கள் அளித்த

# சிறப்புப்பாயிரம்.

(அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்,)

1. பூமடந்தை மார்பிலணி தரளவட மெனவருவி
பொலிந்து தோன்றிச்
சேமமுறும் பல்லுயிராம் மகார்க்கூட்டும் பால்வெள்ளத்
திரளே போல
ஏமமுட னிருமாப்புற் றுலாம்நதிகள் எவற்றினிலும்
ஏற்றம் சான்ற
வாமமிகு பொன்னிநதி வளஞ்சுரக்கச் சோணாடு
வாழ்வுற் றன்றே.

2. அந்நாட்டிற் புகழலது பிறநாட்டா நாட்டார்கள்
அமைந்தெஞ் ஞான்றும்
தந்நாட்டம் பிறர்வாழ உதவுதலாம் பழங்குடியிற்
சார்ந்த மேலோன்
முன்னாட்டான் வாரிபரு கியதருமைத் தன்றெனத்தென்
முனியும் நாணத்
தென்னாட்டிற் தமிழ்க்கடலை அணுவாய மனத்தடக்கும்
சீரி யோனே.

3. தமிழ்க்கேயோ ரெல்லையெனத் தனைப்போல வேங்கடமும்
சார்த லாலே

அமைத்தபெய ராகியவேங் கடசாமி எனப்பேர்கொண்
டவன்வா ரேருந்
தமைப்புலவ ரெனல்தமிழின் இனிமைநிகர் அமிழ
தனைக்கே யன்றி [துணுமத்
நமைப்பொருவுங் கல்வியினு லன்றெனவே வென்றி
நாவ லோனே. [கொண்ட

4. அத்தகையோன் அருந்தவமோர் உருக்கொண்டு தோன்
றறிஞர் சாற்றும் [றியதென்
வித்தகிமுன் பெண்மணிகள் புலமையினுற் றமிழ்நாடு
விளங்கிற் றென்றல்
மெய்த்தகவே யெனநாட்ட வரும்பூவை தலைச்சங்கம்
மேய நாள்தொட்
டெத்தனைநூல் இலக்கணமுண் டத்தனையும் அத்தனைப்
இனிதே கற்ருள். [போல்

5. தவப்பேறுந் தவமுடையார்க் கேயெய்து மெனநூலோர்
சாற்றும் வாய்மை
சிவப்பிரகா சர்க்குரித்தா மெனமனையில் லறம்பூண்ட
திருவி னன்ருள்
உவப்புறப்பார் வதியைப்பெற் றுயர்ந்தமலை யரசனையும்
ஒத்த தம்மா!
நிவப்புறத்தோன் றியகுடியும் புகுங்குடியும் பார்வதிசேர்
நிலைமை யானே.

6. தாயன்புக் கிணைகடவு ளன்பென்ப சிருர்க்குமொழி
தருமுன் தெய்வம்

தாயன்றே யாதலினா லெத்தகையோருங் கல்வி
சான்றோ ராகித்
தாய்மொழியாற் றாய்நாட்டுக் கிகபரமும் வளரப்ர
சங்கம் செய்யும்
தாயனையா ரியற்றுமிந்நூல் தலைசிறந்த தாய்விளங்குந்
தகுதித் தாமே.

7. புலத்துறைமுற் றியதிருவிற் பூவையரோர் மூவரெனப்
பொருந்த எண்ணி
நலத்தின்மிகு மாதிமந்தி பிறவாத சிவன்தாயாய்
நயக்கும் அம்மை
மிலைச்சியமா லையைமாலு மால்கொள்ளத் தருங்கோதை
விளம்பு மின்னோர்
இலக்கியத்தீஞ் சுவைதேற்றி இலக்கியதன் புலம்விளங்க
இருப்பாள் வாழ்க.

மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவரும்,

கோவை. அரசியலார் கல்லூரியின் முன்னைத் தலைமைத்

தமிழாசிரியருமாகிய

**பண்டித, அ. கந்தசாமிப் பிள்ளை அவர்கள்**

**எழுதிய**

# முன்னுரை.

**புலத்துறை முற்றிய பூவையர்** என்னும் இச்செம்பொருட் பைந்தமிழ்ச் சீரிய நூல் உரைநடையானியன்றது. நம் தமிழகத்தின் நல்லிசைப் புலமை மெல்லியலாருள் மூவர் வரலாற்றினை முறையுற நன்கு எடுத்துரைப்பது. யாவரும் மகிழ்ந்து மேற்கொள மெல்கி, நாற்பொருட் பயனும் நன்குற அமைந்தது. காப்பியப் பண்பாகிய பாவிகமுடைத்தாய்ச் சந்தியென்னும் உறுப்பு விளங்கத்தொடக்கம், இடைநிலைப் பகுதிகள் ஆய ஆக்கம் பெருகி இனிது முடியும் பெற்றியமைந்தது.

இந்நூல் அளவிற்சிறியதாகத்தோன்றினும் சொல்லினும், பொருளினும் பெருமைமிக்கது. ஓசையுடைமை, ஆழமுடைத்தாதல், நவின்றோர்க்கினிமை, நன்மொழி புணர்த்தலாதிய பத்தழகும், நூலமைப்பாகிய புத்தழகும்பெற்றுப் பொலிவதோடு சைவசித்தாந்த உண்மைப் பொருள்களும்கொண்டு மிளிர்வது.

பதினெண் கீழ்க்கணக்கு, தொகை, பாட்டு, பெருங்காப்பிய நூல்களாதிய இலக்கியங்களின் பாடல்களும், பாடற்பகுதிகளும், அருஞ்சொற்றொடர்களும், அவ்வாறே தேவாரம், திருவாசகம் முதலிய திருமுறை, திவ்வியப்பிரபந்தப் பாடல்களும்

ஆங்காங்கு மேம்பட்டு விளங்க, ஐந்திலக்கணக் கருத்துக்களும் உரிய இடங்களில் வெளிப்பட்டும், தொக்கும் திகழ அமைந்த இந்நூலின்மாண்பு, ஆசிரியையவர்களின் இலக்கிய இலக்கண நூல்களில் ஆழ்ந்தகன்ற புலமைத்திறனை நன்கு புலப்படுத்தா நிற்கும்.

இந்நூலில் முதற்கண்ணது:—சங்க காலத்துச் சான்றோருட் கூறப்படும் ஆதிமந்தியார் வரலாறு. அவ்வரலாறுபற்றிக் கிடைத்த சில சான்றுகளைக்கொண்டே விளங்க விரித்துரைத்தமை மிகவும்போற்றற்குரியது. கற்பின்மாண்பு, அதன் அருந்திறன், நல்லார்க்கு வாழ்நாள் இடையில், ஊழ்வலியாலெய்துமிடர், முயற்சிவலியால் ஊழையும் உப்பக்கம் காணலாம். பெற்றி முதலிய நயன்களைத் தெள்ளத் தெளிவுறுத்துவது.

அடுத்தது :—அறுபான்மும்மை நாயன்மார்களுட் கூறப்படும் அம்மையார் வரலாறு முதனூற்கருத்தை முற்றும் தழீஇயது. வரலாற்றுவரும் தலைவர் முதலியோர் தோற்றங்களும் அன்னோரின் செயல் வேறுபாட்டால் மனநிலை மாறுதல் முதலிய பான்மைகள் உளநூற்பாங்கிற்கேற்ப அவ்வவ்விடங்களில் மெய்ப்பாடுறத் தோன்றுவதும் கற்போருளம் பதியுமாறு கதிக்கின்றன. அம்மையார் பேயுருக்கொண்ட காரணமும், தலையால் நடந்தனரென்பதன் உள்ளுறைப் பொருளாகிய அறிவுனூற்கருத்தும் புலப்படுத்தப்படுகின்றன. தலையால் நடந்தமைபற்றி முந்தையோர் முடிபே முடிபாக்கொண்டமை சைவ உலகம் மகிழத்தக்கது. அம்மையார் வரலாறு படித்து முடிக்குந்தனையும் நமது சேக்கிழார் பெருமான் திருவாக்கு உளமலிய எழுஉதல் இப்பகுதியின் ஏனைய மாண்புகளினும் சீரிய மாண்பாம்.

மூன்றுவது :— திருமாலடியார் பன்னிருவருள் வைத்தெண்ணப்படும் ஆண்டாள் வரலாறு ஆகும். ஆண்டாளின்

பிறப்பு, வளர்ப்பு, அடிமைத்திறன், பேரன்பின் மேம்பாடு முதலியன முன்னோர் நூலின் முடிபொருங்கொத்தவை.

காலம் ஆராய்ந்ததும் தகுதியுடையதே. இம் மூவர் பாடல் வளங்களும், கருத்துக்களும் உரிய இடங்களிற்காட்டப் படுகின்றன. அவை, இந்நூலென்னும் அணங்கினுக்கு அணிகலன்களாக மிளிர்கின்றன.

உலகம்போற்றும் புலவர் பெருமானாக விளங்கியிருந்த எமது அரும்பெருந்தகையார், பண்டித, நாவலர், ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களைத் தமிழுலகில் அறியாதார் அறியாதார். அவர்களின் அருந்தவப் புதல்வியார் ஆவர் இந் நூலாசிரியையாராகிய பார்வதி அம்மையார்; தம் தந்தையார் பால் தமிழ் மொழியின் சீரிய நூல்களனைத்தையும் நன்கு பயின்று, வித்துவான் பட்டமெய்தியுள்ளார். தந்தையை யொப்பவே, புதல்வியும் கேட்போருள்ளம் விம்மிதமெய்த பொருள்நிறைந்த செந்தமிழ்ச் சொற்பெருக்காற்றுவதிலும், பொருட்செறிவுடைய செந்தமிழ் உரை யெழுதுவதிலும் நிகரற்றவர். இவர்கள் முதற்கண் எழுதிய பாண்பெரியார் மூவர் என்னும் நூல் தமிழுலகிற்குப் பயன்விளைத்தவாறே, இரண்டாவதாகிய இந்நூலும் பெரும்பயன் விளைப்பதாகும்.

இந்நூல் பல்கலைக்கழகக்கல்லூரிகளில் பட்டப்படிப்பிற்குப் புகுமுகம் ஆகும் வகுப்பிற்குப் பாடமாக வைப்பதற்குப்பெரிதும் தகுதியுடையது.

# முகவுரை.

ஈன்றாளுமாய்எனக் கெந்தையுமாய் உடன் றோன்றினராய்
மூன்று யுலகம் படைத்துகந்தான் மனத்துளிருக்க
ஏன்றான் இமயவர்க் கன்பன் திருப்பாதிரிப்புலியூர்த்
தோன்றாத்துணையா யிருந்தனன் தன்னடி யோங்களுக்கே.

— (திருநாவுக்கரசர்.)

தமிழையும், சைவத்தையும் தன்னிரு கண்களாகக் கொண்டு தமிழ்ப்பணியாற்றியும், சைவத்தொண்டு புரிந்தும் வந்த என் அருமைத்தந்தையார் காலமானபின்னர் ஒன்றிரண்டாண்டுகள் கழிந்து ஒருவாறு மனந்தேறிய பிறகு எளியேன் இவ்வுரைநடை நூலை எழுதலானேன். இந்நூலில் முதற்கணுள்ள புலமையும் பெண்மையும் என்பதுபற்றி திருவையாற்று அரசர் கல்லூரியில் ஐந்தாண்டுகளின் முன்னர் உயர்திருவாளர், (தஞ்சை ஜில்லா கலெக்டர்) சங்கரவடிவேற்பிள்ளையவர்கள் தலைமையிற்கூடிய திருவள்ளுவர் தமிழ் மாணவர் கழகத் திறப்புவிழாவிற் பேசினேன். அப்பொழுது அங்கே குழுமியிருந்த பெரியார்கள் மதிப்புக்கு அச்சிற்றுரை இலக்காயினமையின், அதனை முதலில்வைத்து இந்நூலை வெளியிடலானேன்.

காரைக்காலம்மையார் வரலாறும் 12 ஆண்டுகளின் முன்னர் கொப்பனுப்பட்டிக் கலைமகள் கல்லூரியில், உயர்திருவாளர் மகாமகோபாத்தியாய, பண்டிதமணி, மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் தலைமையில் யான் பேசியதாகும். அச்சொற்பொழிவினையும், உயர்திரு. பண்டிதமணியவர்களும், அவ்விழாவிற்கு வந்திருந்த உயர்திரு. அ. மு. சரவணமுதலியாரவர்களும், உயர்திரு. ஔவை, சு. துரைசாமி பிள்ளையவர்களும் பாராட்டியுரைத்தமையின் அதனையும் அக்குறிப்பின் வழியே உரைநடை நூலாக எழுதி இதன்கண் சேர்த்தேன். சைவத் திருமுறைகளை அருளிச்செய்தபெரியார்களுள் அம்மையார் ஒருவரே

பெண்பாற்புலவராயினமை போலவே; வைணவத் திருமுறை யாகிய திவ்விய பிரபந்தத்துள்ளும் கோதை நாச்சியார் ஒருவர் பெயரே காணப்படுகின்றமையின் அவர் வரலாற்றையும் எழுதிச் சேர்த்தேன்.

இனி, சங்க காலத்து பெண்பாற் புலவர்களுள் சோழப் பேரரசன் கரிகாற்பெருவளத்தானுடைய அருமை மகள் ஆதி மந்தியார் வரலாறும் தமிழ் மக்கள் நன்கறிய வேண்டுவதொன் ருகலின் அதனையும் எழுதி கால முறைமைக்கேற்ப முதலில் அமைத்தேன்.

எத்துணையும் குறைந்த கல்வியும், சிற்றறிவும் உடைய யான் என் குடும்ப வினைகட்குச் செலவிட்டு எஞ்சிய சிறு பொழுதுகளில் எழுதிய இந்நூலுள் எத்தனையோ குறைகள் இருத்தல் கூடும். எனினும், சிறந்த கல்வியும், பேரறிவு முடைய சான்ருேர்கள் அக்குறைகளைப் பொருட்படுத்தாது இந்நூலை ஆதரிப்பதுடன், இத்தகைய தமிழ்ப்பணியில் எனக்கு மேலும் ஊக்கமூட்டுவார்கள் என நம்புகின்றேன்.

இதனைப் பார்வையிட்டு அன்புடன் சிறப்புப்பாயிரம் வழங்கிய பெரியார் செந்தமிழ்த் தாதா அவர்கள் திருவடிகட்கும், முன்னுரை அளித்த பண்டிதப் பெரியார் அவர்கட்கும் முறையே என் நன்றிகலந்த வணக்கத்தைச் செலுத்துகின்றேன்.

இதனை அச்சிடுங்காலத்து வேண்டிய அனைத்தையும் தாமே செய்து உதவிய என் அருமைச் சிறிய தந்தையார், பன்மொழிப் புலவர், திருவாளர், ந. மு. **கோவிந்தராய நாட்டார்** அவர்கட்கும் என் வணக்கம் உரியதாகும்.

ஒன்றுக்கும் பற்ருத என்னையும் இத்தகைய முயற்சியுட் புகுத்தி நிறைவேற்றியருளும் திருவருளின் பெருமையை யானே வழுத்தவல்லேன்.

**சிவ. பார்வதி.**

# புலத்துறை முற்றிய பூவையர்.

## புலமையும், பெண்மையும்.

**புலமை** என்பதற்கு மெய்யறிவு என்பது பொருள். மெய்யறிவைப் பெறுதற்குரிய வழிகளில் கல்வி முதன்மையானது. கல்வி என்னும் சொல் கற்றற்குரிய நூலையும், கற்றலினுளைய அறிவையும் குறிக்கும். உலகில் இறைவனுல் படைக்கப்பட்ட ஓரறிவுயிர் ஆதியாய பலவேறு பிறப்புக்களினிடையே கிடைத்தற்கரிய மக்கட் பிறவியை யெய்திய நாம் நம்முடைய பகுத்தறிவின் துணைகொண்டு பிறவி யெடுத்த பெரும்பயனை யடைதற்கு முயற்சித்தல் வேண்டும்.

கல்வி இன்றியே இயற்கையறிவு கொண்டு வாழ்வை நடாத்திப் பிறவிப் பயனை யெய்துதல் கூடுமோவெனின் கூடாது. கல்வி, இருளில் நெறியறியாது இடர்ப்படுவோருக்கு விளக்கு துணைபுரிதல்போல, உய்யுநெறி காணுமல் உழலும் மக்கட்கு உறுதுணையாய் நின்று அறிவொளியைப் பெருக்குவதாம். மக்கள் அறிவுடையவரா யிருந்தாலன்றே பிறவிப் பெரும்பேற்றையடைய முடியும். அவ்வறிவு தானும் கல்வி கேள்விகளாலேயே விரிவடையும். அறிவானமைந்த ஆன்றோர்களிருக்கும் நாடு நலமடையும். செல்வம் பெருகும். மக்கள் இம்மை மறுமை யின்பங்களை எளிதிற் பெறுவர்.

அறிவின் நிலைக்களமாகிய கல்வி தற்காலத்தில் ஊதியம் ஒன்றையே கருதிக் கற்பது போலாது, உண்மையை யுணர்த்தி,

மக்கட் பண்பை நெறிப்படுத்தி, வீட்டின்பத்தையும், உதவ வல்ல மெய் நூல்களைப்பயின்று, அவற்றின் நுண்பொருள்களை ஐயந்திரிபற வுணர்தற்கேதுவாகும். இவ்வாறு மெய்யறிவு பெறுதற்கு உறுதுணையாய் நின்று உணர்த்தவல்ல அளவை நூற்பயிற்சியும், இலக்கண நூற்பயிற்சியும் ஒவ்வொருவர்க்கும் மிக இன்றியமையாதனவாம். இப்பயிற்சிகளின்றேல் புலத் துறை முற்றிய சான்றோர் தம் உண்மை நூல்களின் அரும் பொருள் காணவியலாமல் மக்கள் இடர்ப்படுவர். இதனாலன்றோ தெய்வப் புலவர்,

"எண்ணென்ப வேனையெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு"

என இவ்விரண்டினையும் மக்களுயிர்க்கு இரு கண்களாக வற்புறுத்துக் கூறியருளினர்.

கற்கவேண்டியவற்றை ஐயந்திரிபறக்கற்று அவற்றின்வழி ஒழுகவல்ல அறிவாற்றலுடையார், எத்தகைய இன்னல் வரினும், அவற்றிற்கு அஞ்சாமல் நல்வினை தீவினைப் பயன்களை அனுபவித்தே தீரவேண்டும் என்பதனை உணர்ந்து, இன்பம் வந்தெய்திய பொழுது மகிழ்தலும், துன்பம் வந்துற்றபொழுது அழுங்குதலும் இலராய், தம் நூலறிவின் உறைப்பால் ஒரே தன்மையராய் விளங்குவர்.

கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு என்றுங்கு, அவர்க்கு,

"யாதுமூரே" ஆம், "யாவருங் கேளிர்" ஆவர்.

நல்லிசைப் புலமை மெல்லியலாராய ஔவையார்,

"மரங்கொல் தச்சன் கைவல் சிறுஅர்
மழுவுடைக் காட்டகத் தற்றே
எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே"

என, கல்வியிற் சிறந்தோர் எங்கும் எவரிடத்தும் எதிர்பார்க்க வேண்டிய தொன்றில்லை என்பதனை அங்கையி னெல்லியென அழகுபடக் கூறினர்.

கல்வி யறிவானமைந்த பெரியாரைச் சார்ந்து,

"உற்றுழி யுதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது, ஒழுகுதலும், ஆசானிடம்,

"சித்திரப் பாவை யினத்தக வடங்கிச்
செவிவா யாக நெஞ்சு களனாகக்
கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்தலும்"

கற்றற்குரிய முறைகளாம்.

ஒரு தாய்க்கு, தன் மக்களில் கல்வியறிவாற் சிறந்தான் ஒருவனிடமே மிகுந்த அன்பு தோன்றும்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்"

என்பது பொய்யா மொழியன்றோ? 'ஒருகுடிப் பிறந்த பலருள்ளும் மூத்தோனை வருகவென்னாது, கல்வியறிவுடைய இளைஞனையே ஆன்றோர் விரும்புவர்.

தேயமிடையிட்டவற்றையும், காலமிடை யிட்டவற்றையும் காணவல்ல கல்வியறிவுடையவரைக், கண்ணுடையர் எனவும், கல்லாதவரை முகத்திரண்டு புண்ணுடையர் எனவும், மக்களுக்கு அழிவில்லாத செல்வம் கல்வியொன்றே! அழிதற்பாலனவாய ஏனைய வெல்லாம் பொருளாகாவெனவும் கூறிப் போந்த வள்ளுவர் வாய்மொழியைச் சிந்திப்பின் கல்வியின் இன்றியமையாமை தெளிவாம். மற்றும் கல்லாதானுடைய அறிவு ஒண்மையுடையதாயினும் அதனை அறிவுடையர் கொள்ளார் என்றும் கூறுவர்.

கல்வி உயிரின் பிணியெனப்படும் அறியாமையாகிய அக விருளைப் போக்கவல்ல நன் மருந்தும் ஆம் என்பதனை,

"எம்மை யுலகத்தும் யாங்காணேம் கல்விபோல்
மம்மரறுக்கு மருந்து"

என்னும் நாலடியார்ச் செய்யுள் தெளித்துரைக்கின்றது காண்க. மற்றும் அது, மக்கள் அடைதற்குரிய அறம் முதலாய உறுதிப்பொருள் நான்கனையும் அளித்து, உற்றவிடத்துதவிபுரியும் பெற்றியுடையதும் ஆம்.

கல்வி அறம்பயக்கு மாறு காண்போம். முறையான கல்வி நிரம்பப் பெற்றவர்க்குத் தூய ஒழுக்கமும், ஒருநெறியான உளமும், அன்பு, அருள், நடுவு நிலைமை என்பனவும் அமைந்திருத்தலால், அவர் வாழ்க்கை, தூய நல் வாழ்வாதலாகிய அறம் சிறக்க மிளிரும். அறம் செய்தற்கு ஏற்ற வழிகளை நன்காராய்ந்து நடத்த வல்லுநராதலின், அவர் புரியும் மிகச் சிறிய அறமும் வான் சிறிதாப் போர்க்கும் பேரறமாகத் திகழும்,

"பன்னும் பனுவற் பயன்றே ரறிவிலார்
மன்னு மறங்கள் வலியில"

என அறஞ்செய்யும் இடமும், முறையும் அறியும் கல்வியிலார் செய்யும் அறத்தின்றன்மை உரைக்கும் ஆன்றோர் அமுத மொழியினை உற்று நோக்கின் அறம் பயத்தற்குக் கல்வி யவசியமே என்பது புலனாகும்.

இனி, பொருள் ஒன்றுமே கருதிப் பயிலும் இற்றை நாளில் கல்வி, பொருள் அளித்தலைக் கூறவேண்டுவதில்லை யாகலின் அது இன்பந் தருதலை நோக்குவோம்.

கல்வியிற் சிறந்து ஆன்றவிந்தடங்கிய கொள்கையுடையார் பிறர் நன்மதிப்பிற்கிலக்காகும் பொழுது பேருவகை

யெய்துவர். அதனினும் சான்ருண்மை யுடையராய அவர், பலவேறு காலத்திருந்த புலமைத் திருவுடையார்களின் இன்னிசைப் பாக்களையும், நல்லிசை உரை நூல்களையும் துருவி யாராய்ந்து, தம் கலையுணர்வு கொண்டு நோக்கும்பொழுது அவர்க்கு உண்டாம் இன்பம் மிகப் பெரிதாம். இன்னும் தாங் கண்ட நுண்பொருளை எடுத்துரைத்துப் பிறர் மகிழ்ச்சியைக் காணும்போது அவரடையும் இன்பத்திற் களவேது?

*" நவில்தொறும் நூனயம் போலும் பயிலுெறும்*
*பண்புடை யாளர் தொடர்பு "*

*" தாமின் புறுவ துலகின் புறக்கண்டு*
*காமுறுவர் கற்றறிந்தார் '*

என்னுந் திருக்குறள்களையும்,

*" ஆயுந் தொறுந்தொறு மினிதாங் கல்வி "*

*" செஞ்சொற் கவியின்பம் "*

என்னும் ஆன்ருேர் திருவாக்குகளையும் நோக்குமிடத்துக் கற்ருேர்க்குக் கலையறிவானுண்டாம் இன்பம் எத்தகையதென் பது விளங்கும். கல்வி இன்னணம் இன்பமெய்துவித்தலே யன்றித் துன்பம் வந்துருவாறு உற்றுழி உதவவல்லதும் ஆம்.

கல்வி வீடுபேற்றையும் அளிக்கவல்ல தென்பதனை,

*" கற்பக் கழிமட மஃகும் மடமஃகப்*
*புற்கந் தீர்ந்திவ் வுலகிற் கோளுணரும் கோளுணர்ந்*
*தால்*
*தத்துவ மான நெறிபடரும் அந்நெறி*
*இப்பா லுலகத் திசைநிறீஇ உப்பால்*
*உயர்ந்த வுலகம் புகும் "*

என்னும் நான்மணிக்கடிகையானறிக. எனவே வீடடைதற்கு

மெய்யுணர்வு வேண்டும் என்பதும், அது கல்வியால் எய்தற் குரியதென்பதும் இவ்வாசிரியர் கருத்தாதல் பெற்றும். நூலுணர்விற் சிறந்து அறந்திறம்பா ஒழுகலாறுடையார், பல் வகை நலன்களுமெய்தி இறுதியில் வீடுபேறுறுவர் என்பது அறிஞர் பலரின் சிறந்த முடிபாகலின் மேலுங் கூறுதல் மிகை யாம். சுருங்கச் சொல்லின் கல்வி, மக்கள் அடைதற்குரிய நலன்கள் அனைத்தையும் ஒருங்கு தரவல்லதாம் என்பதனை

"அறம்பொருளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்கும் கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்றதுணை."

என்னும் குமரகுருபர அடிகளின் அருண்மொழியும்,

"கைப்பொருள் கொடுத்துங் கற்றல் கற்றபின் கண்ணுமாகும்
மெய்ப்பொருள் விளக்கு நெஞ்சின் மெலிவிற்கோர் துணையு மாகும்
பொய்ப்பொருள் பிறகள் பொன்னும் புகழுமாம் துணைவி யாக்கும்
இப்பொருள் எய்தி நின்றீர் இரங்குவ தென்னை யென்றான்"

என்னும் திருத்தக்க தேவர் பொருண்மொழியும் வலியுறுத்தல் காண்க.

கேடில் விழுச்செல்வமாய கல்வி, ஒருவற்கு இம்மையி லேயே எல்லா நலங்களையும் அளிக்குஞ் சிறப்புடையதாயினும், அச்சிறப்பினை இம்மையில் ஊழ்வயத்தாற் பெருவிடின், வரும் பிறவிகளில் வினைப் பயன்போல உடன்சென்று காக்கும் அரும் பெறற் றுணையுமாகுந் தன்மையை,

"ஒருமைக் கட்டான்கற்ற கல்வியொருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து"

என்ற செந்தமிழ்த் திருமறையா னறிக.

இன்னோரன்ன பல்பெருஞ் சிறப்புக்கள் வாய்ந்த கல்வியைப் பெற்றும் இறைவன்றிருவடியைச் சிந்தியாதிருப்பாராயின், கல்வியானெய்தும் பெரும்பயனை இழந்தோராவர்.

*''கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்*
*நற்றாள் தொழாஅ ரெனின்''*

என்னும் வள்ளுவப் பயனாலும் கல்வியின் பயன் கடவுளடி தொழுதலே என அறியலாம்.

இறைவன் எல்லா வுயிர்க்கும் ஒரு தன்மையாய் அருள் பாலிப்பவனாயினும், அவனை நெறியறிந்து அடைதற்குரியோர் கல்வியறிவுடையோரே யாவர்.

*''கல்லாதார் நெஞ்சத்துக் காணவொண்ணாதவன்''*

என்னுந் திருமந்திரமும்,

*''கற்றவர் விழுங்குங் கற்பகக் கனி''*
*''மற்றவர் அறியா மாணிக்க மலை''*

என்னும் திருவிசைப்பாவும், பெருமானை யடைந்து பேரின்பமெய்தற்குரியவர் கற்றவரே என்பதனை அறிவிப்பனவாம்.

கல்வியிற் பெரியவராய கம்பர்,

*''ஏகம் முதற்கல்வி முளைத்தெழுந் தெண்ணில் கேள்வி*
*ஆகம் முதற்றிண்பணை போக்கி யருந்தவத்தின்*
*சாகந்தழைத்தன் பரும்பித் தருமம் மலர்ந்து*
*போகங் கனியொன்று பழுத்தது போலும்''*

என்ற கவியில், கல்வியாகிய ஒரு முளையே எல்லாப்பேற்றுக்கும் அடிப்பட்ட கருவியாயிருந்து, இம்மையின்பம், மறுமையின்பம், வீட்டின்பம் ஆகிய அனைத்தையும் தரவல்லது என்றுரைத்திருப்பது கற்றார்க்குக் கழிபேரின்பம் பயப்பதாம்.

இனி, கற்றலை யடுத்துக் கேட்டலையும் மக்கட்கு உறுதி பயப்பனவற்றுள் ஒன்ருகக் கொள்ளவேண்டும்; கல்வியிலாத சிலர் கேள்வி வாயிலாகப் பெரும்பயனெய்தவுங் கூடுமாகலின்; “கற்றல் கேட்டலுடையார்” “கற்றிலனுயினுங் கேட்க” என்பன காண்க.

இதுகாறும் புலமைக்கு வித்தாகிய கல்வியின் பெருமையையும், பயனையும் கூறினேம். இனி, புலமை எத்தகைத்து என்பதனை ஆராய்வோம். புலமை என்பது கல்வியென்னும் மென்முளையினின்றுஞ் செழித்து வளர்ந்து, தளிரும், பூவும், காயும், கனியுமாய பலவேறு பலன்களையும் தரவல்ல மெய்ஞ் ஞானம் என்னுந் தருவாம். கல்வி, கற்க முயல்வாரனைவர்க்கும் பொதுவாய் உயிர் அறிவினை வளர்ப்பது. புலமை அங்ஙன மன்றி, திருவருட்பேறுடையார்மாட்டு அவர்தம் சிறந்த கல்வி யறிவுடன் ஒன்றிநிற்கும் இறையருளின் மாட்சியால் விரிந்து கிடப்பதாம். ஆகலின், அருண்ஞானந்தலைக்கூடிய ஆன்றோ ரிடமே புலமைச் செல்வம் மலிந்து கிடக்கும். எனவே உலகில் கற்றவரெல்லாரும் புலவர் ஆகார் என்பதும், புலமை இறை யருள் இணைந்து நிற்கும் தவமுடையார்பால் நிகழ்வது என் பதும் விளக்கமாம்.

நம் நாடு ஒரு காலத்தில் அத்தகைய புலமைச் செல்வர் களால் பெருமையடைந்திருந்ததென்பதைநினைக்க உவகையூற் றெடுக்கின்றது. ஏன், ஆலவாயமர்ந்த அவிர்சடைக் கடவுளும், குன்றமெறிந்த குமரவேளும் புலவர் என்ருல் இதனினும் நம்ம ஞேர்க்குக் கிடைத்தற்கரிய பேறென்றுளதோ! இவர்கள் புலவர் என அழைக்கப்படுதலோடிருந்தனரோ? அற்றன்று. நல்லிசைப் புலவர் குழீஇய சங்கங்களிலிருந்து தமிழாராய்ந்த பெரும் புலவர்களுமாவர். அதனலன்றே வேறெம்மொழியினுக்குங் கிடைக்கவொண்ணுப் பெரும்பேறு நந்தமிழன்னைக்குக் கிடைத் தது என இன்று நாம் பெருமிதமடைகின்ருேம்.

" தவலருந்தொல்கேள்வித் தன்மை யுடையாருடன் பழகுதலினுலுண்டாகும் இனிமை கண்டன்றே இறைவனும் இன்னணம் புலவுருக் கொண்டனன். இறையனுர் சங்கப் புலவருள் ஒருவராயிருந்து தமிழாராய்ந்ததோடு, தம் அடியவர் பொருட்டுப் புலவரா யெழுந்தருளி அவர் இன்னல் தீர்த்தமை திருவிளையாடல்களால் அறியப்படுகின்றது. கடைச் சங்கப் புலவருள் தலைவராய 'நக்கீரர்' அறுமுகப் பெருமானுடைய அருளை வேண்டிநின்ற ஞான்று, அவரைப் புலவராகவே வைத்துப் பாடினுர். புலவராற்றுப்படையின் இலக்கணம் அமையப்பெற்ற அந்நூல், முருகப் பெருமான் புகழ்பரவுந் தன்மையால் முருகாற்றுப்படையென வழங்குவதாயிற்று. புலவர் என்னும் சொல் பொதுவாய்த் தேவர் என்னும் பொருளுடையதாயினும், ஈண்டு நக்கீரர், பெருமானைத் தண்டமிழ்ப் புலவராகவே கொள்ளுகின்ருர். சந்தனப் பொர்தியிற் செந்தமிழ் முனிக்கும், தமக்கும் தமிழறிவுறுத்திய பரமாசாரியனை வேறு எவ்வடிவிற்கொள்ள வியலும் ?

ஆற்றுப்படையுள் பழமுதிர் சோலையைப்பற்றிப் பாடும் பகுதியில்,

" நூல் அறி புலவ "
' பலர்புகழ் நன்மொழிப் புலவர் ஏறே "
" நின்னெடு புரைகுந ரில்லாப் புலமையோய் "

என மூன்றிடங்களில் செவ்வேள் புலவரென அழைக்கப் படுவதை நோக்குங்கள். இவற்றுள் இறுதியில் உள்ள புலமை என்னுஞ் சொற்கு, ஆசிரியர் நச்சினுர்க்கினியர் மெய்ஞ்ஞானம் எனப் பொருள் கூறியுள்ளார்.

இதனுல் மெய்யறிவு தலைக்கூடப்பெற்ற கல்வித் திருவுடையவரே புலவர் எனப்படுதற்குரியர் என்பது தேற்றம். இத்தகைய புலமை ஆற்றல் உலகில் பலதிறப்பட வழங்கிப்

பயனளிப்பதாகும். அவை குற்றமற்ற மொழியறிவு, எழில் மிகுந்த இனிய நடை, உண்மையறியும் நுனித்துணர்வு, திருந்திய சொல்வன்மை முதலியனவாம். அவற்றுள் சொல் வன்மை என்பது நன்கறிய வேண்டுவதொன்ருகலின், அத னியல்பைச் சிறிதுரைத்து மேற்செல்வாம்.

சொல்வன்மை என்பது கற்றுத்துறைபோய பெரியார் மாட்டு இருக்கவேண்டிய சிறந்த பண்பாகும். அஃதின்றேல் அவர்தம் கல்வி உலகிற்கு அத்துணைப் பயன் விளைக்கா தென்பது ஒருதலை.

*"இணருழ்த்து நாரு மலரனையர் கற்ற*
*துணர விரித்துரை யாதார்"*

என்பது பொய்யா மொழி. சொல்லாற்றலின் இன்றி யமையாமை கண்டன்ரே தெய்வப் புலவர் ஏனைய ஒழுகலாறு களைப்போல ஓரதிகாரத்திற் கூருது பலவிடங்களில் மொழிந் தருளினர். சொல்வன்மை என்னும் அதிகாரத்தன்றி தூது முதலிய பிறவிடங்களிலும் சொல்வன்மை யுரைக்கப்படுதல் கொண்டே அதன் பெருமை அறியற்பாலதாம்.

அநுமனை முதன்முதலாகச் சந்தித்த இராமன், அவனது நிகரில்லாச் சொல்லாற்றலைக்கண்டன்ரே இலக்குவன் முன்னர் அவற்கு, 'சொல்லின் செல்வன்' எனப் பெயர் புனைந்தனன். இனி, சொல்வன்மை பொதுவாக எல்லோ ருக்கும் இருக்கவேண்டியதெனினும், நூல் கற்பிக்கும் ஆசிரியர், அவைகளில் சொற்பொழிவாற்றுவோர், அமைச்சர், தூதுவர், வழக்குரைஞர் ஆகியோர்க்குச் சிறப்பாக இருக்கவேண்டியதாம். சொல்லாற்றல் என்பதென்னையெனில், தாம் கற்றுணர்ந்த பொருள்களைக் கேட்போர் உளங்கொளச் சொல்லுதல், எளிய நடையில், சுருங்குதல், விளங்குதல், இனிதாதல் ஆகியவை. பொருந்த வுரைத்தல், வழுவின்றித் திருந்திய மொழிகளால்

கேட்போர் தகுதியறிந்து அவர் உணரும் வண்ணம் சொல்லுதல், முன்னொடு பின் முரணுமல் வரிசைப்படுத்தி மொழிதல், நிமிர்ந்த நிலேயும், மலர்ந்த முகமும், தெளிந்த குரலும் உடையராய்த் தடையின்றிச் சொல்லுதல் ஆகிய பண்புகளாம்.

இனி, இத்தகைய புலமையும், கல்வியும், ஆடவர், பெண்டிர் என இருதிறப்படும் மக்கட்டொகுதியினருள் இடைக்காலத்தார் கருதியவாறு ஆண்பாலார்க்கே உரியனவோ? அன்றி மகளிர்க்கும் உரியனவோ? என்றுராயின் பன்னூருண்டுகட்கு முன்னரே மகளிர் பலர் நிறைந்த கல்வியும், சிறந்த புலமையும் உடையராய்த் திகழ்ந்தமை இலக்கிய வாயிலாக அறியக் கிடக்கின்றது. ஆகலின், பெண்டிரின் இயற்கைப் பண்புகள் இன்ன என்பதையும், அவை கல்வியறிவு பெறுதற்கு ஏற்புடையனவா என்பதையும் நோக்குவோம்.

ஆசிரியர் தொல்காப்பியர் "பெருமையும் உரனும் ஆடூஉ மேன" என்று தலேமகற்குரிய பண்புகளே எடுத்தோதிய பின்னர், தலேமகட்குரிய பண்புகளாக,

*"அச்சமு நாணு மடனு முந்துறுத்த*
*நிச்சமும் பெண்பாற் குரியவெண்ப"*

என்றுரைத்தருளினர்.

ஈண்டு ஆடவர்க்குப் போலாது, மகளிர்க்கு இப்பண்புகள் எஞ்ஞான்றும் உரியனவாம் என மொழிந்திருத்தல் அறியத்தக்கது. அச்சம் என்பது அன்பு காரணத்தாற் ரேன்றிய உட்கு; நாண், மகளிருடன் பிறந்ததோர் உள்ளவொடுக்கம்; மடன், அறிந்தும் அறியாதிருத்தலாய அடக்கம்.

ஆசிரியர் நச்சினர்க்கினியர் மடன் என்பதற்குக் கொளுத் தக்கொண்டு கொண்டது விடாமை, எனப் பொருளுரைப்பர். மேற்குறித்த நூற்பாவினுள் 'முந்துறுத்த' என்றதனுல், இம்

மூன்றுமன்றி கண்டறியாதன கண்டுழி மனங்கொள்ளாத பயிர்ப்பும், செய்யத் தகுவது அறியாத பேதமையும், நிறுப்ப தற்கு நெஞ்சுண்டாம் நிறையுங்கொள்க என விளக்கினர் உச்சிமேற்புல்வர்கொள் நச்சினுர்க்கினியர்.

அச்சம், நாண், மடன் என்பனவற்றுடன் பயிர்ப்பொன்று கூட்டி, அச்சம், நாண், மடம், பயிர்ப்பு என்பன தலைமகட்குக் குணம் எனக் களவியலுரை கூருநிற்கும். எனவே களவியலுரைகாரர் 'முந்துறுத்த' என்றதனுற் போந்தவற்றைப் பயிர்ப்பினுள் அடக்கினுரென்பது பெற்ரும். "நாற்குணமும் நாற்படையாய்" என்பன போல்வனவும் மகளிரின் இயற்கைப் பண்புகள் இவையென விளக்குவனவாம். இந்நாற்பண்புகளும் பெண்டிர்பால் அமையவேண்டிய நல்லியல்புகளாகலின் இவற்றின் தொகுதியே பெண்மையென்று சிறப்பித்துப் பேசப்படுவதாம்.

அறிவாற்றல்களில் மிக்காெனுருவனை ஆண்மையிற் சிறந்தான் எனப் புகழ்வது போலவே, நாண் முதலியவற்ருற் சிறந்த நங்கையொருத்தியையும் பெண்ணிற்பெருந்தக்காள் எனப் போற்றுவர். எனவே ஆண்மை, பெண்மை என்பன ஆடவர் பெண்டிரின் வாழ்க்கையைப் பண்படுத்த "வினையினீங்கி விளங்கியவறிவின் முனைவனுல்" வகுக்கப்பட்ட நன்னெறிகளின் பெயரே என்று கொள்ளவேண்டும்.

பிறவியிலேயே மென்மைத் தன்மை வாய்ந்த மகளிருக்குத் தாம் பயிலாத பிற விடங்களிற் சென்ற விடத்தும் பிற பொருள்களைக் கண்டவிடத்தும் அச்சம் உண்டாதல் இயற்கையே! அவ்வாறு அச்சந்தோன்ருவிடில் அது ஆடவர் செயலாய்ப் பெண்மைக்கு இழுக்கு விளைவிப்பதாம். இயற்கை அச்சமுடைய மெல்லியலார் அவ்வாற்ருற் பிறர் முன் அடங்கியொழுகுதல் நாணம் ஆகும். நாண் என்பது மக

ளிர்க்கு உயிரினுஞ் சிறந்ததாகக் கொள்ளப்படுவதோர் ஒழுக லாறு. மடம் கல்வியிலும் உலகியலிலும் தாம் அறிந்த நுண்பொருளைத் தாமாகப் பிறர்க்கு எடுத்துரைக்கும் பெருமித மிலராய், அறிந்தும் அறியாதவர்போன்று ஒழுகும் நற்பண்பு. பயிர்ப்பு என்பது தற்காத்தலாகிய நிறையுடைமையோடு கணவனிடம் தணவாக் காதலுடையராய் ஒழுகும் தூநெறி யாய கற்பு ஆகும். கற்பு, மகளிர் ஆற்றவேண்டிய நற் கடமைகள் அனைத்திலும் சிறந்ததாம்.

அதனாலன்றோ உயிரினும் ஓம்புதற்குரிய நாணினும்,

*"செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று"*

எனத் தொல்காப்பியம் கூறும்.

இத்தகைய கற்புநெறி கைவந்த பத்தினிப் பெண்டிர் வேண்டியது விளைக்கும் ஆற்றலுடையர் என்பதனை,

*"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்*
*பெய்யெனப் பெய்யு மழை"*

எனத் திருவள்ளுவரும், அவர் இருந்த நாடு அனைத்து நலனுஞ் சிறக்கத் திகழும் என்பதனை,

*"வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது*
*நீணில வேந்தன் கொற்றஞ் சிதையாது*
*பத்தினிப் பெண்டிர் இருந்த நாடு"*

என இளங்கோவடிகளும் உரைக்குமாற்றானறியலாம். பத்தினிப் பெண்டிரின் உளத்தூய்மையை,

*"தங்கணாய கரிற்றெய்வம் தவம்பிறிதில வென்றெண்ணும்*
*மங்கைமார் சிந்தைபோலத் தூயது"*

வாமனன் தவம்புரிந்த பொழில் என்னும் கம்பர் திருவாக்கால் ஓர்ந்துணர்க. மற்றும் பெண்பாலார்க்கு மேற்குறிக்கப் பெற்ற வையேயன்றி,

*"செறிவு நிறையுஞ் செம்மையுஞ் செப்பும்*
*அறிவும் அருமையும் பெண்பாலான"*

என வேறு சிறந்த குணங்களையும் ஆசிரியர் தொல்காப்பியர் கூறுவர்.

இத்தகைய நல்லியல்புகள் பலவும் அமையப்பெற்ற மெல்லியர்கள் கல்வியறிவும் நிரம்பியவர்களாயிருப்பின், அவர்கள் வாழ்வு எத்தகைய இன்ப வாழ்வாக இருக்கும்? கல்வியிற்சிறந்த மங்கையரைத் தாய்மாராகவும், தலைவியராக வும் பெற்ற ஆடவர்க்கு அதனினும் சிறந்த பேறென்றுளதோ? மாண்புமிக்க மகளிருறையும் இல்லமன்றோ அனைத்து நலனுஞ் சிறந்து விளங்கும்.

*"இல்லதென் இல்லவள் மாண்பானல்"*

என்னுந் தமிழ் மறை மாதர் பெருந்தகவை விளக்குதல் காண்க.

கல்வியின் இன்றியமையாமையையுணர்ந்த நம் பண்டைக் காலத் தமிழ் மக்களெல்லோரும் ஆண், பெண், என்னும் பால் வேறுபாடும், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்னும் மரபு வேறு பாடும் இன்றி ஒருங்கு புலமையுங் கல்வியும் பொருந்தி விளங் கினர். அந்நாட்களில் கல்வி, அறிவு வளர்ச்சியைக் குறித்தே கற்கப்பட்டு வந்தது. பலவேறு தொழில்களைப் புரிந்தோர் பலரும் இயற்றமிழ்ப் புலவராகத் திகழ்ந்தனர்.

அரசர் முதலாகக் குறவர் ஈருகவுள்ளோர் பலருடைய பெயர் இலக்கியங்களிற் பயிலப்பட்டு வருதலால், தொல்லோர்

கல்விப் பெருக்கம் புலனாகின்றது. கல்வி தழைத்தோங்கிய தனால் தமிழர் நாகரிகம் மிகச்சிறப்புற்றிலங்கியது. இன்னணம் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே புலமையும் நாகரிகமும் மிக்குவிளங்கிய தமிழகம் இடைக்காலத்தில் பிற மன்னர்கள் ஆட்சியில் கலையறிவுகுன்றத் தலைப்பட்டது. அதிலும் பெண் கல்வி அறவே அகற்றப்பட்டுவிட்டது.

அந்நாளில் மடம் என்னும் பெண்மைப் பண்பிற்கு, சிலர் அறியாமை எனப் பொருள் கூறி மடமை உடைய மகளிர் கற்கவேண்டியதின்று எனச் சாதிப்பாராயினர். இன்னோர் "பேதமை யென்பது மாதர்க் கணிகலம்" என்ற பொன்னுரை யைப் போலியுரையாக்குபவருமாவர்.

தற்போது நாகரிகத்திலும், கல்வியிலும், செல்வத்திலும், சிறந்து விளங்குகின்ற மேனாடுகளெல்லாம் இருந்த இடங் கூடத் தெரியாதிருந்த பழங்காலத்தில், இயல், இசை, நாடகம், என்னும் முத்தமிழ் நூல்களெல்லாம் நிரம்பப்பெற்று ஓவியம், சிற்பம், வானநூற் புலமை, வாணிபம் ஆதிய யாவும் விளக்கமுற்றுத் திகழ்ந்த தமிழ்நாடு இடைநாளில் கல்வியறிவு குன்றத் தலைப்பட்டமையால் வீறின்றி ஒளி மழுங்கி நிற்ப தாயிற்று.

ஆனால் ஒன்றிரண்டு நூற்றாண்டுகளாக ஏற்பட்ட ஆங் கில அரசியலின் பயனாக ஆடவர், பெண்டிர், கல்வியறிவில் ஓரளவு மேம்பட்டு வருகின்றனர். இவ்விருபதாம் நூற் றாண்டிலிருந்து தமிழகம் மீண்டும், பல்வகை இலக்கியங் களும் வளரப்பெற்று என்றுங்குன்றாத இளமையுடன் விளங்கத் தொடங்கியுள்ளது என்பது கண்கூடு.

இன்னும், ஒரு நாடு உலகில் முன்னணியில் நிற்க வேண்டுமானால் அந்நாட்டு மக்கள் அறிவிற் சிறந்தாராக

வேண்டும். அறிவு விளக்கத்திற்குக் கல்வி மிகமிக அவசியம். ஆகலின் நம் நாட்டின் சிற்றூர்களிலும் ஒவ்வொரு குடும்பத்திலும் ஆடவர் பெண்டிர் அனைவரும் கல்வியுடையராதல் வேண்டும்.

கம்பநாடர் அயோத்தி நகரச் சிறப்புரைக்குமிடத்து,

*"பெருந்தடங்கட் பிறைநுதலார்க் கெலாம்*
*பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்*
*வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்*
*விருந்து மன்றி விளைவன யாவையே"*

என்று மகளிர் கல்விச் செல்வமும் பொருட் செல்வமுடையராயிருத்தலின், அந்நாடு எவ்வகை யறங்களையுஞ் செவ்விதின் இயற்றி இலங்குகின்றது, என்றுரைத் திருப்பதனை உற்று நோக்கின் பெண்கல்வி எவ்வளவு போற்றற் குரியது என்பது புலனும்.

தற்காலத்தில் நம் நாட்டு மகளிர் ஏதோ ஓரளவு கல்வி பயின்று வருகின்றனர் என்பது மகிழ்ச்சிக்குரியதே. ஆனால் அக் கல்வி அவர்கள் அறிவு உரம் பெறுதற்குதவாமையால், தாம் பெறவேண்டிய நற்பயனை இழத்தலோடு, தீமையும் விளைத்துக் கொண்டு அல்லல் உழக்கின்றனர். ஆகலின் நம் நாட்டில், மகளிர்க்கு, கற்பொழுக்கங்களிற் சிறந்தோராய்க் குடும்பத்தைச் செம்மையாக நடத்தவல்ல விதிநூல்களும், வருவாய்க்குத் தக செலவு செய்தற்கேற்ற அளவை நூல்களும், பத்தினிப் பெண்டிர் வரலாறுகளும், நாட்டு முன்னேற்றம், மொழி வளர்ச்சி இவற்றை யுணர்த்தும் அரிய நூல்களும், சமயநூற் கோட்பாடுகளும், குழந்தைகளை வளர்க்கும் முறைகளும், இல்லங்களையும் ஆடை முதலியவைகளையும் அழகுற அமைத்துக் கோடற்குரிய தொழின் முறைகளும் நன்கு பயிற்றுவிக்கப்படல் வேண்டும்.

குடும்பத் தலைவியராகவும் தாய்மாராகவும் இருக்கத்தக்க நங்கையர்க்கு இத்தகைய கல்வி போதிக்கப் பெற்ருல், அவர் களும், அவர்க்கு உயிரினும் உறுதுணையாய் நிற்றற்குரிய ஆடவரும் இம்மை மறுமை வீடு ஆதிய இன்பங்களை எளி தில் எய்துவர் என்பது ஒருதலை. பெண்டிர் கல்வியறிவுடைய ராயிருப்பின், அவர்கள் கருவினுதிக்கும் மக்களும் கலையறிவு பெற்று விளங்குவர். அளவற்ற வருத்தங்களைப் பொறுத்துச் சீராட்டிப் பாராட்டுஞ் செல்வக் குழவிகட்கு, தம் பாலுடன் கல்வியையும் புகட்டும் பண்பு தாயுடையதே.

ஒவ்வொரு குழந்தையும் முதன் முதல் அன்னையையே அறியும்; பின்னர் தாய் காட்டிக்கொடுக்க ஏனையவற்றை யறியும். தாயின் அன்பு அறக்கருணை எனவும், தந்தையின் அன்பு மறக்கருணை எனவும் படும். இனிய சொல்லும் இன் முகமும் உடைய அன்னை கற்பித்தலையே மக்கள் விரும்புவர். அதனுலன்ருே இற்றைநாள் ஆரம்பப் பள்ளிகளில் நான்கு வகுப்புக்கள்வரை மகளிரை ஆசிரியராக அமர்த்துகின்றனர். இப்படிப் பல்லாற்ருனும் பயன்படுதற்குரிய மகளிர் ஒவ்வொரு வரும் கல்வியைப் பரப்புவதற்கு முன்வரல் வேண்டும்.

இனி, நம் பண்டைத் தமிழகத்திருந்த கலைச் செல்வியர் புலமையும், பெண்மையும் பொலிந்து விளங்கினரா என்று பார்ப்போம். ஏறக்குறைய இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டு கட்கு முன்னர், பலவேறு காலத்திருந்த பல புலவர்பெருமக்க ளால் பாடப்பெற்ற பாமணிகளைத்திரட்டி வைத்திருக்கும் தொகை நூல்களிலும், பெருங் காப்பியங்களிலும், திருமுறை முதலியவற்றிலும் பேசப்படுகின்ற கலையறிவுசான்ற கற்புடை மகளிர் பற்பலராவர்.

கலைமலிந்த புலமையும், கற்பெனுங் கலங்காத் திண்மை யும், ஊழி பெயரினும் உளநடுங்கா வீரமும்பெற்று மிளிர்ந்த

நல்லிசைப்புலமை மெல்லியலார் தம் அருஞ்செயல்களை உன்னுந்தோறும் உள்ளம் உவகையூற்றெடுப்பதாம்.

அருந்தமிழ்மூதாட்டியாகிய ஔவையார், செந்தமிழ் வளந்துறுமச் செய்யுளியற்றும் நுண்ணூலுணர்வும் அரசராயினும் பரிசில் நீட்டிப்பின், அவரை இகழ்ந்துரைக்கும் பெருமிதமும் ஒரு வேந்தனிடமிருந்து மற்றொரு மன்னனிடந் தூதுசென்று சந்துசெய்விக்கும் சொல்வன்மையும், சதுரப்பாடுமுடையவராக விளங்கியவர். இவர் அதியமான் நெடுமான் அஞ்சியிடமிருந்து தொண்டைமான் இளந்திரையனுழைத் தூது சென்றபொழுது அவன் தன் படைக்கலக் கொட்டிலைக் காட்டினனாக,

*" இவ்வேபீலியணிந்து மாலைசூட்டிக் கண்டிரள்*
*நோன்காழ் திருத்தி நெய்யணிந்து கடியுடை வியனக*
*ரவ்வே யவ்வே "*

என அவனைப் புகழ்வதுபோல இகழ்ந்தும்,

*" உண்டாயிற் பதங்கொடுத்து இல்லாயின் உடனுண்ணும்*
*எம் தலைவனுடைய வேல் ",*

*" பகைவர்க்குத்திக்கோடுநுதி சிதைந்து*
*கொற்றுறைக் குற்றில "*

என்று அஞ்சியை இகழ்வதுபோலப் புகழ்ந்துங்கூறித் திரையனுடைய சினத்தையுஞ் செருக்கையும்போக்கி அவனை நாணச் செய்து மீண்டனர் என்றால், அஞ்சாத நெஞ்சமுடைய இவரது அறிவின் பெருக்கம் எத்துணையதென்று அறியற்பாலதோ ?

*" பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட்*
*டீமநுமக்கரிதாகுக தில்ல*
*எமக்கெம் பெருந்தோட் கணவன் மாய்ந்தென*

*அரும்பறவள்ளிதழவிழ்ந்த தாமரை*
*நள்ளிரும் பொய்கையுந் தீயுமோ ரற்றே"*

என்று தம்மைத் தடுத்த புலவரை இடித்துரைத்துத் தங் கணவனுடன் தீயுட்குளித்த பெருங்கோப்பெண்டின் மாசறு கற்பையாதல்; ஊழ்வினைவயத்தாற் கோவலன் கொலையுண்ட செய்திகேட்டு, ஆராத்துயரமும், அடங்காச் சீற்றமும்கொண்டு தென்னவன் தீதினை எடுத்தியம்பி, அரசுடன் மதுரையையும் அழித்து, அல்லும் பகலும் அயர்வுறுது புலம்பி ஈரேழ்நாளில் வானவர் வடிவிற்போந்த கணவனுடன் கூடிய மாபெரும் பத்தினி கண்ணகி நங்கையின் மறக்கற்பின் மாண்பினையாதல்;

தன் கண்மணியனைய காதலன் இராமனுடன் கானகம் போந்து, கடுந்துயருழந்து, இலங்கை வேந்தனுற் சிறை யெடுக்கப்பட்டு அரக்கியர் நாப்பண், புலித்திரள் நடுவணகப் பட்ட மான்பிணையென அருளுருத்தாங்கி, தலைவன் பொருட் டுயிர்தரித்திருந்து அநுமனைக்கண்டஞான்று,

*"அரிய தன்றுநின் ஆற்றலுக் கேற்றதே*
*தெரிய எண்ணினை செய்வதுஞ் செய்தியால்*
*உரிய தன்றென வோர்கின்ற துண்டதென்*
*பெரிய பேதைமைச் சின்மதிப் பெண்மையால்"*

*"அல்லன் மாக்களி லங்கைய தாகுமோ*
*எல்லை நீத்த வுலகங்கள் யாவுமென்*
*சொல்லினுற் சுடுவேன் அது தூயவன்*
*வில்லினுற் றற்கு மாசென்று வீசினேன்"*

என மொழிந்த சீதாபிராட்டியின் ஆறிய இயல்பினையுடைய அறக்கற்பின் சிறப்பினையாதல்ஊன்றி நோக்குமிடத்து, அவை கல்வியும், கற்பும், புலமையும், பெண்மையும் இணைந்து நிற்றலைக் காணலாம். பின்னும் மகளிர்க்கு, தாய் தந்தையரும்

தலைவனும் இன்னின்னார்மாட்டுஇன்னவாறு ஒழுகல்வேண்டும் எனக் கற்பிக்கப்படுதலால் கற்புஎனப்பெயர்பெற்றது என்னுந் தொல்காப்பிய வுரையும், "கற்பன்றே கல்லாமை அன்று" என்னும் ஆன்றோர் திருவாக்கும், கற்பு என்னும் சொல் கல்வி யையும் குறிக்கும் எனத் தெளிவுறுத்தல் காண்க. இவ்வாற் ருனும் கல்வியும் கற்பும் இயைந்து நிற்றல் அறிதற்குரியது.

மற்று, கரையிகந்த வீரமும் கல்வியாற்பெறப்படுவதென்ப தனை,' காக்கை பாடினியார், நச்செள்ளையார், ஒக்கூர்மாசாத்தி யார்' என்ற செந்தமிழ்ப் புலமைச் செல்வியர் பாடிய புறப் பாட்டுக்களானறியலாம். தளர்ந்த நிலையையுடைய முதியோள் ஒருத்தி தன் புதல்வன் போரில் புறங்கொடுத்தனன் எனக் கேள்வியுற்று, அங்ஙனமாயின், அவற்கு ஊட்டிவளர்த்த என் மார்பினை அறுத்தெறிவேன் எனச் சூளுரைத்து வாளுடன் போர்க்களம்புக்குப் பிணங்களைப் புரட்டும்பொழுது, தன் மகன் மார்பிற் புண்பட்டு இறந்து கிடத்தலைக்கண்டு, ஈன்ற ஞான் றினும் பெரிதுவந்தனளாம். என்னே, முதுகுடிப் பெண்டிரின் இயல்பு! உவகைக் கலுழ்ச்சி என்ற துறையில் இச்செய்யுளை யாத்த காக்கை பாடினியாரின் மேதகு புலமையை என்னென் றுரைப்பது! இவர் பெயரால் யாப்பிலக்கணம் ஒன்றிருந்ததாக யாப்பருங்கல விருத்தியானறியப்படுதலால், அந்நூல் செய் தாரும் இவரே போலும்.

மாசாத்தியார், மூதின் முல்லை என்ற துறையில் ஒரு செய்யுளில் "முதனாட் போரில் இவள் தந்தை யானையை யெறிந்து போர்க்களத்திறந்தான். நேற்றைய அமரில் இவள் கொழுநன் மாண்டனன். இன்றும் செருப்பறை கேட்டவுடன் போர் விருப்புக்கொண்டு தன் ஒரே புதல்வற்கு வெள்ளாடை யுடுத்து, எண்ணை நீவி, வேல்கைக்கொடுத்துப் போருக்குப் போய் வா என விடுக்கின்ருள், என்னே இவள் துணிவு. இவள் சிந்தை கெடுவதாக" என வியப்புற்று மொழிகின்ருர்.

மறக்குடிப் பெண்டிரின் இயல்பை இங்ஙனம் தெளித்துரைக்கின்ற இவரும் கல்வியிற்றுறைபோய முதுகுடிப் பெண்டிரோ என்றையமுண்டாகிறது.

தமிழகத்தில் தொன்றுதொட்டு, இறையருளாற்றேன்றிப் புலமை வீறுடன் திகழ்ந்து ஒளி நிறுவிச்சென்ற பெண் மக்களில் இலக்கியங்களை ஆக்கியோராயும், இலக்கியங்களிற் பேசப் படுவோருமாகிய மகளிர் பலருள் சங்க இலக்கியத்திற் காண்போருள் ஒருவரும், சைவத் திருமுறையில் உள்ளார் ஒருவரும், வைணவத் திருமுறையில் உள்ளார் ஒருவரும் ஆகிய ஆதிமந்தியார், புனிதவதியார், கோதையார் என்பவர்கள் வரலாற்றை இனி, முறையே காண்போமாக.

# ஆதிமந்தியார்.

## நாட்டியல்பு.

இந்நில வுலகில், வடக்கே வேங்கடமும், தெற்கே குமரியும், கிழக்கும் மேற்கும் கடலும் எல்லையாகவுடைய பெருநிலப் பரப்புப் பண்டை நாளில் 'தமிழகம்' என வழங்கப்பெற்று வந்தது. சேர சோழபாண்டியர் என்னும் தமிழரசர் மூவராலும் ஆட்சிபுரியப்பெற்ற இப்பகுதியை 'வண்புகழ் மூவர் தண் பொழில் வரைப்பு' எனச்சிறப்பித்தோதுவர்.

தமிழகம், சேரநாடு, சோழநாடு, பாண்டி நாடு என மூன்றுபெரும் பிரிவினை யுடையது. அவற்றுள் சோணாடு நிலமகட்கு நெற்றியிலிட்ட திலகமெனப்பொலியுஞ் சிறப்புடையது. அகத்தியமுனிவரின் கமண்டலத்தினின்றும் பொழியப்பெற்ற தெய்வப்பொன்னியின் நன்னீராற் செழிப்புற்றோங்குவது. அன்பு கசிந்துருகும் அன்னையைப்போல் உலகு புரந்தூட்டும் காவிரிப்பேரியாற்றை, 'சோழர்குலக்கொடி' 'கோனிலைதிரிந்து கோடைநீடினும் தானிலை திரியாத்தண் டமிழ்ப்பாவை' எனப்பாராட்டுவர். 'மண்மகள் மார்பிலணிந்த முத்துவடமெனத்திகழுந் திருநதி 'வான்பொய்ப்பினுந்தான் பொய்யாவளஞ் சுரக்குந்தன்மையை' நோக்குமிடத்து உலகம் யாவையும் ஈன்றளிக்கும் உமையம்மையின் அருட்பெருக்கு ஈண்டு ஒருங்கு வந்துற்றது கொல் என்று உள்ளம் உவகை யெய்தும்.

காவிரிநதி பாய்தலால் வளங்கெழுமிய நிலங்கள், நூலோர் கூறும் மருதநிலக்கருவளங்கள் அனைத்துமுடையன

வாய்க்காண்போருள்ளத்தைக் கொள்ளைகொள்ளும். யாண்டு நோக்கினும், தெங்கும் கமுகும், மாவும் பலாவும், கதலியுங் கரும்பும், நெல்லுநீரும் பொலிவுற்று விளங்குதலான் இந் நாட்டினை 'வளநாடு' எனவும், இதனையாண்ட அரசர்களை வளவர் எனவும் கூறுவர். மற்றும், அருந்தமிழ்வல்ல ஆன்றோர் பலரும் 'சோழவளநாடு சோறுடைத்து' 'வேலி யாயிரம் விளையுட்டாகும்' 'நாடெல்லாம் நீர்நாடுதனை யொவ்வா' எனப்போற்றுவாராயினர்.

## சோழவரசர் பெருமை.

இத்தகைய புனல் நாட்டை அறநெறி திறம்பாது அரசு புரிந்த அரசர்க்கரசர் பெருமை எடுத்துரைக்கும் தரத்ததன்று. 'மனு' எனப்பெயர்பெற்ற மன்னவன், தன்மைந்தன் ஊர்ந்து சென்ற தேர்க்காலிற் பட்டிறந்த ஆன்கன்றின் பொருட்டு, தன்குடிக்கு ஒருவனே உளன் என்பதனையும் கருதாமல் அவனை வீதியிற் கிடத்தி, அவன்மீது தானே தேரைச் செலுத்தி முறைசெய்தான். இவ்வரலாற்றினை, சேக்கிழார் பெருமான் தெய்வமணங்கமழும் செய்யுட்களால் சித்திரித்துள்ளார். 'சிபி' என்னும் செம்பியன், தன்னிடம் அடைக்கலம் புகுந்த குறுநடைப்புறவினைக் காத்தற்பொருட்டு, அதனைப் பற்றுதற்கு வந்த பருந்து மகிழ, தன் உடல்தசைகளை யெல்லாம் அரிந்துவைத்துத் தானும் துலையில் ஏறி புகழெய்தினன். இவ்வாறு, உலகமுள்ளளவும் நிலைபெறத்தக்க புகழெய்திய அரசர் பலராவர்.

தொகைநூல்கள் முதல் பிற்காலத்தெழுந்த உலாக்கள் இறுதியாகவுள்ள நூல்கள் அனைத்திலும் சோழர் மரபின் பெருமை ஆன்றோர் பலராலும் சிறப்பிக்கப்பெற்றுளது.

## தந்தையார் பெருமை

இம்மரபினருள் கரிகாற்பெருவளத்தான் மிக்க சீருஞ் சிறப்புமெய்தி தன் ஆணையை நாற்றிசையும் நிறுவிய வென்றி வேந்தனவன். இவனது வரலாறு கேட்போர்க்கு மிகவும் வியப்பினை விளைப்பதாகும். இவ்வரசர் பெருந்தகை, தாய் வயிற்றிலிருந்து பிறந்த பொழுதே தாயமெய்திப்பிறந்தவன் என்றும், இளைஞய் வேற்றூரிலிருந்தபொழுது களிற்றினல் எடுத்துவரப்பெற்று பட்டமெய்தினன் என்றும், சிறைப்பட்டிருந்தகாலத்தே எரியாற்கொளுவப்பட்டு, கால்கரிந்தமையின் 'கரிகாலன்' எனபெயர்பெற்றனன் எனவும் கூறுவர்.

இம்மன்னர் பெருமானிடத்து நீதிபெறவேண்டி வந்த இருபெருமுதுமக்கள் இவன் இளமைப்பருவத்தைக்கண்டு இவ் விளைஞன் எங்ஙனம் முறைசெய்ய வல்லன் என்றிகழ்ந்தனர். அதனையுணர்ந்த வளவர்கோன் அவர் உவக்கும்வண்ணம் நரை முடித்துவந்து, முதியோனைப்போல் இருந்து நீதிவழங்கினன். இச்செய்தி பழமொழியிலும் மணிமேகலையிலும் மிக அழகாகக் கூறப்பெற்றிருக்கின்றது.

இனி, இவன் வீரச்செயல்களை, பொருநராற்றுப்படை பட்டினப்பாலை, அகம், புறம் முதலான நூல்களில் பரக்கக் காணலாம். இளமைப்பருவத்தே, வெண்ணிப் பறந்தலையில், இருபெருவேந்தரையும், பதினொருவேளிரையும் போரில் வென்று புறங்கண்டனன். வாகைப்பறந்தலையில் ஒன்பது மன்னரை ஒரு பகலில் ஒழித்தனன். இம்மட்டோ! இமயம் வரை சென்று, தன்னெடு எதிர்ப்பார் ஆங்கு ஒருவருமின்மையால் தம் வன்றிறற்புலிப்பொறியை அம்மால்வரை மீது பொறித்து மீண்டனன்.

இவ்வளவர் ஏறு நாட்டிற்குச்செய்த நன்மைகள் அளவற்றனவாம். அவற்றுட் சிலவருமாறு :— காவிரிப்பேரியாற்றிற்குக்கரைகண்டனன்; நீர்நிலைகளைப்பெருக்கிச் சிற்று

றுகள் பலவும் வெட்டுவித்தனன்; காடுகளையழித்து நாடாக்கினன்; தலைநகரங்களைத்திருத்தியமைத்தனன்; கோயில்களில் விழவும் பூசனையும் ஏற்படுத்தினன். இவ்வாறு நாட்டைவளம்படுத்தியநலன் நோக்கியேஇவனை 'கரிகால்வளவன்'; 'கரிகாற்பெருவளத்தான்; 'திருமாவளவன்' எனவழங்கினர் போலும்.

இம்மன்னவன், நாங்கூர் வேளிடைமகட்கொண்டான் என்பர். இரும்பிடர்த்தலையார் என்னும் புலவர்பெருமானுர் இவனுக்கு அம்மானுவர். இவர் கரிகாலன் அரசியலைத்திறம்பட நடத்துதற்குத் துணைபுரிந்தவர்.

திருமாவளவன் பண்டொருகால் கோழி யானையைப்போரில் புறங்கண்டமையால் 'கோழி' என்னும் பெயரையுடையதும் "ஊரெனப்படுவது உறையூர்'' என்று சிறப்பித்து உரைக்கப்படுவதுமாகிய உறையூரைத் தலைநகராகக்கொண்டு அரசுபுரிந்தவன். காவிரிப்பூம்பட்டினமும் இவனுக்குத் தலைநகராக விளங்கிற்று. கச்சித்திருப்பதி இவன்காலத்தில் நன்கு திருத்தியமைக்கப்பெற்றது. அழுந்தூர், இடையாறு, கழார் என்னும் பதிகளையும் இவன் வளம்படுத்தியிருப்பான் என்பது அகநானூறு முதலியவற்ருல் விளங்குகிறது.

"கோயிலொடு குடிநிறீஇ" என்னும் பட்டினப்பாலை அடிகளால் இவன் திருக்கோயில்கள் பல எடுப்பித்தனன் என்பது தெளிவாகின்றது. இவ்வரசனது நீதி, புகழ், அரசியற்றிறம், வென்றிமேம்பாடு, வள்ளன்மை என்பன இவன் மேற் பாடப்பெற்ற பொருநராற்றுப்படை, பட்டினப்பாலை, ஆகிய நூற்களாலும் அகநானூறு, புறநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை, பழமொழி என்பனவற்ருலும் மிக அழகாகக் கூறப்பெற்றுள்ளன. இவற்றுள், பட்டினப்பாலை என்பது கடியலூர் உருத்திரங்கண்ணனுர் என்னும் புலவர்பெருமானுல் இவ்வரசர் பெருந்தகைமீது பாடப்பெற்ற அரியநூலாகும். பட்டினப்

பாலை பாடிய புலவர் தலைவருக்கு இவ்வளவர் தோன்றல் பதினாறு நூறாயிரம்பொன் பரிசிலாகத்தந்து சிறப்பித்தனன் என்றால், தமிழ்ப்புலவர் மாட்டு இவனுக்கிருந்த பெருமதிப்பும் தண்டமிழன்னையிடத்துள்ள பேரன்பும் எத்தகைய வெனக் கூறல் யாங்ஙனம் கூடும் ?

இற்றைஞான்று நம்மனோர் காண இயலாவாறு பெருந்திரைக்கடலுளாழ்ந்த செம்பியர் தலைநகரத்தின் இயலையும், எழிலையும், தமிழர் நாகரிகத்தையும், பண்பாட்டையும், வாணிகத் துறைமுதலிய பிறவற்றையும் நன்கு அறிந்து கோடற்குச் சிறந்த கருவியாகவிருப்பது இவ்வேந்தன் மீது பாடப்பெற்ற பட்டினப்பாலையேயாகும்.

நல்லிசைப் புலமைவாய்ந்த புவிவேந்தராய இவர்க்கு, மக்களும் ஒக்கலும் கவிவேந்தராய் விளங்கினர்.

" தக்கார் தகவிலரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப்படும் "

என்பது பொருளுரையன்றே ?

## ஆதிமந்தியார் பிறப்பு

கரிகாற் பெருவளத்தானுடைய அருந்தவப்பயனாலும் தமிழன்னையின் தண்ணருளாலும் கோள்களெல்லாம் நன்னிலையிலுள்ளதொரு நன்னாளில் சோழர் திருக்குலம் விளங்க அவற்கு ஓர் பெண்மகவு பிறந்தது. அக்குழந்தை உருவில் திருவையொத்து 'இலங்குஎழில் அளவுகுணன்' என்பதற்கிலக்காய்த் திகழ்ந்தது, வளவர்பெருமான் அம்மகவிற்கு உரிய பருவங்களில் அரிய சிறப்புக்களைச் செய்து, ஆதிமந்தியார் எனத் திருப்பெயரிட்டு மிகுந்த மகிழ்ச்சியுடன் வளர்த்து வந்தனன்.

## கல்வித்திறம்

சோழப்பேரரசின் அரும்பெறற் புதல்வியாய்த் தோன்றிய ஆதிமந்தியார் புலத்துறைமுற்றிய சான்றோர்களாற் கல்வி பயில்விக்கப்பெற்று புலமைநிரம்பியவராய் விளங்கினர். பண்டைக்காலத்திருந்தே நம் தண்டமிழ் ஆன்றோர் பலரும், பன்மையும் சிறப்பும் நோக்கி 'மகனுரைக்கும் தந்தைநலத்தை, மகனறிவு தந்தையறிவு என ஆண்பாற் படுத்துக்கூறி யிருப்பினும், அவை பெண்பாற்கும் அமையும் என்பதற்கு எடுத்துக் காட்டாக நம் இளவரசியார், அரசியற்றிறம், கல்வியாதியவற்றுள் தந்தையாரின் பண்புகள் யாவும் ஒருங்கமையப் பெற்று விளங்கினர்.

அரசர் மரபுக்கேற்ப போர்த்தொழிற் பயிற்சியும் புலமையும் நிரம்பிய நங்கையார், மகிழ்ச்சியுடன் பொழுதுபோக்குதற்குரிய ஆடல் பாடல் ஆதிய கலைகளிலும் வல்லுநராய், கற்பிலும் பொற்பிலுஞ் சிறந்தது கலை நிரம்பிய மதியென மிளிர்ந்தனர்.

## திருமணம்

இங்ஙனம் அனைத்து நலனுஞ் சிறக்கப்பெற்ற இவர், கைவல்கம்மியனால் அருமணியிட்டிழைக்கப் பெற்று கண்கவர் வனப்புடன் மிளிர்வதொரு பொன்மலர் இயற்கையில் நறுமணமும் பெற்றிருப்பின் அது பலராலும் பாராட்டப்பெறுதல் போல அனைவராலும் புகழப்பெற்ற திருமணப்பருவ மெய்தி விளங்கினர். தம் அருமைப்புதல்வியின் வளர்ச்சிகண்டுவந்த வளவர்கோன் : நங்கைக்கு ஏற்ற நம்பியை நாடுவானாயினன். உலகில் ஒரு பெண்ணுக்கேற்ற ஆடவனையும் ஆடவனுக்குத் தகுந்த பெண்ணையும் தேடுவோர், முதற்கண், பிறப்பு, குடிமை, ஆண்மை, ஆண்டு, உரு, திரு, முதலியனவெல்லாம் ஒத்திருக்கின்றனவா என ஆராய்ந்தறிதல்வேண்டும் என்பர்.

இன்னணம் பல்லாற்ருனும் ஒப்புடையதலை மக்களது தூய நல்லற வாழ்க்கையே இல்லறமெனப்படும். இவையாவும் நன் குணர்ந்த கரிகால் வேந்தன் மேலே கூறப்பட்ட நலன்கள் அனைத்தும் குறைவறப் பெற்ருேனும் ஆடல்பாடல்களிலுஞ் சிறந்து விளங்கிய சேர மன்னவன் ஆட்டனத்தி என்பானைத் தன் அரும்பெறற்புதல்விக்குரிய மணமகனுகத் தெரிந்தெடுத் தான். இருவர்க்கும் மிகச் சிறப்பாகத் திருமணம் நிகழ்ந்தது. ஒப்பாரும் மிக்காரும் இலராய ஆதிமந்தியும், ஆட்டனத்தியும் வளவர் பெருமானுடைய சீருஞ்சிறப்பும்பெற்று அனைவர் வாழ்த்துடனும் இல்லறம் நடாத்தத் தொடங்கினர்.

பூவும் மணமும் எனப் பொலிவுற்று இல்லறத்தார்க்குக் கூறிய அறங்களைச் சிறப்புடன் இயற்றி வந்தனர். கற்புடை மகளிருக்குக் கணவனே தெய்வம் என்ற சீரிய கொள்கையை யுடைய ஆதிமந்தியார்வாழ்க்கையில் நடந்ததொரு நிகழ்ச்சியே அவர் வரலாற்றை நமக்கு அறிவுறுத்தும் பகுதியாக நூல்களிற் காணப்படுகின்றது.

## நீர் விளையாட்டு.

சோழ நாட்டில் காவிரிக்கரையிலுள்ள ஊர்கள் பலவுள. அவற்றுள் கழார் என்னும் திருப்பதி கரிகாலனுல் சீர்திருத்தப் பெற்ற அழகிய காவிரி முன்றுறையை யுடையது. பல்வளங் களும் செறிந்த அத்திருப்பதியிலே தெய்வப்பொன்னியின் கரையில் தம் அருமைத் தந்தையார், சுற்றமும் சேனையுஞ்சூழ விருந்துகண்டு மகிழ ஆதிமந்தியார் தன் அன்புக்குரியதலைவன் அத்தியுடன் புனல்விழாக் கொண்டாடினர்.

நீர்விழாவென்பது பண்டைக்காலத்தில் யாறுகளில் புதுப் புனல் வரும்பொழுது, மகளிரும் மைந்தரும் மிகுந்த மகிழ்ச்சி யோடு மாலை, சாந்தம் ஆகிய நுகர் பொருள் பலவுங்கொண்டு

தத்தமக்கேற்ற ஊர்திமுதலியவைகளிற்சென்று நீர்த்துறையிற் கூடி தாம் பயின்றவாறெல்லாம் நீராடி பலவாறு கொண்டாடு வதாம்.

இத்தகைய புனல்விழா, தமிழ்நாட்டில் மிகச்சிறப்பாக நிகழ்ந்தன என்பது பரிபாடலில் வையையைப்பற்றி வரும் பாடல்களில் மிக அழகாகக் கூறப்பெற்றுளது. சிலப்பதிகாரத் துக்கடலாடு காதையால், நிறைமதி நாளில் கடலாடும் வழக்கம் பெறப்படுகின்றது. புகார் நகரில் காவிரி கடலொடு கலக்கும் புண்ணியத்துறையிலே, இந்திரவிழா முடிந்த பிற்றைநாளில் அரசருள்ளிட்ட அனைவரும் சென்று கடலாடுவர் என்பதும் விளக்கப்பட்டிருக்கின்றது.

அங்ஙனம் கடலாடச் செல்லுந்தோற்றமும் ஆரவாரமும் மிக்க புகழுடைய கரிகால் வளவன் புனல்விழாக் கொண்டாடும் தலைநாளிற்போன்றிருந்தனவென்று ஆசிரியர் இளங்கோ வடிகள் எழில்பெற இயம்பியுள்ளார். இங்ஙனம் நாட்டிலுள் ளார் அனைவரும் கூடிப் புனல் விழாவயர்தலேயன்றிப் பெருங் காப்பியங்களிற் பேசப்படும் தன்னிகரில்லாத் தலைவன் முத லாயோர், திருமணத்தின் பின்னர், பொழில் நுகர்தல், புனல் விளையாடல் ஆதியவற்றால் இன்புறுவர் என்பதும் தமிழ் நூல் களால் அறியக்கிடக்கின்றது.

இங்ஙனம் தமிழ் மக்களால் பெரிதும் விரும்பப்பட்டுவந்த புனல் விளையாடலை ஆதிமந்தியார் தம் அருமைக்காதலனுடன் அகமகிழ்ந்தாடினர்.

## காவிரி அத்தியைக் கரந்து சென்றமை.

ஆடுதற்றொழிலில் வல்லனுதல்பற்றி ஆட்டன் என்னும் சிறப்புப் பெயர்பெற்ற அத்தி 'கழல் புரளக் கச்சின்

மணியொலிப்பப் புனல் நயந்தாடும் அழகினை விரும்பிய காவிரி நங்கை அவனை வௌவிக்கொண்டு விரைந்து சென்றனள்.

" இன்பமுண்டேல் துன்பமுண்டு ஏழை மனைவாழ்க்கை " என்பது ஆன்ரோர் அமுதமொழியன்றோ? தந்தையும் ஒக்கலும் காணத் தலைவனுடன் புனன்மகிழ்ந்தாடிய பெண்ணணங்கின் எல்லையற்ற இன்பம் துன்பமாய் மாறியது.

## ஆதிமந்திபேதுற்று அத்தியைக் கண்டுபிடித்தல்

காதலன் காவிரி நீரிற்கரந்து சென்றமைகண்டு நெருப் பிடைப்பட்ட புழுவெனத் துடித்தார். ஐயகோவென அலறி ஏங்கினர். தலையாய அன்புடையார் தலைவனைப்பிரிந்து உயிர் வாழ ஒருப்படுவரோ? உளங்கலங்கி உறுதுயர்க் கடலு ளாழ்ந்த கற்புடை நங்கை கணவனை யீர்த்துச்சென்ற காவிரி யின்வழியே ஓடி அவனை மீளக்கொண்டு வாராமல் மீளேன் என உறுதி மொழிந்தார். "முயற்சி திருவினையாக்கும்" என் பதற்கிணங்க அவ்வழியே ஓடினர்.

அத்தியைக் காவிரி களவாடிச் சென்றமையால் கடலுட் கொண்டு ஒளித்தது. எல்லியும் எல்லும் இடைவிடாமல் கொழுநனைப் பின்தொடர்ந்தோடிய கோதை கடற்கரையை அண்மி மலைபோலும் தோள்களையுடைய எம் தலைவர் ஈங்கிருக் கின்றனையோ எனக் கூவினர். அவ்வளவில் கடல் அவனை முன்கொணர்ந்து நிறுத்தியது. பொற்கொடி போல்வாரும் அகமகிழ்ந்து அவனைத் தழுவிக்கொண்டு போந்தார்.

## கற்பு மேம்பாடு.

கற்பிற்சிறந்த பொற்றொடியார் தாம் எண்ணிய எண்ணி யாங்கு எய்துவர் என்பதும், அவர் கருத்தின்வழி விண்முதற்

பூதங்களெல்லாம் ஏவல்புரியும் என்பதும் திருமாவளவன் தெய்வப் புதல்வியாரால் தெரிய வருகின்றதல்லவா?

இவ்வரிய வரலாறு அகநானூறு, குறுந்தொகை, சிலப்பதிகாரம், பட்டினத்தடிகள் புராணம் ஆகியவற்றிற் காணப்படுகின்றது.

## வரலாற்று ஆராய்ச்சி—காலமும், இடமும்.

இவர் சோழன் கரிகாற்பெருவளத்தான் புதல்வியாகலான், அவனுடைய காலமாக ஆராய்ச்சியாளர்களால் தெளியப்பட்ட கி. பி. முதல் நூற்ருண்டில் இருந்தாராகல் வேண்டும். இலங்கைக் கயவாகுமன்னன் காலமென வரையறுக்கப்பட்ட இரண்டாம் நூற்ருண்டில் யாக்கப்பெற்ற சிலப்பதிகாரம், மணிமேகலை என்பனவற்றுள் இவன் அரசியல் நிகழ்ச்சிக் கூறப்படாமல் அவன்வழிவந்த சோழர்களைக் குறிப்பிடுமாற்ருல் இவர் காலம் தேற்றமாம்.

மற்றும் இவர் சோழப் பேரரசின் அருமைப் புதல்வியாய் சேர மன்னவனை மணந்தவராகலின், இவர் வாழ்ந்திருந்த நாடு இளமைப் பருவத்தில் சோணுடும், பின்னர் சேரநாடும் என்றும் கொள்ளலாம். ஆனுல் இவர் சேரநாட்டில் வதிந்தமைக்குச் சான்று ஒன்றும் கிடைத்திலது.

பல்வேறு காலத்திருந்த பல்வேறு புலவர் பெருமக்களால் பாராட்டப்பெற்றிருக்கின்ற இவ்வரலாற்றை அந்நூல்களிற் காணுமாறு முறையே ஆராய்வோம்.

வெள்ளி வீதியார் என்னும் நல்லிசைப் புலமை மெல்லியலார் பாலைத் திணைக்குரிய அகப்பாட்டொன்றில், காதலற் கெடுத்த சிறுமையால் வருத்தமிக்க ஆதிமந்தியைப்போல அலக்கணுற்று தேடித்திரிவேனே? எனத் தலைவிக் கூற்ருக

வைத்து, ஆதிமந்தி கணவனைப்பிரிந்து அலக்கணுற்ற செய்தியைமட்டும் தெரியவைத்தனர்.

தோலா நல்லிசை மேலோராகிய பரணர் என்னும் புலவர் பெருமான் அகம். 222-ல் தலைவனுடன் புனல்விழா வயர்ந்த துறையையும், அங்கே அத்தியின் எழில்மிக்க நலனைவிரும்பிய காவிரி நங்கை தன் நீரில் அவனைக் கரந்து சென்றமையையும் அதுகண்டு இடருழந்து திசையனைத்துந்தேடிக் கடலையடைந்த காதலிக்குக் கடலிற்புக்கு அத்தியையழைத்துவந்து காட்டிய மருதி எனப்பெயரிய நங்கையின்பாடல்சால் சிறப்புடைய புகழையும் மிக அழகாக விரித்துரைத்தனர்.

மருதி என்பாள் ஆதிமந்தி கொழுநற்றேடிக் கடலிற் சென்ற ஞான்று ஆண்டு நீராடிக்கொண்டிருந்த மகளிருள் ஒருத்தியாவள். இவள் ஆதியின் எல்லையற்ற இன்னலைக் கண்டு உருக்கமுற்ற உள்ளத்தனளாய்த் தன் உயிரையும் பொருட்படுத்தாமல் கடலுட்புக்குத் தேடியவள்,

கடல் கொணர்ந்துவிட்ட கணவனை அவர்பாற் சேர்த்து தன்னுயிர் நீத்த செப்பரும்பெருமையுடையவள். பரணர் பின்னும் மருதத்திணைக்குரிய நான்குபாக்களில் இடம் நேர்ந்துழியெல்லாம் அகப்பொருட்குரியார் சிலர் கூற்ருக இவ்வரலாற்றினை யெடுத்துரைத்தலால் இவ்வம்மையிடத்தில் இவருக்கிருக்கும் பெருமதிப்பும், கற்பின்பொற்பு மிளிர்கின்ற இந்நிகழ்ச்சியின் உண்மையும் புலனுதல் காண்க. மற்றும் இவர், கரிகால் வளவன் சுற்றத்தினருடன் இனிதிருந்துகாண மந்தியார் புனலாடினர் என்பதையும் ஆட்டனத்தி இயற்கையெழிலும், திண்டிறலும், கழல்புனைந்து கச்சியாத்து முழவொலியும் தாளவமைப்பும் கெடாதவாறு ஆடும் தொழில்வன்மையும் உடையவன் என்பதையும், காவிரிநீத்தத்திற் கணவன் மறைந்தவுடன் அவர் நாடுதோறும் ஊர்தோறுஞ் சென்று தேடி

ஏம் தலைவனைப் புனல் ஒளித்ததுபோலும், கடல் ஒளித்தது போலும் எனக் கரைந்துருகியதையும் விடாமுயற்சியினால் அவனை மீளக்கண்டு மகிழ்ந்தனர் என்பதையும் நன்குவிளக்கி யிருக்கின்றார்.

காவிரிப்பேரியாற்றை அத்தியின் அழகிலீடுபட்டு அவனை வெளவிக்கொண்டு செல்லும் நங்கையாக உருவகிக்கும் திறம் வியத்தற்குரியது.

இனி இவ்வரலாற்றின் அகச்சான்றாக ஆதிமந்தியாரே பாடிய குறுந்தொகைச் செய்யுள் ஒன்று காணப்படுகின்றது. அப்பாவின் பொருள் :— மாட்சிமை பொருந்திய தகுதியுடைய எம் தலைவனை வீரர் குழுமியுள்ளசேரி விழாவின் கண்ணும், மகளிர் தம்முள் தழுவியாடுகின்ற துணங்கைக் கூத்தின்கணும் ஆகிய எவ்விடத்துங்காணேன். யானும் ஆடுகின்ற களத்தி லுள்ள ஒருமகளே, என் கையில் விளங்குகின்ற வளையலை நெகிழச்செய்த பெருமைமிக்க குரிசிலும் ஆடுகளத்திற்குரிய ஒருவனே, என்பது. இப்பாட்டு, பெயர் சுட்டிக்கூறப்படாமை யான் அகமாயிற்று எனினும், காதலற்கெடுத்த ஆதிமந்தியார் தங்கொழுநனைத் தேடியலைந்து யாண்டுங்காணேன் எனக் கையற்று மொழிதலால், அவர் தமதுவாழ்வின் நிகழ்ச்சியையே கூறியதாகல்வேண்டும்.

மற்றும் அவர் கணவனை நாடி அலைந்து திரிகின்ற அக் காலத்திலேயே புலமைச்செல்வம் நிரம்பியவராகலின் வருத்த மிகுதியால் அவர் வாயினின்றும் வெளிப்பட்ட சொற்றொடரே இவ்வரும் பெறற்பாவெனினும் அமையும்.

கற்றுத்துறைபோகிய பொற்றொடிமகளிர், தமக்கு எய்தற் கரிய இடர்வந்துற்றபொழுதும் புலமை ஒளிவீசும் செந்தமிழ்ப் பாக்களால் தம் இன்னலை எடுத்துரைப்பர் என்பது தெளிவா கின்றது.

5

பூதப்பாண்டியன் தேவியாகிய பெருங்கோப்பெண்டு, தன் தலைவனுடன் தீப்பாயச் செல்லுமிடத்துப் புலவர் பலர் தடுத்தனர். அப்பொழுது, அவர் புலவர்களை விளித்து, கணவனை யிழந்து கைம்மைநோன்பியற்றும் உயவற்பெண்டிர் யாமல்லேம், புறங்காட்டுப் பண்ணியஈமம் நுமக்கு அரிதாகுக, எமக்கு எம் தலைவனிறந்த பின்னர் ஈமத்தீயும், தாமரைப்பொய்கையும் ஒரு தன்மைய என ஒரு பாவான் மொழிந்து தீயுட்குளித்தார்.

இன்னணம் வாய்ப்புழியெல்லாம் செந்தமிழ்த் தீஞ்சுவை கெழுமிய பாக்களையாத்து நம்மனோர்க்கு எய்ப்பினில் வைப்பாக்கிய பெண்பாற்புலவர் பலர் இலக்கியங்களிற் காணப்படுகின்றனர்.

இனி ஆதிமந்தியார் தம்பாவில் மைந்தர்க்கு விழவும், மகளிர்க்குத் துணங்கையும் ஆகிய இரண்டையும் விதந்தோதினர். இவற்றுள் விழாவென்பது திருவிழாக்காலங்களில் வீரர் பலர் சேர்ந்து சேரியின்கண் விளையாட்டுப்போர் நிகழ்த்தி மகிழ்வது. துணங்கை, மகளிர்பலர் குழுமிக்கைபிணைந்தாடும் ஒருவகைக்கூத்து. இதனை மகளிர் துணங்கை என்பர்.

வீரர் ஆடும் துணங்கை, பேய்களாடும் துணங்கை என்பனவற்றின் வேறு பிரித்தற்கு இங்ஙனங் கூறுவர். மங்கையர் தம்முள் தழுவித்துணங்கை யாடும்பொழுது ஆடவர் அவர்க்குத் தலைக்கை தருதலும் உண்டு.

> "மெல்லிணர்க்கண்ணி மிலைந்தமைந்தர்
> எல்வளை மகளிர்தலைக்கை தரூஉந்து" என

வரும் புறப்பாட்டடிகள் முதலியவற்றுன் விளங்கும். "மென்றோட்பல்பிணை தழீஇத்தலைத்தந்து குன்று தோருடலும் நின்றதன் பண்பே" எனவரும் திருமுருகாற்றுப்படையடிகளும்

இதனை வலியுறுத்தல் காண்க. இவ்வாறு துணங்கையாடிய மெல்லியல் ஒருத்தி தனக்குத்தலைக்கைதந்த வீரனையே தலைவனாகப்பெறுவாள். யானும் ஓர் ஆடுகளமகள், என் தலைவனும் ஓர் ஆடுகளமகன் என, தான் துணங்கையாடியதனையும், அதற்கு ஓர் வீரன் முதற்கைகொடுத்தான் என்பதனையும், அவனே தன்னை வரைதற்குரியவன் என்பதனையும் புலப்படுத்தி ஒரு தலைமகள் அறத்தொடு நின்றதாக "மள்ளர்குழீஇய" என்னும், இப்பா மொழியப்பெற்றதென்பர். அகத்துறைபற்றி இச்செய்யுளெழுந்தது எனக்கொள்ளினும், ஆதிமந்தியார் தாமே பாடியதால் இதன் கண் அவரது வாழ்வின் நிகழ்ச்சியே புலப்படுதலின் இதுவே நம்மனோர்க்கு அகச்சான்ருக விளங்கா நிற்கின்றது.

விழவு, துணங்கை என்பன எங்ஙனம் நிகழும் என்பது மதுரைக்காஞ்சி முதலிய தமிழ்நூல்களில் நன்கு கூறப்பட்டிருக்கின்றது. நல்லிசைப்புலமை மெல்லியலாராகிய இவர் சோணாட்டிற் பிறந்த கற்புமிக்க மகளிருள் ஒருவராவர்.

முத்தமிழ்ப்புலமையும் வித்தகக்கவித்திறலுமுடைய ஆசிரியர் இளங்கோவடிகள் கடவுட் கற்பினையுடைய மாபெரும் பத்தினியாயகண்ணகிநல்லாள் தந்நாட்டிற்றோன்றிய இவருள்ளிட்டஎழுவர் பத்தினிப்பெண்டிர் பெருமையை எடுத்துரைத்து, அத்தூயவர் பிறந்த பதியிற்றோன்றிய யானும் ஓர் பத்தினியாகில், அரசுடன் மதுரையையும் அழிப்பேன் என வஞ்சினமொழிந்ததாக எடுத்துரைக்குந்திறம் கற்பார்க்குக் கழிபேருவகை தருவதாகும்.

தமிழ்வேந்தர்களாலும், இலங்கை முதலிய பிற நாடுகளிலுள்ள பிறமன்னர்களாலும் கோயிலமைத்து வழிபடப்பெற்ற பெருமை சான்ற பத்தினித்தெய்வமாய கண்ணகி நங்கையே, வளவன் மகளாரை இங்ஙனம் புகழ்ந்துரைத்தனள் என்ருல்

இவர் தம் கற்பின் சிறப்பை எம்போல்வார் எடுத்துக்கூற எங்ஙனம் இயலும். இன்னும் இவரது பெருமை பட்டினத்தடிகள் புராணத்திலுள்ள பூம்புகார்ச் சருக்கத்திலும் கூறப்பெற்றுளது. இனி இவர் வரலாற்றினை அமைத்துப் பாடிய புலவர்களுள், வெள்ளிவீதியார் என்பவர் வரலாறும் தமிழ்மக்கள் நன்கறியவேண்டுவ தொன்றாகலின் அதனையும் ஈண்டுரைப்பாம்.

வெள்ளிவீதியாரும் இவரைப்போலவே அரச குடும்பத்திற் பிறந்து கல்வியறிவான் மிகமேம்பட்டு விளங்கியவராவர். இங்ஙனமே தம் ஆருயிர்த்தலைவனையிழந்து அலமந்து கற்புக்கடன் ஆற்றியவர். இவரியற்றிய அகப்பாட்டில்

"காதலற் கெடுத்த சிறுமையொடு நோய்கூர்ந்து
ஆதிமந்தி போலப் பேதுற்று
அலந்தனென் உழல்வென் கொல்லோ"

என்று ஆதிமந்தியைப் போலத்தானும் தலைவனையிழந்து தேடி உழந்தமையைத் தெரிவித்தலானும், குறுந்தொகை 27-ம் பாவில் ஆவின் தீம்பால் கன்றுக்கும் உதவாது கலத்தினும் படாது நிலத்திற் கொட்டியவாறுபோல தன் இளமையும் எழிலும் தனக்கும் உதவாது தலைவற்கும் பயன்படாமல் பசலைக்கு இரையாகின்றது என இரங்கி மொழிதலானும், 130 பாவில் தான் விரும்பிய தலைவன், நிலத்தின் கீழும் வானத்தின் மேலும் கடலின் நீரிலும் சென்றானில்லை. ஆதலின் அவனை நாடுதொறும், ஊர்தொறும், குடிதொறும், தேடி அகப்படாதொழிவனோ என்று கூறுதலானும், காதலற்கெடுத்துத்தேடிய இவர்வரலாறு நன்கு விளங்குகின்றது.

பின்னும் இதனைவலியுறுத்த இவரியற்றிய பாக்கள்பலவற்றில் பிரிவே கூறப்படுதலும் நோக்கத்தக்கது. இச்செய்யுட்கள்

அனைத்திலும் பெயர்சுட்டிக் கூறப்படாமையின் அவை அகத்திணைக்குரியவாயின.

அருந்தமிழ் மூதாட்டியாராகிய ஒளவையார் அகநானூற்றிலே தலைவன் செலவுணர்ந்த தலைமகள்கூற்றாக வெள்ளிவீதியாரை எடுத்துரைக்கின்றார். அது கவர்த்த நெறிகளையுடைய செறிந்தகாட்டிலே கணவனைத் தேடிச்சென்ற வெள்ளி வீதியைப்போலச், செல்லுதலையான் பெரிதும் விரும்புவேன், என்பது. இதனானும் தம் அரிய தலைவனைத் தேடியுழந்த அரும்பெறற் கற்புடையவர் இவர் என்பது பெறப்படுகின்றது.

மகளிர்க்கு உயிரினும் நாண் சிறந்தது எனவும், அதனினும் கற்புச் சிறந்தது எனவும் கூறப்படுதலால், இவர்கள் தம் பெண்மைக்குமாறாகப் பலவிடங்களிலும் நாடி அலைந்தது குற்றமின்று என்பதும், அது இவர் தம் சீரிய கற்பைத் தெளிக்கும் குணமே என்பதும் நாம் அனைவரும் அறிய வேண்டிய அரிய உண்மைகளாம். தமிழ்ப்பேரிலக்கியங்களிற் காணப்படும் தலைசிறந்த பத்தினிப் பெண்டிருள் ஒருவராய இவர் செந்தமிழ்ச் சுவை கனியச் செய்யுள் இயற்றுந்திறத்திலும் வல்லவராவார். புலமைநலம் பழுத்த இவரது பாக்கள் அகநானூற்றில் இரண்டும், குறுந்தொகையில்எட்டும், நற்றிணையில் மூன்றும் காணப்படுகின்றன.

# புனிதவதியார் என்னும் காரைக்காலம்மையார் வரலாறு

*தோற்றமில் பரஞ்சோதி தன்வாய் திறந்து*
*ஆற்ற வன்புட னம்மையே யென்னுமோர்*
*பேற்றை முன்பெறப் பேயுரு வெய்திய*
*சாற்றரும் புகழ்த் தாயை வணங்குவாம்.*

தமிழகத்தில் "பண்டைநற்றவத்தால் தோன்றிப் பரமனையே பத்தி பண்ணி", அவனருளால் வீடு பேறடைந்த சீரடியார் எண்ணிறந்தோராவர். அவர்களுள், இலிங்க பத்தி, குருபத்தி, சங்கமபத்தி எனப்படும் முத்திறங்களில் நின்று, இறைவனுக்கும் அவனடியார்கட்கும் திருத்தொண்டு புரிதலாகிய தவநெறியில் ஒழுகிச் செயற்கருஞ்செயல்புரிந்து திருவடிப் பேறு தலைக்கூடிய மெய்யடியார் எழுபத்திருவர்ஆவர். இச்சிவனடியார்களில் அறுபத்துமூவரைத் தனியடியார் என்றும் ஒன்பதின்மரைத்தொகையடியார் என்றும் கூறுவர்.

இப்பெரியோர்களின் அரியவரலாற்றை முதன் முதலாக நமக்கு அறிவிக்கும் ஒப்புயர்வற்ற திப்பியநூல் திருத்தொண்டத்தொகை ஆகும். திருத்தொண்டத்தொகை, சிவபெருமானால் வலிய ஆட்கொள்ளப்பெற்றவரும், அவரால் தோழமை கொள்ளப் பெற்றவரும் ஆகிய ஆலால சுந்தரரால் அருளிச் செய்யப்பெற்றது.

இதன்கண் திருத்தொண்டர்களின் பெயரும் சிறுபான்மை அடிமைத்திறமும் குறிக்கப்படுதலின் இதுவே அடியார் வரலாற்றுக்கு முதல் நூலும் தொகைநூலுமாம். இதன் பின்னர் திருநாரையூரில் பொல்லாப்பிள்ளையார் அருள்பெற்று நம்பி

யாண்டார் நம்பிகள் அருளிய திருத்தொண்டர் திருவந்தாதி' இதனினும் சற்று விரிவுடையவகை நூலாக விளங்கியது.

இவற்றிற்குப் பிறகு தமிழ்ப் பெருமக்கள் அடியார்கள் வரலாற்றை உள்ளவாறுணர்ந்து உய்திபெறுதற்குரிய தெய்வத் திருமறை நூலாய்த்திகழ்வது, பெரியபுராணம் என வழங்கப் பெறும் திருத்தொண்டர் புராணம் ஆகும்.

பெரியபுராணம் முழுமுதற் பொருளாகிய அம்பலவாணனுல் உலகெலாம் என்று அடியெடுத்துக் கொடுக்கப்பெற்று, தமிழர் ஆற்றிய தவப்பயனுய்த் தோன்றிய குன்றத்தூர்ச் சேக்கிழார் பெருமானுல், தமிழின் மாண்பும் சைவத்தின் மேன்மையும் விளங்கப் பத்திச்சுவைததும்பும் செந்தமிழ்ப்பாக்களால் யாக்கப்பெற்றது. தமிழ்மணங் கமழும் இத்திருநூலில் காரைக்காலம்மையார் வரலாறு படிக்குந்தோறும் படிக்குந்தோறும் உள்ளத்தை உருகச்செய்து இறைவனிடத்தே ஒன்றுபடுத்தும் பான்மையுடன் விளங்குவது. அரிய உண்மைகளையும் சிறந்த நீதிகளையும் அருண்மொழித்தேவர் இவ்வரலாற்றில் மிக அழகாக எடுத்துரைப்பதால் மாணவர் அவற்றினை எளிதில் அறியும்வண்ணம் இவ்வரலாறு ஈண்டு எழுதப்படுகின்றது.

## நாட்டியல்பும், குடிப் பெருமையும்.

தெய்வப்பொன்னியின் தீம்புனலால் வளங்கெழுமிய சோழநாட்டில், மருதநிலக் கருவளங்கள் மாண்புற்றிருப்பது போலவே, ஏனைய நிலப் பகுதிகளிலும் அவற்றிற்குக் கூறிய நலன்கள் அனைத்தும் குறைவற மிளிர்வனவாம். அந் நாட்டின் நெய்தல் நிலங்கள் கருப்பொருள்களால் சிறப் புற்றிலங்குவதோடு வளங்கொழிக்கும் துறைமுகங்களையும் உடையனவாய் விளங்கின.

சோழர் தலைநகராய காவிரிப்பூம்பட்டினத்தின் துறை முகங்களில் ஏற்றுமதி இறக்குமதியாகின்ற பொருள்களின் வரிசையும், அவற்றை முறைப்படி ஏற்றுவோர் இறக்குவோரின் ஆரவாரமும் பிறவும் பட்டினப்பாலையுள் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. மற்றும் நகரத்தை அகநகர், புறநகர் எனப் பகுத்து, அவற்றில் உள்ள கோவியல் வீதி முதலியவற்றையும் நாளங்காடி, அல்லங்காடி என்பனவற்றையும் அவற்றினியல்புகளையும் சிலப்பதிகாரம் முதலிய தமிழ் நூல்கள் மிக அழகாகக் கூறியிருக்கின்றன.

அந்நகரத்திலுள்ள வணிகர் இயல்பை கற்போர்க்குச் சுவைபயக்கும் வண்ணம் பட்டினப்பாலை கூறுகின்றது. அது.

*"நெடுநுகத்துப் பகல்போல*
*நடுவுநின்ற நன்னெஞ்சினிராய"* அவ்வணிகர்

தாம் விற்கும் பொருளையும், வாங்கும்பொருளையும் ஒரு தன்மைத்தாக ஆராய்ந்து தம் குடிக்குவரும் ஏதத்திற்கு அஞ்சி மெய்ம்மையேபேசி தாம்கொடுக்கும்பொருட்கு மிகையாகச் சரக்கைக் கொள்ளாமலும், கொள்ளும்பொருட்குக் குறைவாகப் பண்டங்களைக் கொடாமலும் பல்வகைப் பொருள்களையும் விற்று, அதனால் வரும் மிகுதியான ஊதியத்தை யுடையவர்களாய் வாழ்ந்தனர் என்பது. இங்ஙனம் வரும் ஊதியத்தையே நன்பொருள் என ஆன்றோர் உரைப்பர்.

## தோற்றம்.

இத்தகைய நன்மக்கள் குழுமி வாணிபம நடாத்தி வந்த சிறந்த இடங்களில் ஒன்று காரைக்கால் என்னும் திருப்பதியாகும். கடல்வளங்கெழுமிய அந்நகரை "வங்கமலி கடற் காரைக்கால்" என்று சேக்கிழார்பெருமான் கூறுவதால் அந்

நாளில் அத்துறைமுகத்தில் மரக்கலப்போக்குவரத்து மிகுதி யாக நடைபெற்றமைபுலனும்.

பெருமைசான்ற அறத்தின் வழிநின்று குற்றமற்ற வாய்மையினெழுகும் வ ணி க ர் பெருமக்கள், இப்பர், கவிப்பர், பெருங்குடி வணிகர் என மூன்று பிரிவினராவர். பெருங்குடி வணிகர் மரபு தொன்றுதொட்டு மிக்க பெருமைபெற்று விளங்கி வந்தது.

தனதத்தனுர் என்பவர் காரைக்காலில் பெருங்குடிவணிகர் மரபில் தோன்றியவர். வணிகர்குலத்தோன்றலாய அவர், தாம் அரிதின் முயன்றுதேடிய நன்பொருளை நல்வழியிலே வரையாது வழங்கிவந்தமையால் அப்பெயர் பெற்றனர் போலும். வணிகர் தலைவராய தனதத்தனுர் தம் பெருந்தவப் பயனுக, இறைவனருளால் அவருக்கு ஒரு பெண்குழந்தை பிறந்தது. திருமகளே தமக்குப் புதல்வியாய் வந்து அவதரித்தனளோ என்னுமாறு பேரழகுடன் தோன்றிய அக் குழவிக்குத் தனதத்தனுர் புனிதவதியார் என்னும் தூய திருப் பெயரிட்டுப் பாராட்டினர்.

## வளர்ச்சி

பெருங்குடி வணிகர்மரபு விளங்கவந்தவதரித்த புனிதவதியார் வளர்பிறையென நாளும் வளர்ந்து தளர்நடைப் பருவமெய்தினர். கிண்கிணி சதங்கை முதலிய காலணிகள் ஒலிக்க தளிரனைய மெல்லிய அடிகள் தளர மெல்லமெல்ல எடுத்தடி வைக்கும் அசையுநடைப் பருவத்திலேயே கன்னலுந் தேனும் கைக்கும் இன்னமுதனைய மழலைமொழியும் பயின்ருர். அக்குதலைச் சொற்களெல்லாம் ஏனைய இளங்குழவிகளுடையன போலாது "விளையும் பயிர் முளையிலே தெரியும்".

என்பதற்கிணங்கப் பாம்பணிபரமற்கடிமை பழகிவரும் திறம் பயின்று விளங்கின.

உலகில் பொதுவாக இளமகாரின் மழலை மொழிகளை விரும்பாதார் ஒருவருமிலர். தேனினுமினிய தீங்கு தலைச்சொல் கேட்போர் உளத்தையும் உடலையும் குளிரச் செய்யும் நீர்மையது. அதற்குக் குழலின் இனிய ஓசையும், யாழினிசையும் ஈடாகாவென ஆன்றோர் கூறுவர். மலரனைய சிறியவாயினின்றெழுகும் தேனனைய மழலையமுதினைப் பருகாத செவியைப் பாவையின் செவியெனப் பகர்வர்.

புனிதவதியாரும் தெய்வமணங்கமழும் தீவிய மழலைமிழற்றித் தம் பெற்றோரையும், உற்றாரையும் மகிழ்வித்தனர். இன்னணம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ச்சிபெற்ற புதல்விக்கு உரிய பருவங்களில், தனதத்தனர் தம் உறவினரை யெல்லாங் கூட்டுவித்து பெரும் பொருட் செலவுசெய்து அரும்பெருஞ் சிறப்புக்களை அகமகிழ்ந்து செய்தனர்.

கேட்டார்ப்பிணிக்கும் அன்புருவாய மொழிகளும் கண்டோர் வியக்கும் ஓவியத்தெழுதவொண்ணு உருவமும் உடைய புனிதவதியார் அழகின் கொழுந்து வளர்வதொப்ப வளர்ந்து வந்தார். கிளைஞர் பாராட்டுடன் எழில்பெற அவர் உடல் வளர்வது போலவே இறைவனிடத்தும் அவனடியாரிடத்தும் அவருக்குள தாம் அன்பும் மேன்மேலும் வளர்வதாயிற்று.

## இளமைப்பருவமும் கல்வியும்

வணிகர்குல விளக்காகிய அவர், சிறுமியர் பலருடன்கூடி வண்டலிழைத்தும் சிற்றிலமைத்தும், சிறுசோறட்டும், அம்மனை, பந்து, கழங்கு முதலியன ஆடியும் விளையாடும்

இளமைப் பருவத்தும் அவர் வாயிலிருந்து வெளிப்படும் பாடல்களெல்லாம் சிவமணம் கமழுவதாகவேயிருந்தன.

''தவமுந் தவமுடையார்க்காகும்'' என்றபடி, முற்பிறப்பில் ஆற்றிய தவப்பயனுல் இங்ஙனம் குழவிப் பருவத்திலிருந்தே இறையடி தலைக்கூடுதலாகிய மெய்யன்பிலீடுபட்டிருந்தனர். பிள்ளைமைப்பருவத்திலேயே இம்மெல்லியலார் சிவபிரானிடத்துப் பேரன்புடையராயிருந்தனர் என்பது, சேக்கிழார் பெருமான் அருள்வாக்கினுலறியப்படுதலோடு, ''பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாம் காதல் சிறந்து நின்சேவடியே சேர்ந்தேன்'' என்னும் இவரது திருவாக்கினுலும் தெளியப்படும்.

இறைவன் பேரருளால் மெய்யுணர்வு தலைக்கூடிய பெரியார்கள், இங்ஙனம் பிறந்த பொழுதிலிருந்தே ஆண்டவனடிக்கண் அன்புகசிந்துருகி நிற்பர் என்பதும், அவர் சொல்லுஞ் செயலுமாகிய அனைத்தும் அவனைப்பின்பற்றியனவாகவே இருக்கும் என்பதும் திருநாளைப்போவார் புராணத்தில் மிக அழகாகக் கூறப்பட்டிருக்கின்றது. பொருட்செல்வமும் அருட்செல்வமும் ஒருங்கு பெற்றிருந்த புனிதவதியார் அழிவில்லாததும் எழுமையும் தொடர்ந்துவருவதுமாகிய கல்விச்செல்வமும் நிரம்பப் பெற்றிருந்தனர். இயற்கை எழிலும் பிறவியிலேயே தூய நற்பண்பும் வாய்ந்த நங்கை கல்வியிலும் வல்லுநராயிருந்தது பொன் மலர் நாற்றமுடைத்தாய்ப் பொலிவதுபோன்றிருந்தது.

## மணப் பருவம்.

மகளிர்க்குரிய நல்லியல்புகள் யாவும் அமையப்பெற்ற பொற்றொடியார் தம் ஆடல் பாடலாதிய விளையாட்டினெல்லாம் சிவபிரானது அருங்குணங்களும் அவனது அருண்

மேனியின் அலங்காரங்களும் பயின்றுவரப் பேசியும் பாடியும் வந்ததோடு திருத்தொண்டர்களைக் கண்டால் உடனே அவரை வணங்கி உபசரித்தும் வருவாராயினர்.

தன் பெயருக்கேற்ற தூய பண்புகளுடன் வளர்ந்துவந்த பூங்கொடி, உறுப்பு நூலோர் கூறும் நலன்கள் யாவும் நிரம்பப் பெற்றுக் கண்கவர் வனப்புமிக்க மங்கைப் பருவமெய்தி விளங்கினர்.

எழின்மிகுந்த இல்லிகவாப்பருவமடைந்த புனிதவதியார் தம் இல்லத்திருந்தே அட்டிற்றெழில் முதலிய குடும்பவினை களையும் பெற்றோர் மகிழுமாறு நன்கு பயின்றனர். சுவை பெற உண்டியமைக்கும் தொழிலும் மகளிர்க்குரிய மாண்புகளில் ஒன்று அன்றோ?

## திருமணம்.

இன்னோரன்ன நற்பண்புடைய நங்கைக்கு மணமுடிக்க வேண்டுமே! ஈதென்ன விந்தை, கரும்பு கட்டோடிருந்தால் எறும்பு தானேவரும் என்பது பழமொழியன்றே! உயர்குலத் துதித்த உத்தம மாதருக்கு மணமெய்துங்காலம் வந்தது.

அந்நாளில் நாகப்பட்டினம் என்ற சிறந்த ஊரில் புகழு டன் வாழ்ந்தவணிகர்ஒருவர் இருந்தார். அவர் பெயர் நிதிபதி என்பது. அவர் காரைக்காலில் புனிதவதியார் மனையறத் திற்குரிய மாண்புகள்யாவும் சிறக்க எழிலுடன் விளங்குவதைக் கேள்வியுற்று அவரைத் தன் அருமைப்புதல்வனுக்கு மணம் பேசிவருமாறு ஆண்டும் அறிவும் முதிர்ந்த சில பெரியோர் களை அனுப்பினர்.

நன்னாளில் மணம் பேசுதற்குப் புறப்பட்ட மூதறிஞர்கள், காரைக்காலை அண்மித் தனதத்தனரில்லத்தை யடைந்தனர்.

தனதத்தரும் வந்த விருந்தினரைப்பேணி நலம் உசாவினர். விருந்தினர் அவரை நோக்கி நும்மரபினுக்கு ஒத்த மரபினை யுடையவரும் அளவற்ற செல்வமுடையவருமான "நாகை நிதிபதி மைந்தன் பரமதத்தனுக்கு, நும்முடைய அரும்பெறற் புதல்வியை மணம் பேசுதற்கு வந்தோம், நீவிர் நன்கு ஆராய்ந்து நம் முன்னோர்கள் மரபின்வழி மணமுடிப்பீராக" என மொழிந்தனர்.

அதுகேட்ட தனதத்தனார் மிக்க மகிழ்ச்சியடைந்து, மண மகனுடைய பிறப்பு, குடிமை ஆதியவற்றைத் தெளிந்து பல் லாற்றானும் தம்மகட்கு ஒப்புமையுடைய பரமதத்தனுக்குத் தன் மகளை வதுவைமுடிக்க ஒருப்பட்டனர். பின் பெண்பேசவந்த முதியோர்கட்கு அறிவிக்கவேண்டிய முறைப்படிதம் இசைவை அறிவித்தார்.

வணிகர் பெருமகிழ்வுடன் மகட்கொடை நேர்ந்தமை கண்ட அறிஞர்கள் அளவற்ற உவகையுடன் அவர்பால் விடைபெற்று மீண்டனர். பின்னர் அவர்கள் நாகையம்ப தியை யடைந்து நிதிபதியிடத்தில் தனதத்தர் தம் செல்வமக ளைக்கொடுப்பதற்கு இசைந்த செய்தியை மகிழ்வுடன் தெரிவித் தனர்.

அதுகேட்ட நிதிபதி பெறற்கருஞ்சிறப்புபெற்றவன்போல உவகைமிக்கூர்ந்து, தன் அரும்பெறற் புதல்வனின் திரு மணங்குறித்து தம் செல்வமலி கிளைஞருடன் வேண்டுவன புரிவானாயினன். கற்றுவல்ல பெரியோர்களைக்கொண்டு திரு மணத்திற்குரிய நன்னாளைத் தெரிந்து அழகியமணவோலை தீட்டி உற்றார் உறவினரனைவர்க்கும் செலவிடுத்து வதுவைத் தொழிலை மேற்கொண்டனன்.

இல்லங்களை அழகியபந்தலிட்டு வாழை கமுகு முதலிய வைகளை நாற்றி அழகிய தோரணங்களைக்கட்டி நன்கு அலங்

கரித்து, பரமதத்தனுக்கும் எழில்பெற மணக்கோலஞ் செய்வித்து, பல்வகை இன்னியங்களும் முழங்க உறவினரனைவரும் புறப்பட்டனர்.

புறப்பட்டவர்கள் வழியில் பல ஊர்களையுங் கடந்து பேரியங்கள் ஒலிக்கக் காரைக்காலை அண்மினர். தனதத்தரோ மணநாள் குறித்து முரசறைவித்து நகரெங்கணும் அலங்கரிக்கச்செய்து வீதிகள்தோறும் அணிபெறு பந்தர்களும், அசைதரு தோரணங்களும் அமைத்து எழில்பெறச் செய்தனர். நகரமாந்தர் அனைவரும் தெருக்களில் பழமணல் நீக்கிப் புதுமணல்பரப்பித் தண்ணீர் தெளித்து நறுமணப்பொடிகளைத் தூவி, மாளிகை வாயில்களில் பூரண கும்பமும், பொற்பாலிகைகளும், பாவை விளக்கும்வைத்து மணமகன் வருகையை எதிர்நோக்கியிருந்தனர்.

தனதத்தனரின் ஒப்புயர்வில்லாத மாளிகை அழகினுக்கு அழகு செய்தாற்போல யாண்டுப் பார்ப்பினும் கல்யாணக் கோலங்களால் கவினுற்று விளங்கியது. சுற்றத்தினரும் நட்பினரும் சூழ்ந்திருந்தனர். மணவறை நவமணிகளாலும் விலையுயர்ந்த பட்டுக்களினாலும் நறுமலர்களாலும் நன்கு அலங்கரிக்கப்பெற்றிருந்தது. திருமணத்திற்கு வேண்டும் பொருள்கள் யாவும் நிறைந்திருந்தன.

மாப்பிள்ளைவீட்டார் தன்னகரடைந்ததைக் கேள்வியுற்ற தனதத்தர் பல்வகை இயங்களுடனும், மங்கலப்பொருள்களுடனும் எதிர்கொண்டழைத்தனர். மணமகனாகிய பரமதத்தன் குறித்த நல்லோரையில் மணவறையை யெய்தினன். திருமகளனைய எழிலுறு நங்கையும் கவினுறு மணக்கோலந் தாங்கித் தாரகைநடுவண் தண்மதிபோலச் சேடியர்சூழ மணவறையை யடைந்தனர்.

அவர்கள் மரபினுக்கு ஏற்றவாறு மணச்சடங்குகள் யாவும் செய்யப்பெற்றன. மயிலன்ன சாயலையுடைய மெல்லியற்கும், காளையன்ன வலியுடைய தோன்றற்கும் பல்பெருஞ் சுற்றத்தினரின் எல்லையற்ற களிப்புடன் திருமணம் இனிது நிறைவேறியது. அம்மி மிதித்தல் அருந்ததி காண்டல் ஆதிய யாவும் முடிந்தபின்னர் அளவிலாச் சிறப்புடைய நங்கையும் நம்பியும் பெரியோர்களை வணங்கி ஆசிபெற்றனர். வந்திருந்த உறவினர் யாவரும் இன்சுவையுண்டியும், எழில்பெறு உறையுளும் பெற்று மகிழ்ச்சியுடன் சில நாள் தங்கியிருந்து மீண்டனர்.

## தனிமனைப் புகுதல்

தனதத்தனுர் தன்குடிக்கு ஒரே புதல்வியாகிய புனிதவதியார் தம்மைப் பிரிந்து கணவனுடன் நாகைக்குச் செல்வதில் மனமில்லாதவராயினுர். என் செய்வார், மணமுடிந்த மங்கையரோ மணாளனில்லத்திற்குச் செல்வதன்றிப் பிறந்தகத்தில் தங்கியிருத்தல் பொருத்தமுடையதன்று. ஆகலின் தம்மகள் தம்மைவிட்டுச் சேய்மையில் நீங்காமல் தலைவனுடனுறைதற்கு ஏற்றதொன்று சூழ்வாராயினர். அது தம்மாளிகைக்கு அண்மையில் ஒரு மாடஞ் சமைத்து அதில் தன் அருமைப்புதல்வியையும் அவர் கணவனையும் இல்லறத்திருத்துதல் என்பது.

எண்ணிய எண்ணியாங்கு முடித்தற்குரிய பெரும்பொருள் படைத்த புகழ்வணிகர், தாம் நினைத்தவண்ணமே எழில் மிகுந்த இல்லமொன்று எடுப்பித்துச் சிறந்ததொரு நன்னுளில் அவர்களை அம்மனையில் குடிபுகுவித்து மகட்கொடையாக மிகுந்தபொருளை வழங்கினுர்-

கருத்தொருமித்த காதலனும் காதலியும் தனிமனைவாழ்க்கையிற்புக்கனர். இந்திரதிருவும் அந்தமிலின்பமும் உடைய அவர்கள் வாழ்க்கை உலகினுக்கு ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தது.

## பரமதத்தன் பொருளீட்டல்.

பரமதத்தன் தன் மாமனரிடமிருந்து மிகுதியான பொருளே வரிசையாகப் பெற்றிருந்தாலும், அவற்றைக் கொண்டு இல்லறம் நடாத்தி இன்புற்றிருக்க எண்ணவில்லே. ஏன்? ஆண்மையிற் சிறந்த ஆடவனெருவன் பிறர் தேடி வைத்திருக்கும் பொருளேக்கொண்டு வாழ்தலினும் சிறுமை வேறென்றும் இல்லையாகலின், பரமதத்தன் தன் முயற்சியினுல் பொருளீட்டி மனேவளத்தைப் பெருக்க உன்னினுன்.

இவ்வுலக வாழ்வை இன்புற நடத்துவதற்குப் பொருள் இன்றியமையாது வேண்டப்படுவதாகும். பொருளின்றேல் உலகியல் நடத்தல் ஒவ்வாது. இதனுலன்றே தெய்வப்புலவர் " அருளிலார்க்கவ்வுலகமில்லேப் பொருளில்லார்க்கிவ்வுலகமில்லாகி யாங்கு " என்றருளினர். பொருளற்றவர்க்கு இவ்வுலகவாழ்வில் இன்பம் இல்லாததுபோல, அருளற்றவர்க்கு மறுமையுலகில் இன்பம்பெற இயலாது, என அருளின் தன்மையை எடுத்துரைக்குமிடத்துப் பொருள் நிலவுலகவாழ்விற்கு இன்றியமையாததாயிருப்பதனே உவமை முகத்தான் எடுத்துக் காட்டினர்.

மற்றும் பெருநாவலர், அன்பின் முதிர்ச்சியால் உதிக்கும் அருளென்னும் தெய்வக்குழவிபொருளென்னும் செல்வச் செவிலியால் வளர்க்கப்படுவதாம் என்றும்கூறி, பொருள்இருமையுந் தரவல்ல இயல்பிற்று என்பதனே அறிவுறுத்தமை காண்க.

இத்தகையபொருளே ஈட்டுதற்குரியவழிகள் பலவுள. அவை வேளாண்மை, வாணிபம், கைத்தொழில் என்பனவாம். அவற்றுள் உழவு, வாணிபம் ஆகியவிரண்டும் அவற்றிற்குரியரெனக் கருதப்படுவோராகிய வேளாளர் வணிகர் என்போராலேயே நடத்தப்பட்டு வந்தனவென்று நினேக்கப்படுகின்றது.

கைத்தொழிலோ அங்ஙனமன்று, அது பல்லோரானும் பயிலப் பட்டுவந்தது; எனினும் அதுவும் பல்வேறு வகையினராய மக்கட்டொகுதியினரால் பலதிறப்பட இயற்றப்பட்டதாகவே காணப்படுகின்றது. கொல்லர், தச்சர், குயவர் ஆகிய சொற்கள் அவ்வத்தொழிலுக்குரிய மக்களைக் குறித்தல்போல வாணிபத்தொழில் புரிந்த ஒரு சாராருக்கே வணிகர் எனப் பெயர் வந்தது என்று கொள்ளினும் இழுக்காது. குடியின் பெயர் தொழிற்கு ஆயிற்று என்றுதல் தொழிலின் பெயர் குடிக்கு ஆயிற்று என்றுதல் கொள்ளவேண்டும். அது எங்ஙன மாயினும் ஆகுக.

ஈண்டுப் பரமதத்தன் பொருள் சேமித்தற்கு எடுத்துக் கொண்ட தொழில் என்னவென்று பார்ப்போம். அது கூற்ற மற்ற தொழில்களுள் ஒன்றாய வாணிபத் தொழிலேயாம். "குலவிச்சை கல்லாமற் பாகம்படும்" என்ற பழமொழிப் படி தம் முன்னோர் நடத்திவந்த தொழிலையே மேற்கொண்ட னன். உலகில் மிகுதியாகப் பொருளீட்டும் தொழில்களுள் வாணிபமும் ஒன்று அன்றோ? அத்துறையில் பெரும்பொருள் செலவிட்டால்தான் மிகுந்த ஊதியத்தையடைய முடியும். அதற்கு முதற்பொருளாக மாமனார் தந்தவரிசைப் பொருளைக் கொண்டு தொடங்குவானாயினான். தொழிற்றிறமும் நன் முயற்சியும் உடையார் எதை மேற்கொண்டாலும் அது நன்கு நடைபெறுதல் ஒருதலையன்றோ? பரமதத்தன் தான் எடுத்த முயற்சியில் வென்றிபெற்று மிக்க ஊதியம் பெறலானான்.

## இல்லற மாட்சிகள்.

புனிதவதியார் இங்ஙனம் மிகப்பொருளீட்டிய தம் கணவ னுடன் ஒன்றுபட்ட உள்ளமுடையராய் ஓருயிரும் ஈருடலும் என நின்று இல்லறமாண்புகள் அனைத்தும் விளங்க வாழ்வை

நடத்திவந்தார். மனையற மாட்சிகளாவன :— கணவனையே தெய்வமெனக்கொள்ளல் அவன் குறிப்பின் வழியொழுகல், வருவாய்க்குத்தக செலவு செய்தல், கொழுநன் விரும்பிய நல்லுணவுகளையமைத்து அவன் மகிழ அடிசிலூட்டுதல், இன்முகத்துடன் சுற்றந்தழுவுதல், அன்புடன் விருந்தோம்புதல் ஆதியன ஆகும்.

## இறையடிப் பேரன்பு.

இவையாவும் நன்கு அமையப்பெற்ற புனிதவதியார், இல்லிருந்து நல்லறமாற்றுங் காலத்தும், தன் தலைவன்பால் வைத்த அன்புடன் மலைமகள் தலைவனாகிய பெருமானிடத்து வைத்த பேரன்பும் முறுகி வளரப்பெற்றார்.

ஈதென்ன! கற்பிற்சிறந்த பொற்புடை மெல்லியலார்க்குக் கணவனன்றோ தெய்வமென்பார்; இவர் வேறு தெய்வத்தின்பால் அன்பு வைத்தல் பொருந்துமோவெனின், அற்றன்று, கொழுநனிடம் அன்பின்றிப்பிறகடவுளைப்போற்றுதல் பத்தினிப் பெண்டிர் செயலாகாது. அவ்வாறு செய்வார் தலைவனிடத் தாற்றவேண்டிய பணியிற் குறைந்தமையாற்போந்த சிறுமையுடையராவரேயன்றிப்பரமனிடத்தாற்றிய பத்தியாற்கிடைத்தற்குரிய அவனருளைப் பெறுதற்கும் உரியரல்லராவர்.

இல்லத் தலைவனிடத்து அன்புசெலுத்தி அவனருளைப் பெற இயலாதவர் இறைவன்பால் யாங்ஙனம் அன்புசெலுத்த முடியும்? அஃது ஆண்டவனுக்கும் விருப்பமாகுமா? அத்தகையோர் செயல் பிறர் எள்ளி நகையாடுதற்குரியதாய் ஏதந் தருவதாம்.

'கொண்டானிற் றுறெய்வம் பிறிதில்லை' என்னும் விழுமிய கொள்கையுடையார்க்கு விண்முதற் பூதங்களும், அவற்றை

11 2199



யியக்கவல்ல கடவுள ம் பணியாற்றும் திறத்தை பத்தினிப் பெண்டிர் வரலாறுகளிற் காண் றோம்.

MADRAS

புனித்வதியாரோ, கொழு பின்வழியொழுகும் பழுதற்ற அன்புடன் பரசிவத்தையும் நாடி நைந்துருகும் விழுமிய பத்தியுமுடையராய் வீறுபெற்றுத் திகழ்ந்தனர்.

இன்னணம் காதலன்பால் வைத்த அன்போடு, கடவுளிடத்தும் பத்திசெலுத்திய வளவர் பெருமகள், மங்கையர்க்கரசியாரின் மாண்புறு கற்பன்றே, தென்னவன் தீமையை நீக்கிச் சைவத்தை நிலைநிறுத்தியது.

"இல்லதென் இல்லவண் மாண்பானல்" என்றபடி, மனைமாட்சியுடைய இல்லாளுடன் அறமோம்பி வாழ்வானொருவனை உம்பருள் ஒருவனாகக் கருதப்படும் என்பது வள்ளுவர் வாய்மொழி.

## விருந்தோம்புதல்.

அறத்தாற்றின் இல்வாழ்க்கைஆற்றிவந்த புனிதவதியார், இல்லறத்தார்க்கு விதிக்கப்பட்ட அறங்களிலெல்லாம் மிகச் சிறந்ததாகிய விருந்தோம்புதல் என்னும் அறத்தை மிக நன்றாக நடத்திவந்தார். விருந்து என்னும் சொற்குப் புதிது என்பது பொருள். உறவினரை விருந்தினர் என்றுரைத்தல் தற்கால வழக்கு. உறவினரை உபசரித்தல் சுற்றந்தழால் என்னும் அறமாம்.

ஆகவே விருந்து புறந்தருதல் என்பது புதிதாகத் தமதில்லத்தினையடைவோர்க்கு வேண்டுவனசெய்தலாம். அது வறியராய் மனைதோறும் முகநோக்கி இரந்துண்டு வாழும் ஏழைகட்கு இரக்கத்துடன் அளிக்கும்போது ஈகை எனப்பெயர்

பெறும். அங்ஙனமன்றி இறைவன்பால்வைத்த அன்புடைய ராய், அடியார்கோலங்கொண்டு ஆண்டவனுறையும் தலங்களை நாடிவரும் தொண்டர்கட்கு வேண்டுவன புரியுமிடத்து விருந் தோம்புதல் எனப்பெறும். ஒழுக்கநெறியிற்றவருமல் அவ் வாறு போதுவார்க்கும் உதவுதல் அவ்வறமேயாம்.

## விருந்தினரியல்பும், ஓம்புதற் சிறப்பும்.

விருந்தினரைச் சேய்மையிற் காணுமிடத்து, இன்முகமும், அதுபற்றி நண்ணியவழி இன்சொல்லும், அதுபற்றி உடன் பட்ட வழி நன்குற்றலும் என ஆசிரியர் பரிமேலழகர் விருந்து புறந்தருவார்க்கு வேண்டுமியல்பை விளக்கியருளினர்.

விருந்தினர் மிக மென்மையுடையவர் எனவும் முகம் வேறுபட நோக்கின், அவர் வாட்டமுறுவர் எனவும் பொய்யில் புலவர் பொருளுரை கூறும். இல்லற வாழ்வின் பயன் விருந் தோம்புதலே என்பதை,

"இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்னும் வள்ளுவப் பெருந்தகையாரின் வாய்மொழியா னறிக.

மற்றும் நம் பண்டைய இலக்கியங்களில் இல்லற இயல்பு கூறுமிடங்களிலெல்லாம் விருந்தோம்புதலாகிய அறம் வற்புறுத்துரைக்கப்படுகின்றது. மாபெரும் பத்தினியாய கண்ணகிநங்கை, தன் காதலன் பரத்தை வயத்தனாய் மயங்கி யிருந்து பெரும்பொருள் தொலைத்து, இறுதியில் இல்லமெய்தி நாணிநின்றவழி, தன் இளமையும் எழிலும், பொருளும் வீணாயின என்பதற்கிரங்கினளா? இல்லை, பின் என்னை?

"அறவோர்க் களித்தலும் அந்தணரோம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை"

என்று தலைவனுடனுறைவின்மையால் இல்லறத்தார் எய்தற்குரிய இப்பயன்களைத் தான் இழந்தமைக்கே வருந்தினள். ஈண்டு "தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடல்" என்றுரைக்கப்படுதலே, நம்முன்னோர்கள் விருந்து புறந்தருதலாய அறத்தை எவ்வாறு பாராட்டி வந்தனர் என்பதையும், அவ்வறம் புரியாததால் தன்வாழ்வின் பயனையே இழந்ததாகக் கருதிய பத்தினிப் பெண்டிரின் இல்லற மாண்பையும் புலப்படுத்தல் காண்க.

## விருந்தினர் பெருமை.

இனி இத்தகைய அறத்தை "பாத்திரமறிந்து பிச்சையிடு" என்பதற்கிணங்கத் தகுதியறிந்து ஆற்றவேண்டும் என்பர். அறம் செய்வோர் பயன் கருதாவிடினும் நல்லோர் பாலதாயின் மிகப்பெரிய சிறப்பைப் பயந்தேதீரும் பெருமையுடையதாம்.

"உறக்குந் துணையதோர் ஆலம்வித் தீண்டி
இறப்ப நிழற் பயந்தாங் கறப்பயனும்
தான்சிறி தாயினும் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும்"

என்னும் நாலடியாரும் இதனை வலியுறுத்தலானறிக.

## அடியார்களை உபசரித்தல்.

இத்தகைய அரும்பெரும் அறத்தைப் புனிதவதியார் எங்ஙனம் ஆற்றினர் என்று பார்ப்போம். சிவனடியார்களைக் கண்டால் அவர்களை அன்புடன் வரவேற்றுத் திருவமுதளித்து

அவரவர் தகுதிக்கேற்ப, அவர் வேண்டும் ஆடை அணி ஆகியவைகளை அகமகிழ்ந்து வழங்கியும் தம் கணவன் கருத்தின் வழி ஒழுகியும் வந்தார்.

இறைவன் மாட்டுப் பேரன்புடையராய இவர் அவனடியார்க்களித்து அன்புடையராய் விருந்து புறந்தருதல் வியப்பாமோ? செப்பரும் பெருமையுடைய இவர்தம் கொழுநனாய பரமதத்தனும் மனைத்தக்க மாண்புடைய மங்கைநல்லாரை மனைவியாகப் பெற்றதன் பயனால், தூய நன்னெறியில் ஒழுகி அனைவரும் பாராட்டும் வண்ணம் வாழ்ந்து வந்தான்.

## மாங்கனிகள் வரலாறு.

அவ்வாறு வாழு நாளில் ஒரு நாள் பரமதத்தனை வாணிப முறையில் காணவந்தார் சிலர், அரிய மாங்கனிகள் இரண்டு கொண்டு வந்தனர். கடையிலிருந்த பரமதத்தன் அவர்களை உபசரித்து அவர் விரும்பியவற்றை முடித்து அனுப்பியபின்னர் அப்பழங்களை ஓர் ஆள்மூலம் இல்லிற்கனுப்பினான். மனைவியார் கணவன் அனுப்பிய கனிகளைப்பெற்று ஓரிடத்தில் பத்திரப் படுத்திவிட்டு, அடிசிலமைத்துக்கொண்டிருந்தார்.

## அடியவர் பசி தீர்த்தல்.

அப்பொழுது பிரம்பணி பரமனுக்கு அடிமைபூண்ட பெரியார் ஒருவர், மிகுந்த பசியோடு அவ்வில்லுள் நுழைந்தார். சிவனடியார் பசியான்மெலிந்த நிலையைக்கண்ட மெல்லியலார் குற்றமற்ற விருந்தினராய இத்திருத்தொண்டரின் பசியை விரைவில் நீக்க வேண்டும் என நினைந்து, அவர் திருவடிகளை விளக்குதற்கு முதலில் நீரளித்துவிட்டு உண்கலம் அமைப்பாராயினர்.

அப்போது திருவமுது ஒன்றுமே சமைக்கப்பெற்றிருந்தமையால் கறியமுதுக்கு என்செய்வதென்று திகைத்தார். பின் ஒருவாறு தெளிந்து சிவபெருமான் அடியவராகிய மெய்த்தொண்டரே பெறலரிய விருந்தினராய் வந்திருத்தலின், இதனினும் கிடைத்தற்கரிய பேறுண்டோ என எண்ணிக் கணவனார் வைத்திருக்குமாறு அனுப்பிய மாம்பழங்களில் ஒன்றை மிகுந்த அன்போடு விரைந்து கொண்டுவந்து கலத்திலிட்டனர்.

மூப்பின் தளர்வாலும், முறுகிய பசி வேட்கையாலும் அயர்ந்துவந்த திருத்தொண்டர், அடியவர் பத்தியே ஆண்டவன் பத்தியெனக்கொண்ட திருவனையார் பரிந்தளித்த மென் சுவையடிசிலை இன்சுவைக்கனியுடன் உண்டருளி, அவரது அளவற்ற அன்பின் செயலைக்கண்டு பாராட்டி உவப்புடன் சென்றனர்.

## அடியார்கள் பெருமை.

அறங்கள் பலவற்றிலும் பசிப்பிணி தீர்த்தலாய அறம் மிகச் சிறந்ததென்பது பல சமயத்தினரும் ஒப்பமுடிந்த உண்மையன்றோ? அதனினும் ஆண்டவனடியவர் பசிதீர்த்தல் மிகப்பெரிய பேரறமென்பர். இவ்வறத்தின் பெருமையை 'குற்றமற்ற உள்ளமுடைய தவத்தினர் மகிழ்ந்து உண்டது மூன்றுலகமும் உண்டதுபோல்வதென்றும்; அவர் உவப்புடன் கொண்ட பொருள் மூன்றுலகமுங்கொண்டது ஒப்பது என்றும் திருமூலர் திருமந்திரம் புகழ்ந்து கூறுநிற்கும்.

அத்தகைய அடியார்கட்கு அன்பிலராய் வாழ்தலினும் இன்னாதது பிறிதில்லை எனச் சைவ நங்கையர் துணிந்துரைப்பர். இதனை பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்தில் கௌரியம்மையார், சிவனடியார்க்கு அன்பிலாச்

சிந்தையை இரும்பு என்றும், அவனடியார் திறத்து ஏவல் புரியா யாக்கையை மரம் என்றும் பலவாறு நைந்து கூறு மாற்ருன் அறியலாகும்.

அடியவர்பால் அன்புடையவரே ஆண்டவன்பால் அன்பு உடையவராவர்; அஃதில்லார் இறைவன் அன்புக்கும் உரிய ரல்லர். எவர் தம்முயிர்போல் பிறவுயிரிடத்தும் அன்புடையரோ அவரிடமே அன்புவடிவினனுய ஆண்டவனுறைவன்

"அன்பு சிவம் இரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்"

என்னும் திருமந்திரமும் இதனை அறிவுறுத்தமை காண்க.

கற்பிற்சிறந்த பொற்பியலாராகிய இவர் கணவனிடங் கொண்ட காதலன்புடன் இறைவனிடத்தும், அவனடியா ரிடத்தும் மெய்யன்பு கொண்டு மிளிர்வதால் இவர்கள் வாழ்க்கை மிகத் தூய நல்லற வாழ்க்கையாய்த் திகழ்ந்தது.

## கணவனுக்கு உணவூட்டல்.

அடியவர் பசிதீர்த்து அவர் இளைப்பை மாற்றிய புனித வதியார் அவர் சென்றபின்னர் தன் தலைவன் வருவதற்குள் கறியமுது முதலிய உணவுப்பொருள்களை விரைந்தமைத்து அவர் வருகையை எதிர்நோக்கியிருந்தார்.

பரமதத்தனும் அளவிலாச் சிறப்புடைய தம்மனையை யடைந்தனர். உண்டிவேளையாகலின் தூய நறு நீராடிச் செய்கடன் முடித்து விருப்புடன் உணவருந்தத் தொடங்கினர். மனைவியார் முறைப்படி உண்கலம் அமைத்து அன்புடன் உணவூட்டத் தலைப்பட்டனர். இல்லக்கிழத்தியர் எவ்வகைச்

செல்வங்களும் நிரம்பப் பெற்றிருந்தாலும், எத்தனை பணியாளரிருந்தாலும், தம் தலைவனை உபசரிக்கும் திறத்தில் வழுவாது நடத்தல் வேண்டும்.

அது பத்தினிப் பெண்டிர் ஆற்றவேண்டிய செயல்களுள் ஒன்றும் ஆம். பலவேறு தொழில் நிமித்தம் நெடுநேரம் வெளியே சென்றிருந்து இல்லத்திற்கு வரும்பொழுது, தலைவியர் இன்முகத்துடன் வரவேற்றுபசரித்து அவர்கள் அயர்வை மாற்றி அமுதூட்டுதல் முதற்கடமை. தாமாகவே அடுக்களையில் நின்று வருந்திச் சமைத்த அடிசிலைத் தம் தலைவன் இனிது என உண்ணும்பொழுது, பெண்டிருக்குளதாம் இன்பம் மிகப்பெரிதாம் என்பதனை

*"குவளையுண்கண் குய்ப்புகை கமழத்*
*தான்றுழந்தட்ட தீம்புளிப் பாகர்*
*இனிதெனக் கணவனுண்டபின் நுண்ணிதின்*
*மகிழ்ந்தன்று ஒண்ணுதன் முகனே"*

என வரும் குறுந்தொகையடிகள் முதலியவற்ருனறியலாம்.

*"நீகை தொட்டது, ஏனது சுவைப்பினும்*
*வானோர் அமுதம் புரையுமால் எமக்கென*
*அடிசிலும் பூவும் தொடுதற்கண்ணும்"*

என வரும் தொல்காப்பிய நூற்பாவான், மனைவியர் மகிழ்ந்தூட்டும் உணவு எத்தகையதாயினும் அதுவே தலைவரால் விரும்பப்படுவதும் ஆம் என்பது தெளிவாகின்றது. இதனை லன்றே அறுசுவையுண்டி யமர்ந்தில்லாளூட்ட என நாலடிச் செய்யுளும் கூறுகின்றது.

கற்பிற்சிறந்த இம்மடவாரும் தம் கடப்பாட்டின் வழுவாது, கணவற்கு அடிசிலூட்டுவாராயினர். கலத்தில் கறியமுதும் திருவமுதும் முறைப்படி படைத்தபின்னர் தம் கணவனர்

அனுப்பிய மாங்கனிகளில் எஞ்சியிருந்த ஒன்றைக் கழுவிக் கொணர்ந்து இட்டு அருகிருந்து உபசரித்தனர்.

## பரமதத்தன் மற்றொரு மாங்கனியையும் விரும்புதல்.

அன்னமன்ன மென்னடை மாதரிட்ட இன்னடிசிலை விரும்பியுண்ட பரமதத்தன் மாங்கனியையும் அருந்தினன். அது மிகவும் சுவையுடைத்தாயிருந்தது. அப்பழத்தின் இனிய சுவையிலீடுபட்ட வணிகன் மனைவியாரை நோக்கி, இன்னும் ஒரு பழம் உளதே அதனையும் கொணர்ந்து இடுக எனப் பணித்தனன். கணவனுடைய ஆணை கேட்ட புனிதவதியார் என்செய்தனர்? உடனே கொண்டுவருவார்போல உள்ளே சென்ருர். அப்பழமோ முன்னரே சிவனடியாருக்கு அளிக்கப் பெற்றுவிட்டது. தலைவனிட்ட பணியை நிறைவேற்றுவ தன்ரே நற்குடிப் பெண்டிரின் இயல்பாம்.

ஆகலின் அவர் அடியாருக்கு அளித்தமையைக் கூற வியலாமல் பழம் கொணரச் சென்ருர். பரமதத்தன் பழம் கேட்கும்பொழுது இன்னுமொரு பழமுண்டே அதுவும் இருக் கின்றதா என வினவியிருப்பின், அவர் அதனை அடியாருக்கு அளித்தமையைக் கூறவியலும். அங்ஙனமன்றி இன்னொரு பழத்தையும் கொணர்ந்து இடுக என ஏவினமையின் அதனைக் கொண்டு வருதலே முறைமையாயிற்று.

## புனிதவதியார் இறையருளால் பழம் பெறுதல்.

கொண்கனுரைக்கு எதிர்கூருமல் உள்ளேசென்ற புனித வதியார் பழத்திற்கென்ன செய்வார்? வீட்டிலோ வேறு பழம் கிடையாது. தலைவற்கோ பழம் அளிக்கவேண்டும். அப் பொழுது மெய்மறந்து நினைத்தவிடத்து உதவும் விடையவர் திருவடிகளை உளத்திற்பதித்து வேண்டி நின்ருர்.

இறைவன்பால் அன்புடையோர் தமக்கு ஏதாவது இன்னல் வந்துற்றபொழுது அவனது திருவடிகளையே சிந்திப்பர். வேண்டியார் வேண்டியதே ஈயவல்ல விமலனும் அடியார்க்கெளியனாய் உற்றவிடத்தூறு தீர்ப்பான். புனிதவதியார் சிவபிரான் திருவடி மறவாச் சிந்தையினர் ஆகலின் அவர் மனவொருமையுடன் பெருமானைச் சிந்தித்திருந்தனன்று ஆண்டவன் பேரருளால் இன்சுவைத் தீங்கனியொன்று அவர் கையில் வந்திருந்தது. நங்கையார் மிகுந்த மகிழ்ச்சியுடன் அப்பழத்தைக் கொண்டுவந்து கணவனார் கலத்திலிட்டனர்.

## பழம் கிடைத்தது எப்படி என பரமதத்தன் வினவுதல்.

பரமதத்தன் அப்பழத்தை ஆவலோடு உண்டு, அதன் சுவை முன்னையமாங்கனியின் சுவையினும் விஞ்சியிருப்பதனைக் கண்டனன். அமிழ்தினுமினிய அதன் சுவையைக்கண்டு வியப்புற்ற வணிகன், மனைவியாரை நோக்கி, பெண்ணே இது யான் முன்னே கொடுத்தனுப்பிய மாங்கனியன்று; மூவுலகிலும் பெறுதற்கரிதாயிருக்கின்றது; இவ்வரிய பழத்தை நீ எங்கே பெற்றாய் என வினவினான்.

## இறையருட் பெருமையையும், கற்பு நெறியையும் சீர்தூக்கல்.

அதுகேட்ட மடவரல் இறைவன் திருவருள் வெளிப்படுக்கப்படாத பெருமையுடையதாகலின் அதனை எங்ஙனம் உரைப்பதென்று, அப்பேரருளாளனின் சீரருளைக் கூற மாட்டாதவராயும், உண்மை தவறாத கற்புநெறியாற் கணவனுரை காவாமை வாய்மையாகாதெனக் கூறுதல் விடமாட்டாராயும் இருதலைக்கொள்ளி எறும்புபோல் திகைப்புற்றனர்.

ஈண்டு பெறற்கரும் உண்மைகள் மூன்று காணப்படுகின்றன. முதற்கண் பெண்மைக் குணங்களிற் சிறந்ததாகிய மடம் வெளிப்படுகின்றது. அறிந்துவைத்தும் அறியாதார் போன்று அடங்கியொழுகுவதும், தமது அரிய பண்புகளாற் பெருமிதமடையாமலிருப்பதும் ஆகிய மடமையினாலேயே மடவாருட்சிறந்த இம்மெல்லியலார் தாம் கனிபெற்ற நெறியைக் கூறாமலிருந்துவிட்டார்.

இரண்டாவதாக ஆண்டவன் அருள் மொழியுந் தரத்ததன்று என்பது பெறப்படுகின்றது. இறைவனருள் எளிதில் கிடைத்தற்குரியதன்று எனவும், அது பெற்றவழி அதன் பெருமையுணர்ந்து அவ்வருள் வெளிப்படாமல் போற்ற வேண்டும் எனவும், அங்ஙனம் போற்றுக்கால் தம் பெருமை கூறித் திருவருளைச் சிறுமைபடுத்திப் பெரியதோர் இடருட் படுவர் எனவும் ஆன்றோர் கூறுவர்.

"மையிலங்கு நற்கண்ணி பங்கனே வந்தெனைப்
பணிகொண்ட பின் மழைக்
கையிலங்கு பொற்கிண்ண மென்றலால் அரியை
என்றுனைக் கருதுகின்றிலேன்"

என்று அன்புருவினராய மணிமொழிப் பெருமானே இரங்கி மொழிதலானும் திருவருட்பெருமையை உணரலாம்.

மூன்றுவது கணவனுரைகாவாமை கற்புநெறியன்று என்பதனையும், நெறி தவறாத வாய்மையே சிறந்தது என்பதனையும் தெளிவுறுத்துகின்றது. வாய்மை என்பது அகந்தூய்மையான் வருவதோர் உளப்பண்பு. புற அழுக்கை நீக்கி உடலைத் தூய்மைப்படுத்தற்கு நீர் இன்றியமையாது வேண்டப்படுதல் போல அக அழுக்கைப் போக்குதற்கு மெய்மை அவசியமாகும்.

வாய்மை உலகிற் புறவிருளை நீக்கும் ஞாயிறு, திங்கள், தீ என்பவைபோல, அகவிருளாகிய அறியாமையை நீக்கும்

விளக்காய்த்திகழ்வது, மக்கள் உயிரினும் ஓம்புதற்குரியது. நல்லியல்புகள் பல வாய்ந்துள்ளான் ஒருவன் வாய்மை ஒன்றும் இலனாயின் பிறரால் எள்ளி நகையாடுதற்குரியனாவான். அதனா லன்றோ நம் தெய்வப் புலவர்,

'எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு''

என அறுதியிட்டுரைத்தனர்.

முடியுடை மன்னனாய அரிச்சந்திரன் நாடு, நகர், மனைவி, மக்கள் யாவும் இழந்து இன்னலுற்றபொழுதும், வாய்மையைக் கடைப்பிடித்தன்றே என்றும் பொன்றாத புகழ்பெற்றனன்.

புனிதவதியாரிடத்தில் இயற்கைப் பண்பாகிய மடம் நீங்க எஞ்சிய இரண்டுமே வாதுற்றன, அவற்றுள் ஒன்று இறைவ னருள் வெளிப்படுத்தாமையாகிய தவ நெறி, மற்றொன்று கணவனுரைகாக்கும் கற்புடைமையாகிய மெய்ம்மைநெறி, இரண் டையும் சீர்தூக்கி இறுதியில் நிகழ்ந்ததைநிகழ்ந்தபடி சொல்லு வதே கடன் என்னுஞ் சீலமுடையராய், மைதழையும்கண்டர் திருவடிகளை மனத்தான் வணங்கி, இறைவனருளாற் கனி கிடைத்த வரலாற்றைத் தலைவனுக்குரைத்தார்.

## கற்பு மேம்பாடு.

மகளிருக்கு உயிரினுஞ்சிறந்த கற்பு எவ்வாறு போற்றப் படல் வேண்டும் என்பதனை இத்தூயவர் வாயிலாக நாம் உணருகின்றோம். வேண்டியார் வேண்டியதே ஈயவல்ல விமலன் பேரருள்பெற்ற பெருமையுடையராய இவரும், உண்மைக் கற்புநெறி தவறுதலைவிட ஆண்டவன் அருளை வெளிப்படுத்தல் நன்று எனக்கொண்டமையால் இதுவர கற்பின் பொற்பு புலனாம்.

## பரமதத்தன் மீண்டும் பழம் கேட்டல்.

சிவபெருமான் திருவருளால் கனி கிடைத்தவாற்றைக் கேட்ட இல்லத்தலைவன் பின்னும்தெளிவுருது ஐயமுற்றவனுய் நறுமலர்மேற்றிருவனைய நங்கையை விளித்து, இது ஒளி பொருந்திய சடையினையுடைய உம்பர்பிரான் திருவருளால் கிடைக்கப்பெற்றதாயின், இன்னுமொரு கனி அவனருளால் அழைத்துக்கொடுப்பாயாக என்றனன்.

ஆண்டவன்பால் பத்தி செலுத்துதலும், அவனருள் வழியொழுகுதலும், முன்னைப் பிறவிகளின் நற்றவப்பயனுல் வருவதென்பது முன்னரே கூறப்பெற்றது. புனிதவதியாரோ பிறவியிலேயே மெய்யறிவும், இறையருள்தலைக்கூடும் பெரும் பேறும் உடையவராய் இலங்கினர். அவரது மணுளனுகிய பரமதத்தனே அவரது அரிய உடனுறை கிடைக்கப்பெற்றிருந்தும், உண்மை அறிவு தலைக்கூடாமல் உலகியலில் ஈடுபட்டனன். அதனுலன்றே ஆண்டவன் அருள் எனக்கேட்டபொழுதும் தெளியாமல் மீண்டும் கனியழைத்துக் கொடுக்குமாறு மொழிந்தனன்.

அவன் அவ்வாறு கேளாமல் இருந்திருப்பின் புனிதவதியாரின் அரும்பெரும் வரலாறும் அம்மட்டோடு நின்றுவிடும். ஆகலின் எல்லாம்வல்ல இறைவன் திருவருளே அவனை அங்ஙனம் வினவுமாறு செய்தது என்று கொள்ளுதல் பொருத்தமுடைத்தாகும்.

## திருவருளால் பின்னும் பழம் பெறுதல்.

பரமதத்தன் மற்றுமொரு பழமும் கேட்டவுடன் மனைவியார் அங்கு நின்றும் அகன்றனர். அரவணி பெருமான் இணையடிகளை உளத்தால் உன்னிநின்று, எம்பெருமானே

மீண்டும் ஒரு கனி தந்தருளீராகில் என்னுரை பொய்யாகும் என உளமுருகிக் கூறினர்.

அவ்வளவில் அடியார் இன்னல் தீர்க்கும் அருள்வடிவின ஞகிய பெருமான், புனிதவதியார் கையில் கண்கவர் மாங்கனி யொன்று வந்திருக்குமாறு அருள் புரிந்தனன். புண்ணிய நெறிபயில் பூவையரும் உடனே அப்பழத்தைக் கொண்டு வந்து கணவனுர் கையிலளித்தனர்.

## மாங்கனியின் மறைவும், அவன் மனந்தடுமாற்றமும்.

பரமதத்தன் மிகுந்த வியப்போடு அதனை வாங்கினன். உடனே அத்தெய்வத்தீங்கனி மாயமாய் மறைந்து விட்டது. வணிகன் கண்ணுர மனைவியால் தன் கையிலளிக்கப்பெற்ற கனி மறைந்தவுடன், அச்சமும், வியப்பும் ஒருங்குடையனுய் உளந்தடுமாறினன். தன்பால் நிறைந்த் அன்புடைய அரும் பெறல் மனைவியை, மனந்தடுமாறிய வணிகன் ஓர் அணங் கெனவே கருதினுன். தெய்வத்தன்மையுடைய அவருடன் வாழ்வதற்கு அவன் உள்ளம் ஒருப்படவில்லை. ஆகலின் அவரைவிட்டு நீங்குதற்குத் துணிவு கொண்டனன். ஆனுல் தன் இல்லத்தில் நிகழ்ந்த அருஞ்செயலையும், அதன் பொருட் டெழுந்த தன் உளக்கருத்தையும் பிறர் அறியாமல் மறைத்து வந்தனன். கற்பினுக்கணியாய காதலியுடன் தொடர்பின்றி ஒழுகிவரும் பரமதத்தன் சிலகாலம் சென்றபின் தன் எண்ணத்தை முடிப்பதற்கு என்ன செய்வதென்று சூழ்வா ஞயினுன்.

## பரமதத்தன் கடல்கடந்து வாணிபஞ் செய்தல்.

மனைவியைப் பிரிந்துறைவதையே மனத்திற்கொண்ட வணிகன் "திரைகடலோடியும் திரவியம் தேடு" என்பதற்

கிலக்காய்த்தான் அயல்நாடுகளுக்குக் கடல் கடந்து சென்று பொருளீட்டக் கருதுவதாக உறவினர்களிடையே மொழிந்தனன். "வணிகர்க்கழகு வளர்பொருளீட்டல்" என்பது ஆன்றோர் அமுதமொழியாகலின் பரமதத்தனுடைய உளப்பான்மையை மெச்சிய உற்றார்கள் அவன் விருப்பத்திற்கிணங்க அரியதொரு மரக்கலம் அழகுபெற அமைத்தார்கள்.

அயல்நாடுகளிற் சென்று வாணிபம் புரிவோர்கள் அந்நாட்டினர் விரும்பும் அரிய பொருள்களைத் தம் நாட்டிலிருந்து கொண்டு சென்றும், ஆண்டுள்ளவைகளைத் தம் நாட்டிற்குக் கொண்டுவந்தும் விற்றுப் பொருள் சேமிப்பார்கள். இத்தகைய வாணிபம் பண்டை நாளில் மிக மேன்மையுற்று விளங்கிய தென்பதைத் தமிழ் நூல்களின் வாயிலாக நன்கு அறியலாகும்.

பரமதத்தனும் அவ்வாறே பிறநாடுகளில் விரும்பப்படும் நல்ல பொருள்களை ஆராய்ந்தெடுத்து அவைகளைப் புதிய மரக்கலத்தில் ஏற்றிக்கொண்டு, கலஞ்செய் கம்மியரில் வல்லுநர் சிலருடன் சிறந்த நன்னாளில் கடற்றெய்வமாகிய வருணனைப் பணிந்து புறப்பட்டனன். வங்கமேறிச் சென்ற வணிகன் குறித்தவிடத்தையடைந்து அங்கே சிலகாலம் தங்கி வாணிபம் நடத்தினன். வாணிபத்தில் அளவற்ற பெரும் பொருள் ஈட்டி மீண்டும் கப்பலேறிப் புறப்பட்டனன்.

## பாண்டி நாட்டில் தங்கி மணம்புரிந்து வாழ்தல்.

ஆனால் தாம் வாழ்ந்துவந்த காரைக்காலையடையவில்லை. கன்னிநாட்டை யடைந்தான். கன்னிநாடென்பது, உலகமீன்ற அன்னையாகிய உமைப்பிராட்டியார், தென்னவன் மகளாம் தடாதகை என்னும் பெயர்பூண்டு கன்னியராயிருந்து அரசு புரிந்தமையின் பாண்டி நாட்டிற்கு எய்திய திருப்பெயராகும்.

பாண்டிநாடு போந்த பரமதத்தன் அங்கே பல்வளமுஞ் செறிந்த பட்டினம் ஒன்றைச் சார்ந்து, தான் கொண்டுவந்த பொருளையெல்லாம் ஓரிடத்திற்றொகுத்து, சிறந்ததொரு மாளிகையில் தன் தொழிலை நடத்திவந்தான். அங்ஙனம் வாழு நாளில் அவ்வூரிலுள்ள புகழ்பெற்ற வணிகனொருவனின் அருமைப் புதல்வியை மணமுடித்தனன். பெறற்கருந்திருவுடைய அப்பெண்மணியுடன் இன்புற்று வாழு நாளில், தான் முன்னொரு மணஞ் செய்திருந்தமையையும், அம்மனைவியாரைப் பிரிந்து வந்தமையையும் சிறிதும் வெளிப்படுத்தாமல் முக மலர்ச்சியுடன் ஒழுகி வந்தனன். ஏன் அவ்வாறு மறைத்திருந்தான் எனின், உலகில் நல்லொழுக்கமுடைய ஒருவன் மனைவியைப் பிரிந்துறைதலும், அவளைவிட்டு வேறுஒருத்தியை மணமுடித்தலும் செய்யின், அது அவற்கு மிகப்பெரிய பழியை உண்டுபண்ணும். ஏனெனில் மங்கையர் பெற்றோரைப் பிரிந்து கணவனே தெய்வமென எண்ணிக்காதல்செய்து ஒழுகுதற்குரியராகலின், அவரை அலக்கணுட்படுத்தி ஆடவர் வேண்டியவாறொழுகுதல் அறம் ஆகாமையான் என்க.

ஈண்டுப் பரமதத்தனால் கைவிடப்பட்ட மனைவியாரோ, இயற்கை நற்பண்பும், இறையடிப் பேரன்பும், உளத்தூய்மையும் வாய்ந்திருந்தமையோடு, திருவருட்பேறுடையராகவும் விளங்குகின்றவர். இத்தகைய மனைவியைப் பிரிந்துவந்தமை பிறர்க்குப் புலனாயின், அதன் காரணம் என் என வினவாமலிரார். அப்போது தாம் மறைத்த நிகழ்ச்சி வெளிப்படும், அதனால் தெய்வமெனக்கொண்ட தம் எண்ணத்திற்கோர் இடையூறுண்டாம் என இதனையெல்லாம் எண்ணியே இவ் வணிகன் இவ்வாறு கரந்தொழுகினான்.

## பரமதத்தன் இல்லறமும், மகப்பேறும்.

அவ்வூரிலுள்ள சிறந்த வணிகர்களுடன்சேர்ந்து தொழிலியற்றிய பரமதத்தன், இருநிதிக்கிறைவனாகிய அளகை

வேந்தன் எனப் பெருநிதிபடைத்து விளங்கினன். மரக்கலங்களைக் கடல்கடந்து அனுப்பும் புகழ்பொருந்திய வாணிபமும் புரிந்தனன்.

புதிய மனைவியுடன் இல்லறமாற்றி இன்புற்றிருக்குங் காலத்து அவற்கு ஓர் பெண் குழந்தை பிறந்தது. ஒளிவளர் விளக்கனைய அம்மகவிற்கு முறைப்படி ஆற்றவேண்டிய மங்கலச்செயல்கள் யாவும் சிறக்க நடாத்தினன். பின் தான் உடனுறைதற்கு அஞ்சி நீத்துவந்த ஒப்பற்ற புகழுடைய மனைவியாரை இடைவிடாமல் நினைந்திருப்பவனுகலின், அவரைத் தன் குல தெய்வமாகவேகொண்டு அவருடைய திருப்பெயரையே தன் அன்பிற்குரிய அக்குழவிக்கும் இட்டு அழைத்தனன்.

நிதிபதி மைந்தன் இவ்வாறு மகிழ்ந்துறைதலின், தனதத்தனுர் அருமைப்புதல்வி காரைக்காலில் எவ்வண்ணமுறைகின்ருரென்று நோக்குவோம். அவரோ கைவரு கற்பும் கல்வியும் ஒருங்கு பெற்றவராகலின், பத்தினிப் பெண்டிர் கணவனைப் பிரிந்துறையுங் காலத்து இருக்க வேண்டிய முறைப்படி ஒப்பனை முதலியவின்றிப் பெருமான் திருவடிக்கண் வைத்த அன்புடன் பிற அறங்களை வழுவாதியற்றித் தலைவன் வருகையை எதிர்நோக்கியிருந்தனர்.

## புனிதவதியார் இல்லில் ஆற்றியிருத்தல்.

இப்படி கணவன் வினைமேற்கொண்ட காலத்தில் ஆற்றியிருந்து இல்லறமாற்றுதலே முல்லை எனப்படும் கற்பு ஆம். புனிதவதியார் தம் பெயருக்கேற்பத் தூய பண்புடன் வாழு நாளில் கடல்கடந்து சென்ற பரமதத்தன் அளவிலாப் பெருவளம் படைத்து பாண்டிநாட்டில் இனிதிருத்தலை அவருடைய உறவினர்கள் கேள்வியுற்றனர். உடனே நெருங்கிய கிளைஞர்

சிலரை அனுப்பி அவன் செயலை உள்ளவாறு அறிந்துவரச் செய்தனர்.

## கற்புடை நங்கையைக் கணவனிடம் சேர்த்தல்.

உண்மையுணர்ந்த உறவினர் பின் அவன் மனைவியை அவனிடமே கொண்டுபோய்விடுவது என உறுதிசெய்து, மட நடை மயில்போன்ற புனிதவதியாரை அழகிய மணிச் சிவிகை யொன்றில் திருமகள் என்ன ஏற்றித் திரையிட்டு சுற்றத்தார் பலர்சூழ வழிக்கொண்டார்கள். சில நாள் நடந்த பின்னர் செந்தமிழ்ப் பாண்டிநாட்டையடைந்து பரமதத்தன் வதிகின்ற நகர் மருங்கணைந்தனர். அவருட்சிலர் பரமதத்தனிடம்சென்று அவன் முதன் மனைவியை அழைத்துவந்திருக்கின்ற செய்தியைத் தெரிவித்தனர்.

அதுகேட்ட வணிகன் திடுக்கிட்டு, மிகுந்த அச்சமெய்தித் தடுமாறினன். பின் ஒருவாறுதேறி இளையாளொடும், புதல்வி யொடும் நேரிற்சென்று அவரைத் தரிசிப்பேன் என நினைந்து அவர்களுடன் விரைந்து வந்தான்.

## கணவன் பணிவும், புதல்வி பெயரும்.

வந்தவன் மான்பிணையென நின்ற மனைவியாரைக் கண்ட தும் அவர்திருவடிகளில் வீழ்ந்து வணங்கி, மறு மனைவியையும், குழந்தையையும் பணியச்செய்தனன். பின் அவரை நோக்கி அடியேன் உம்முடைய அருளால் வாழப்பெற்றேன். இவ்விளங் குழவிக்கும் உமது திருப்பெயரையே இட்டிருக்கின்றேன் எனப் பணிவுடன் மொழிந்தான்.

## மனைவியார் அச்சமும், உறவினர் வியப்பும்.

கணவனுர் வணங்கியதைக்கண்ட அழகிய பூங்கொடி போல்வாராய புனிதவதியார் அச்சத்தோடு உறவினர்பால்

ஒதுங்கி நின்றார். தான் தெய்வமெனக்கொண்ட தலைவன் தன்னைவந்து வணங்குவதென்றால் அப்பொழுது அவருக்கு என்ன தோன்றும்? ஒன்றும்புரியாதநிலையில் அவர் உளத்தில் அச்சமே தோன்றலாயிற்று. வணிகன் மனைவியை வணங்கியதைக்கண்ட கிளைஞர்களோ, உணர்ச்சியொன்றுந் தோன்றாமல் வெட்கமுற்றோராய் அவனை நோக்கி, எவ்வகை நற்பண்பும் இயைந்த நின் மனைவியை நீ வணங்கிய காரணம் என்னை என்றனர். பரமதத்தன் சூழ்ந்துநின்ற சுற்றத்தினரை நோக்கி, இவர் மனிதப் பிறவியினர் அல்லர், சிறந்த தெய்வ மகளாவர்என மொழிந்தான்.

## பரமதத்தன் மனைவி பெருமையைக் கூறுதல்.

நற்பெருந்தெய்வமாய இவரது கடவுட்டன்மையை யான் அறிந்த பின்னரே இவரை விட்டு அகன்றேன். இவரை நான் கடவுளென்றே கொண்டமைக்குச் சான்றாக இவ்வணங்கினைப் பிரிந்தபின் பெற்ற இக்குழவிக்கு இவர் பெயரையே இட்டுளேன். ஆகலின் யான் வணங்கினேன். நீவிரும் வணங்குமின் என்றுரைத்தனன்.

## புனிதவதியார் பேய் வடிவம் வேண்டுதல்.

உறவினர்கள் அதுகேட்டு வியப்பும் விம்மிதமும் உடையராய் ஒன்றுங்கூறாது நின்றார்கள். கணவன் மொழிகேட்ட கற்புடை நங்கை கொன்றையஞ்சடைமுடிப்பெருமான் குரைகழலை வந்தித்து, உளமொன்றிய நுண்ணுணர்வுடனெழுந்த மெய்யுரையால், கொழுநனார் குறித்த கொள்கை இதுவாயிற்று, இனி இவர்பொருட்டுத் தாங்கியிருந்த தசைப் பொதியாய இவ் வுடல் வேண்டுவதில்லை, ஆகலின் இதனையொழித்து நின் திருவடிகளைப்போற்றும் பேய் வடிவத்தை அடியேற்குத் தந்தருள வேண்டும் என உளமுருகி நின்றார்.

ஈண்டு இத்தூயவர் அருண்மொழிகளிலிருந்து இருபெரும் அரிய உண்மைகள் புலனாகின்றன. அவற்றுள் முதற்கண் மகளிர் தம் உடலை ஓம்புதல் தலைவர் பொருட்டே என்பதும், அவர்க்கென் அளிக்கப்பெற்ற உடல் அவருடைய பொருளாகவே கருதப்படல் வேண்டும் என்பதும், அவரால் விரும்பப் படாதவிடத்து எழில் சுமந்திருத்தல் ஏதந்தருவதாம் என்பதும் தெளிவாகின்றன.

புனிதவதியாரோ உலக நிலையாமை, யாக்கை நிலையாமை யாதியவற்றை நன்குணர்ந்த பேரறிஞராயிருந்தும், கற்புடை மகளிர் ஆற்றவேண்டிய கடமைப்படி கணவன்பொருட்டு அவருடைய உடைமையாகக் கருதியிருந்த தம் உடலைப் பேணியிருந்தனர். அவனால் கைவிடப்பட்டபொழுது பல்லாற்றானும் இன்னல்தரும் எழில் பொருந்திய யாக்கையை விரும்பவில்லை.

இரண்டாவதாக, ஆண்டவன் அருளைப்பெற்று உய்திபெற வேண்டியது கேவலம் கட்புலனாகிய உடலன்று என்பதும், எவ்வகை யாக்கையாயினும் அதனகத்துப்பொருந்திய உயிரே வினைப்பயனை யனுபவிக்கும் வன்மையுடையது என்பதும், இறைவன் இன்னருள் உடற்பொதி நோக்கியது அன்று, உயிர் நோக்கியது என்பதும் விளக்கமாகின்றன.

## பேயுருவேண்டக் காரணம்.

கணவனார் கருத்துணர்ந்த மாபெரும் பத்தினியார், பின்னர் எழில்பொருந்திய யாக்கையுடனிருந்து இல்லறமாற்ற எண்ணாமல் இறைவனடியடையவே உறுதிகொண்டார். அப்பொழுது காதலன்பாலிருந்த அன்பும் சேர்ந்து கண்ணுதற் பரமனிடத்திலேயே பொங்கியெழுந்தது. அவர் குடும்ப வாழ்வில் ஈடுபடாவிடினும் உடலை ஏன் வெறுக்க வேண்டும் எனின், இயற்கையிலேயே இல்லத்தைவிட்டு வெளியேறாத

நற்குடியிற்றேன்றியவர். அத்துடன் இளமையும், எழிலும் மிக்கவர். உயர்குடிப் பெண்டிராய இவர் ஆண்டவனருளை நாடி வெளிப்படினும், உலகியற்கு ஒவ்வாத அவ்வெழில்பெறு யாக்கையே தமக்கும் பிறர்க்கும் ஏதந்தருவதாம் என எண்ணினர்.

ஆகலின் இறைவன் திருவடிப்பேற்றுக்கு இடையூருய் நிற்கும் இப்பெண் வடிவத்தையொழித்துக் கண்டோரால் எள்ளி நகையாடுதற்குரியதும், அச்சமெய்துதற்குரியதும்ஆகிய பேய் வடிவத்தையே விரும்பி வேண்டினர். அவ்வடிவந் தானும் புறத்தார்க்குத் துன்பமொன்றுமே விளைக்கும் ஏனைய பேய் வடிவம்போலாது பெருமான் சேவடிகளையே போற்றும் நற்கணத்துள் ஒன்ருக இருக்கவேண்டும் என நினைந்தார்.

பின்னுங்கன் திருவடியைப் பெறுதற்குரியது உடலின் எழிலன்று. உயிரின் உறுதியான பத்தியே என்பதை நன்கு உணர்ந்த புனிதவதியார் கடவுளை வேண்டிநின்றபொழுது, அம்பலவாணன் திருவருளாலே மேனெறியாகிய மெய்யுணர்வு தலைக் கூடிற்று. மெய்ஞ்ஞானந்தோன்றவே அரும்பெருஞ் செயலாய வேண்டிற்றே பெறுதலும் எளிதாயிற்று.

## பேய் வடிவம் பெறுதல்.

உடனே புனிதவதியார் அழகுசுமந்திளைத்த தம் அருண் மேனியை உதறினர். அவ்வளவில் உடலிலுள்ள தசைகளெல் லாம் அற்றுவிழுந்தன. உடம்பு என்புக்கூடாயிற்று. கண்டோர் வியக்கும் பேய் வடிவமும் பெற்றனர். உலகில் ஆன்மாக்கள் வினைப்பயனெழிந்து, உய்தியடையுங்காலத்து, உண்மையறிவு தலைக்கூடும். அப்பொழுது அகப்பற்று ஒழியும். ஆகவே புறப்பற்று தானுகவே பகலவனைக்கண்ட பனியென நீங்கும்.

இத்தகைய மேனெறிபெற்ற மெய்யடியார் புறப்பற்ருகிய ஊனடை வனப்பையெல்லாம் உதறி எற்புடம்பாய பேயுருவத்தை விரும்பி யேற்றனர். பேய் வடிவம் தீவினைப்பயனுல் பெறுவதுண்டு. அஃது கண்டோரை அச்சுறுத்து அவலம் விளைத்து உயிரையும் பறிக்கும் இழிதகையுடையதாம்; இறந்தோருடலைத்தின்று ஈமக்காட்டில் திரியும் பேய்களும் உண்டு என்பர்.

காரைக்கால் வணிகன் மகளார் பெற்ற பேய் வடிவமோ விண்ணகமும் மண்ணகமும் துதிக்கும் பெருமைசால் வடிவமாகும். அது ஈசன் திருவடியை இடையருது வந்திக்கும் சிவகணங்களுள் ஒன்ருக வேகாணப்பட்டது. இவ்வடிவைத் தாம் வேண்டிப்பெற்றமையையும், இது இறைவன் திருக்கணத்தில் ஒன்ருவதையும் "நற்கணத்தில் ஒன்ருய நாம்" என்று பெருமிதத்தோடு கூறும் இவர் திருவாக்கினுல் உணரலாம்.

## உறவினராதியோர் செயலும் அற்புதத் திருவந்தாதியும்.

பெண்ணிற் பெருந்தக்காரின் செப்பரும் பெருமையை யுணர்ந்த வானவர் மலர் மழை பொழிந்தனர், வான துந்துபியின் பேரொலி உலகெலாம் நிறைந்து ஓங்கியது, உம்பரும் இம்பருமாய சான்ருேரும் முனிவரும் மகிழ்ச்சி மீக்கூர்ந்து தம்முட் கலந்து பேசினர்; அளவிலாச் சிவகணங்களெல்லாம் பேருவகையோடு நாட்டியமாடின. இவரது அருஞ்செயலையும் ஒப்பிலாப் புகழையுங்கண்ட உறவினர்கள் உடனே இவரை வணங்கி அச்சத்துடன் அகன்றனர்.

பேயுருத் தாங்கிய பெருந்தகையார், தம்பால் திருவருளால் தோன்றிய உண்மையறிவினுல் உமையவள் தலைவனைப்

பாடுவாராயினர். மெய்யுணர்வின் ஒருமையினாற் பாடிய இச் செந்தமிழ்ப் பாக்களே அற்புதத் திருவந்தாதியெனப்படும். பின் திருவிரட்டை மணி மாலை என்னுந் திப்பிய நூலையும் அருளிச் செய்தார்கள். இறைவன்பாற் பொங்கியெழுந்த பேருணர்வும் திருவருளும் தலைக்கூடுதலினால் முப்புரஞ் செற்ற முதல்வனெழுந்தருளி இருக்கும் வெள்ளி மால் வரையை யடைந்து வழிபடவெண்ணி வழிக்கொண்டார். வழியில் கண்டோர்கள் வியப்புற்று அஞ்சிப் பேயின் தன்மை யைக் கூறிப் பெயர்ந்தோடலாயினர்.

## கயிலைமலைக்கு வழிக்கொள்ளுதல்.

அதுகண்ட பேயார் உலகினரின் அறியாமைக்கு வருந்தி; உம்பர்பெருமான் ஒருவனே என்னை அறியவேண்டுபவன், உண்மையுணரா உலகமக்கள் அறிந்தாலென்ன அன்றி அறியாவிடிலென்ன என்றுரைத்துக்கொண்டே வடதிசை நாடுகளையெல்லாம் மனத்தினுங் கடிதிற் கடந்து சென்று மூவிலைவேற்படை கொண்டிருக்கும் கொன்றை சூடிய செஞ்சடைப்பெருமான் மேவிய திருக்கைலையின் மருங்கணைந் தனர். அப்பொழுது ஆண்டவன் அமர்ந்திருக்கும் திருமலை யின்மீது காலினால் நடக்க அஞ்சினர்.

உலகில் இறைவனருள் பெற்ற பெரியார்களுள் ஒருவர் திருவவதாரஞ்செய்த இடத்தை மற்றொருவர் மிதிக்க அஞ்சுவர். மிகப்பெரியாராகிய அவர்கள்பாலெழுந்த பத்தி மிகுதியால் இங்ஙனம் எண்ணுதல் இயல்பே; சைவ சமய குரவருள் முதல்வராகிய திருஞானசம்பந்தப்பெருமான் பிறந் தருளிய சீகாழித் திருப்பதியை தம்பிரான்றோழராய ஆலால சுந்தரர் காலால்மிதிக்க அஞ்சினமையைச் சேக்கிழார் பெருமான் மிக அழகாகக் கூறியிருக்கின்றார்கள்.

மக்களாய்ப் பிறந்தோரிலேயே பெரியோரெழுந்தருளி யிருக்கும் இடங்கட்கு இவ்வளவு பெருமையானல், உலக முதல்வராய பெருமான் வீற்றிருக்குந் திருமலையை மிதித்து ஏற அருள்ஞானந்தலைப்பட்ட இவர் ஒருப்படுவரோ ?

## தலையினுல் நடந்து கயிலையில் ஏறுதல்.

உடனே தலையினுல் நடந்தேறத் துணிந்தார்.

தலை என்பதை அறிவுகளுட்டலையாய பதிஞானமென்றும், அதனுல் நடந்தாரென்பதைப் பதிஞானத்தால் நடந்தா ரென்றும் கூறுவர். அது எங்ஙனமாயினும் இவர் வரலாற்றை யுரைக்கும் பலவேறு பெரியார்களும் தலை என்றே கொண்டிருக் கின்றமையின் யாமும் அவ்வாறே கொள்வோம். சான்ருேர் சென்ற நெறிவழிச்சேறல் கடனன்ருே ?

எல்லையற்ற அன்புடன் இவர் தலையினுல் நடந்து சென்று சங்கரன் வீற்றிருந்த வெள்ளிமலையின்மேல் ஏறும் போது, கண்ணுதல் பாகத்தமர்ந்த இமயவல்லியாரின் திருக் கண்ணேக்கம் இவர்பால் எய்தியது. பெருமானும், பிராட்டி யாரும் ஒருங்கமர்ந்திருக்குமிடத்து, முதலில் இறைவி திரு நோக்குச் சார்ந்ததென்பதில் ஓர் அரிய தத்துவம் காணப் படுகின்றது.

## சத்திநிபாதம் அடைதல்.

உலகில் ஆன்மாக்கள் முறைப்படி உய்திபெற்று இறை யடிப் பேரின்பத்தை யெய்துங்காலத்து அதற்கு முதற்படியாகத் திகழ்வது இறைவி திருவருணேக்கமே என்பது சைவ சித்தாந்தப் பெருநூன்முடிபாகும். இதுவே சத்திநிபாதம் எனப்படும். உயிர்கள் பிறவியொழிந்து பேரின்பமுறுதற்குத் தாண்டவேண்டிய வாயில்கள் மூன்று. அவை முறையே

இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் எனப்பெயர் பெறுவனவாம். அவற்றுள் இருவினையொப்பு என்பது சிவ புண்ணியப் பேறுடைய உயிர், நல்வினை தீவினைகளான் வரும் இன்பதுன்பங்களை உவப்பு வெறுப்பின்றி ஒரு தன்மையாகக் கொள்ளுதல். மலபரிபாகம் என்பது, இருவினையொப்பு உண்டாய ஆன்மா ஆணவம் முதலாய மலங்களை யொழித்துப் பக்குவப்படுதலாம். இங்ஙனம் மலநீக்கமுண்டாகவே திரு வருட்சத்தி பதிதலாகிய சத்திநிபாதமுண்டாம். இதனை சத்தி வீழ்ச்சி என்றும் கூறுவர்.

சத்திவீழ்ச்சி என்றால் பறவைகள் பல சேர்ந்திருக்கும் ஓரிடத்தில் திடீரெனக் கல் ஒன்று வீழ்ந்தால் அவை பல திசையினும் பிரிந்துபோதல்போல, ஆன்மாவைப் பிணித்து நிற்கும் மலங்களினிடையே சத்தி வீழ்தலால், உயிரை விட்டு நீங்காமற் சுற்றிக்கொண்டிருக்கும் மல முதலியனவும் பறந் தோடி விடும்படியான சிறப்புடையதாகும். இத்தகைய சத்திநி பாதம் எய்திய உயிரே வீடுபேற்றை யடைதற்குரியதாம். எனவே சத்திநிபாதம் என்பது உலகமீன்ற அன்னையார் பக்குவமடைந்த வுயிரை ஆண்டவனிடத்துய்க்கும் அருட் பெருஞ் செயலாதல் போதரும். சத்திநிபாதம் எனினும் சத்தி பதிதல் எனினும் ஒக்கும்.

உலகியலினும் அன்னையானவள் தம் ஆருயிர்க்குழவி கட்குப் பாலூட்டிச் சீராட்டி வளர்ப்பதால், குழந்தைகள் முதலில் தம் அன்னையையே யறியும். பின்னர் அவள் காட்டிச் சொல்லிக் கொடுக்க ஐயன் முதலாய பிறரையறிந்து அழைக்கும். மற்றும் ஓரறிவுயிர் ஆதியாய அனைத்துயிரும் இவ்வாறு தாயின் வாயிலாகவே தம் வாழ்வை நடத்துவதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். உலகிலுள்ள உயிர்த் தொகுதிகள் ஒவ்வொன்றும் தாயின் அன்பையும் அருளையும் பெற்று வாழ்வன என்றால், உலகம் யாவையும் ஈன்ற அன்னை

யாகிய உமையம்மையின் தண்ணருள்பெற்றே தந்தையாகிய இறைவனையடைய முடியும் என்பது அங்கையின் நெல்லி யன்றோ ?

அருட்பெருஞ்சத்தியாகிய மலைமகள் தம் ஆருயிர்க் குழவி களாம் ஆன்மாக்களை நல்வினை தீவினைகட்கு ஏற்ப உவந்தும், ஒறுத்தும் நல்வழிப்படுத்தி ஆண்டவன்பால் உய்த்துவிடும் ஒப்பற்ற அன்புடைய அன்னையாவாள். இன்னணம் இறைவி வாயிலாகப் பெருமானையடைந்து பேரின்பமெய்தும் நிலையை நிட்டைநிலையெனச் சான்றோர் கூறுவர்.

*" மெய்யருளாம், தாயுடன்சென்று*
*தாதையைக்கூடி பின் தாயை மறந்து*
*ஏயுமதே நிட்டையென்றான் எழிற்கச்சி யேகம்பனே "*

என்னும் பட்டினத்தடிகள் திருவாக்குங் காண்க.

பேயார் வருகையை நோக்கிய எம்பிராட்டியார் மிகுந்த வியப்பெய்தித் தம் தலைவனை பெருமானைப்பணிந்து நோக்கி, தலையினால் நடந்து இங்கே ஏறிவருகின்ற என்பு யாக்கையின் அன்பு இருந்தபடி என்னே, என்று வினவலுற்றார். அது கேட்ட முழுமுதற்பெருமான் ஈண்டுவருபவள் நம்மைப்பேணும் அம்மையாவாள். பெருமைசான்ற இவ்வடிவமும் நம்மை வேண்டியே பெற்றனள் என்று பெருமாட்டியை நோக்கி யருளிச்செய்தனர்.

## *பெருமான் 'அம்மையே' என அழைத்தல்.*

அவ்வமயத்தில் பேயாரும் அருகணைய அங்கணர் அவரை நோக்கி, " அம்மையே " என ஒப்பற்ற உயர்மொழியால் உலக மெலாம் உய்யும்படி அழைத்தருளினர். உலகமனைத்திற்கும் அன்னையும் அத்தனுமாய் விளங்குகின்ற ஆண்டவன்,

*"தாயுமிலி தந்தையிலி தான்றனியன்"*

*"பிறப்பிறப் பில்லாப் பெரியோன்"*

என ஆன்றோரெல்லாம் அறுதியிட்டு அழைக்கும் ஒப்புயர் வில்லாஉயர்பொருள், மறைகளை அருளிச்செய்த தம் அருமைத் திருவாயால் இப்படி அம்மையே என்று அழைத்தனர் என்றால் இவ்வம்மையார் பெருமை எம்மால் எடுத்துரைக்குந்தரத்ததோ?

ஆதியும்அந்தமுமில்லா அரும்பொருள் அம்மையே என்று அழைத்த மாத்திரத்தே பெறற்கரும்பேறுபெற்ற அம்மையார் தாயைக்கண்ட சேயைப்போலக் குழைந்துருகிப் பேரன்புடன் 'அப்பா' என்று கூறிக்கொண்டே திருவடிகளில் வீழ்ந்து வணங்கியெழுந்தார். அருள் வடிவினனாகிய ஐயன் பணிந் தெழுந்த அம்மையாரைப்பார்த்து நம்பால்வேண்டுவதென்னை? என வின்வியருளினர்.

## அம்மையார் அப்பனிடம் வரம் வேண்டல்.

அம்மையார் ஆண்டவனை வணங்கி, எம்பெருமானே அடியேற்கு இறவாத இன்பமயமாகிய அன்பு வேண்டும் என்றார். இறைவன் அன்புருவினனாகலின் அவனை வணங் குதற்குரிய அன்பு அழிவிலாப்பேரின்பந்தருமாதலின் முதற் கண் அன்பு வேண்டும் என்றனர். பின், "பிறவாமை வேண் டும்"எனவேண்டினர். ஏனெனில்,உலகில் "பிறந்தோருறுவது பெருகிய துன்பம், பிறவாருறுவது பெரும்பேரின்பம்" எனத் தண்டமிழாசான் கூல வாணிகன் சாத்தனார் தெளிவுறுத்து மாற்றானறிக. பிறவியுண்டாயின் துன்பமும் உடன் உண்டாம். அஃதின்றேல் துன்பமில்லையாவதோடு இன்பமே என்றும் உளதாவதாம். ஆகலின் பிறவாமை வேண்டும் என்றார். உயிர்கண்மாட்டு, பற்றுக்கள் அற்றவிடத்துப் பிறப்பு அறும், பிறப்பற்றவிடத்துத் துன்பம் நீங்கி இன்பம் தோன்றும். இத

ளுலேயே ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்ருேரெல்லாம், பிறவாமை வேண்டும் என அதன் இன்பத்தை உணர்ந்து வேண்டுகின்றனர். இதனை,

"வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்"

என்னும் தெய்வத் திருமறையாகிய வள்ளுவர் வாய்மொழி அறிவுறுத்துதல் காண்க.

பிறவாமையை வேண்டிய அம்மையார் அத்துடன் நின்று விடவில்லை, ஏன்? தாம் தமது கருத்தை இறைவனுக்குத் தெரிவித்தனர். அவன் அங்ஙனமே செய்யின் நலமே, ஆனல் ஆண்டவன் திருவுளம் எதுவோ? அதனை அறியார். மற்றும் தாம் மீண்டும் பிறவியெய்துதற்குரிய வினைப்பயன் தம்பாலிருப்பின் என் செய்வது? அதனால் எனக்குப் பிறவாமைதான் வேண்டும் என மன்ருடுதல் ஆண்டவனுக்கு ஆணையிடுதல் போலாம் என எண்ணி மற்ருென்று வேண்டினர். அது, அப்பனே அடியேன் ஒருவேளை மீண்டும் பிறவியெடுக்க நேர்ந்தால் உன்னை மறவாதிருக்கும் வரத்தைத் தந்தருள்வாயாக என்பது. உலகில் தோன்றிய உயிர்கள் யாவும் ஒரு பிறவியிலேயே உய்தியடைந்து வீடு பெறுவதென்பது இயலாத செயல். நல்வினைத் தீவினைப் பயன்களுக்கேற்பப் பலப்பல பிறவிகளெடுத்து உழன்று, இறுதியில் இறையடியடையும்பேறு எய்திய வழி பிறவியற்றுப் பேரின்பமுறும் என்பதையும் அங்ஙனந்தோன்றும் உயிர்த்தொகுதிகள் எண்ணிறந்தனவாம் என்பதையும் உணர்ந்த மெய்யறிஞர்கள் தாம் எப்பிறப்பு அடைந்தாலும் இறைவன் திருவடியை மறவாதிருக்கும் அரிய வரத்தையே வேண்டுவர் என்பதனை,

"புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா
வுன்னடி யென்மனத்தே,
வழுவா திருக்க வரந்தர வேண்டும்"

என்னும் அப்பர்பெருமான் அருள்வாக்கு முதலியவற்ருனறிக.

பிஞ்ஞகன்ருள் மறவாமை வேண்டிய காரைக்காலம்மையார், மேலும் 'அறத்தினுருவாய அண்ணலே நீ ஆடும் பொழுது நின் தூக்கிய திருவடியின் கீழிருந்து அடியேன் மகிழ்ச்சியுடன் பாடிக்கொண்டிருக்கும் பெருவாழ்வை எளியேற்குத் தந்தருளல் வேண்டும்' என மன்ருடினர். மறவாமை வேண்டும் என்ற அம்மையார் பின்னும் ஏன் மகிழ்ந்து பாடிக் கொண்டிருக்க வேண்டும் என்று கேட்டார் எனின், இறைவன் நினைப்பவர் மனம் கோயிலாக்கொண்டுள்ளவனுகலின், உளக் கோயிலினுறையும் உம்பர்பிரானை மனத்தாற் சிந்தித்தல் மாத்திரம் போதாது. அவனது சீரையும், சிறப்பையும் அன்பு குழைந்துருகும் அழகிய மொழிகளால் வந்தித்தலே ஏற்புடைத் தாம். மனம், மொழி, மெய்களால் ஆண்டாற்கு அடிமை புரியும் தொண்டுகளில் மொழித்தொண்டே மிகச் சிறந்ததாகும். அது முன்னைய மனத்திற்கும் பின்னைய மெய்க்கும் இடைநின்று அவற்றினியைபும் உடையதாய்ப் பத்தியை விளக்கவல்லது ஆம்.

அத்தகைய மொழித்தொண்டு தானும் திருக்கோயில் முதலான இடங்களில் பெருமானின் திருமுன்னின்று ஆற்றப் பெறுதல் சிறப்புடைத்து. அதனுலன்ரே சமய குரவராதியோர் தலங்கள்தோறுஞ் சென்று திருக்கோயிலில் வழிபட்டுப் பாடுவாராயினர். உலகில் மக்கட்பிறவியெடுத்தோர் அவ்வவர் அறிவின் நிலைக்கேற்ப வழிபடும் திருவுருவங்கள் பலவாம். அவற்றுள் உயிர்களைத் தோற்றுவித்தல் முதல் திருவடி யின்பம் அடைவிக்கும் வரை உள்ள ஐந்தொழில்களையும் ஒருங்கு காட்டவல்லது அம்பலவாணனுடைய அருளுருவத் திருமேனியாகும். என்பதனை,

"தோற்றந் துடியதனில் தோயுந் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்—தோற்றமாய்

*ஊன்றுமலர்ப்பதத்தே உற்றதிரோ தம்முத்தி*
*நான்ற மலர்ப்பதத்தே நாடு"*

என்னும் ஆன்றோர் திருவாக்கு முதலியவற்றானறிகின்றோம். அம்மையார் அப்பெருமானுடைய குஞ்சித்த சேவடியின் கீழிருந்து பாடும் பெரும்பேற்றை விரும்பினார். "பத்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ" என்று மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களால் சிறப்பித் துரைக்கப்பெற்ற சேக்கிழார் பெருமான்,

*"இறவாத இன்பஅன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்*
*பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை [யென்றும்*
*மறவாமைவேண்டும் இன்னும்வேண்டும் நான் மகிழ்ந்து [பாடி*
*அறவாநீ ஆடும்போதுன் அடியின் கீழிருக்கவென்றார்"*

என்று அம்மையார் கூற்றாக அருளிய இவ்வரும்பெறற் பாவின் விளக்கமே இதுவரை கூறப்பெற்றது.

இறைவனுடைய மெய்யருள் கைவந்த திருநெறிச் செல்வர்கள் இத்தகைய பெறற்கரும்பேறுகளையே ஆண்டவன் பால் வேண்டுவர் என்பதனை

*"வேண்டும் நின்கழற்கணன்பு பொய்மைதீர்த்து [மெய்ம்மையே*
*ஆண்டு கொண்டு நாயினேனை ஆவவென்றருளுநீ*
*பூண்டு கொண்டடியனேனும் போற்றி போற்றியென்றும் [என்றும்*
*மாண்டுமாண்டு வந்துவந்து மன்ன நின் வணங்கவே"*

என்னும் மணிமொழிப் பெருமான் அருள்வாசகத்தினாலும் அறிக.

## திருவாலங்காட்டில் திருநடங்கண்டு பதிகம் பாடுதல்.

அம்மையாருடைய அன்புமிக்க வேண்டுகோள் கைவருமாறு, அருள்புரிந்த ஆண்டவன் பின் அவரை நோக்கி அம்மையே தென்றிசைக்கண் உள்ளதாகிய பழமை வாய்ந்த திருவாலங்காட்டை அடைந்து, அங்கே நம்முடைய திருநடங் கண்டு மகிழ்ந்து ஆடுகின்ற திருவடியின்கீழ் எப்பொழுதும் பாடிக்கொண்டிருப்பாயாக என்றருளிச் செய்தனர். அன்புருவினராய அம்மையார் இன்பவடிவினனுயை இறைவன் திருவருளைப் பெற்று அகமகிழ்ந்தார். பின்,

மறைகளின் உண்மைப்பொருளாகிய மலைமகள் தலைவனை வணங்கி விடைகொண்டு திருவாலங்காட்டை நோக்கி வழிக் கொண்டனர். ஒப்பிலாப் பேரன்புடைய அவர் செப்பருந் திப்பியமுடைய அத்திருப்பதியைத் தலையினுலே நடந்து சென்றடைந்தார். ஆலங்காட்டில் ஆண்டவன் அண்டமுற நிமிர்ந்தாடுகின்ற அழகிய கோலத்தைக் கண்டவுடன் பதிகம் பாடித்துதித்தனர். முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம் பொருளின் உலகம் போற்றும் உத்தமநடங்கண்டு கசிந்துருகும் அன்புடன் பாடிய அரிய பாக்களே இன்றும் மூத்த திருப்பதிகம் என வழங்கப் பெறுவதாம்.

அம்மையார் பின்னும் ஆராதபெருங்காதலுடன் வணங்கி ஐயனது பேரின்பப் பெருங்கூத்தைக் கண்டு வியப்பெய்தி "எட்டியிலவம்" என்றெடுத்துப் பெருமானுடைய திருநடத்தை விளங்கப் பாடித்தொழுதனர். இதுவும் மூத்த திருப்பதிகம் என்றே கூறப்படும்.

## வீடு பேறு.

மாநடம்கண்டு மகிழ்வுடன் அவன் தூக்கிய திருவடியின் கீழமர்ந்து அம்மையார், தம் அருட்டந்தையாரைப் பலவாறு

வுரையினும் இச்செய்யுள் எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றது. ஆகலின் அற்புதத் திருவந்தாதியின் பெருமைக்கு இவ்வரிய பாவொன்றுமே போதும்.

திருவிரட்டை மணிமாலை என்பது அற்புதத் திருவந்தாதிக்குப்பின்னர் அம்மையாரால் பாடப்பெற்றது. இதுவும் தமிழ்ப் பிரபந்தங்களுள் ஒன்று. கலித்துறையும், வெண்பாவும் ஆகிய பாமணிகளானியன்றமையால் இது இப்பெயர்த்தாயிற்று, இந்நூல் இருபது பாக்கள் கொண்டது. இதன்கண்ணும் சிவபெருமானுடைய ஒப்புயர்வில்லாச் சீருஞ்சிறப்பும் மிக அழகாகக் கூறப்பெற்றுளது.

மூத்த திருப்பதிகம் என்பது அம்மையார் திருவாலங்காட்டில் திருநடங் கண்டபொழுது பாடியதாகும். பத்துப் பாக்கள்கொண்டு முடிவதற்குப் பதிகம் என்றுபெயர். இப்பதிகங்களை மூத்ததிருப்பதிகம் என மொழிவதென்னையெனில், இவை இப்பொழுது பதிகங்கள் என்று சொல்லப்படும் தேவாரம் முதலியனவெல்லாம் தோன்றுதற்கு முன்னர் அருளிச்செய்யப்பட்டமையேயாகும். தேவார முதலியவற்றின் ஆசிரியர்களாகிய சமயகுரவர்களுள் முதல்வராகிய திருஞானசம்பந்தப்பெருமான், தொண்டை நாட்டுத் திருப்பதிகளையெல்லாம் பாடிப்பரவித் திருவாலங்காட்டிற்கு அணித்தாக வரும்பொழுது, அத்திருப்பதியைத் தம்முடைய திருவடிகளால் மிதிக்க அஞ்சினர்.

இம்மையிலே பூமியிலுள்ளோர் யாவருங் காணுமாறு ஏழுலகும் துதிசெய்ய எம்மை ஆளுடைய அம்மை திருத்தலையாலே நடந்து வணங்கிய திருப்பதியை எப்படி மிதிப்பது என்று, ஆளுடைய பிள்ளையார் அப்பதியின் புறத்தேயிருந்து வணங்கினர் என்றால் புகலிவேந்தருக்கு, அம்மையாரிடத்துளதாம் பேரன்பு இருந்தபடி என்னென்றுரைப்பது!

எனவே ஞானசம்பந்தர் திருவாலங்காட்டையடைதற்கு முன்னரே அம்மையார் அங்கே தலையினால் நடந்து சென்றமை பெறப்படுகின்றது. ஆகவே சம்பந்தர் காலத்திற்கு முன்னர் விளங்கிய அம்மையார் அருளிய பதிகங்களும், பிள்ளையார் அருளிய பதிகங்களை நோக்க மூத்த திருப்பதிகம் எனப்பெயர்பெற்றது. மூத்தல், முந்துதல், முற்படுதல் என்ற பொருளிற்று; ஆண்டின் முதிர்வு என்று கொள்ளினும் இழுக்காது.

இப்பெயருடைய பதிகங்கள் இரண்டு; அவற்றுள் முதற் பதிகத்தில் பாடல்தோறும் ஆண்டவனை அப்பன் என்றே அம்மையார் அழைக்கின்றார். அற்புதத் திருவந்தாதியில் இறைவனைக் "கண்டு எந்தை என்றிறைஞ்சிக் கைப்பணி செய்யேனேல்" எனச்சூளுறவு செய்தவர் பின் கைலைமால் வரையில் பெருமானைக் கண்டு அவரால் அம்மையே என அழைக்கப்பெற்று, தாமும் அவரை அப்பா என உள்ளன் போடு உருகியழைத்து, அவரருள்வழி ஆலவனம் எய்திய பொழுது பெருமானை அப்பன் என அழைப்பதன்றி வேறு என் சொல்லி அழைக்கவியலும்.

இப்பதிகங்களில் பெருமான் திருநடத்தியல்பும், ஆடுதற் குரிய அரங்கினியலும், ஆட்டத்திற்கொத்த இயங்களின் வகையும் கூறப்படுதலால் இசைத்தமிழிலும் நாடகத்தமிழிலும் இவருக்கிருந்த புலமையும் விளக்கமாகின்றது.

பூவுலகில் பெண்ணாய்ப் பிறந்து கல்வியறிவு ஒழுக்கங் களிற் சிறந்து விளங்கிக் கற்புக்கடம் பூண்டு, சிவனடிப் பேரன்பினால் அரும்பெறல் நூல்களியற்றிப் பெறற்கரும்பேறு பெற்ற இப்புனிதவதியம்மையாரின் தூய நல்வாழ்வு தமிழ் மக்கள் அனைவரும் போற்றி வணங்குதற்குரியதாம்.

அம்மையார் திருவடி துணை.

௨

# ஆண்டாள்.

*அன்னவயற் புதுவை யாண்டாள் அரங்கற்குப்*
*பன்னு திருப்பாவைப் பல்பதியம் — இன்னிசையால்*
*பாடிக் கொடுத்தாள்நற் பாமாலை பூமாலை*
*சூடிக் கொடுத்தாளைச் சொல்லு.*

**— உய்யக்கொண்டார்.**

நிலவுலகிலே திருமகட்கு இழைத்ததிலகமென விளங்குவது பாண்டி நாடாகும். திரிபுரமெரித்த விரிசடைப்பெம்மானும், உலகமீன்ற உமைப்பிராட்டியும், குன்றமெறிந்த குமரவேளும் அருளரசு செலுத்தி அருந்தமிழ் புரந்தமையால் செந்தமிழ் நாடு என்று சிறப்பித்து ஓதப்பெறும் அத்திருநாட்டில் காவற் கடவுளராகிய திருமால் கோயில்கொண்டிருக்கும் திருப்பதிகளும் பலவாம்.

அவற்றுள் ஸ்ரீ வில்லிபுத்தூர் பல்வகை வளங்களுஞ் செறிந்து வடபெருங் கோயிலுடையானுடைய ஒப்பிலாப் பேரருளுடன் திகழ்வது. அத்திருப்பதியின்கண் நெடுமால் ஊர்தியின் திருவமிசராய்த் தமிழகம் தழைக்க அவதரித்த பெரியார் விட்டுசித்தர் என்பவர். இவர் மறைநூற்பொருள்களை யெல்லாம் ஓதாதுணர்ந்து, வல்லபதேவன் என்னும் பாண்டிய மன்னனால் தூக்கப்பெற்றிருந்த பொற்கிழியைப் பெற்றவர். அப்பொழுது அவ்வேந்தனால் 'பட்டர் பிரான்' என்னும் சிறப்புப் பெயரும் அளிக்கப்பெற்ற பெருமையுடையவர்.

மற்றும் இவர் திருமாலுடைய அவதாரங்கள் பலவற்றிலும் கண்ணபிரானுடைய அவதாரத்தையும், சீரையும், சிறப்பையும்பற்றி உளமுருகிப்பாராட்டிப் பாமாலை சாத்துவார்.

பட்டர்பிரான் திருவாயினின்றெழுந்த அரிய பிரபந்தமே பெரியாழ்வார் திருமொழி என்னும் பெயருடன் வைணவ சமய முதல்நூலாகிய நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் முதற்கண்மிளிருகிறதென்றால் பெரியாழ்வார்பெருமை பேசுந்தரத்ததோ?

வேயர்குலத் தோன்றலாராகிய இவர், திருநந்தனவனஞ் சமைத்து நாண்மலர்களால் அழகிய மாலை முதலியன தொடுத்துத் தம் பெருமானுக்குச் சாத்திவரும் சிறந்த மெய்த் தொண்டராவார். அவர் ஒரு நாள் தமது பூங்காவினுள்ளே திருத்துழாய் நடுதற்குப் பாத்தியமைக்குமாறு கொத்திக் கொண்டிருந்தார். அப்பொழுது கொத்தின நிலப்பகுதியில் அழகெலாந்திரண்டு ஒருருக்கொண்டாலனைய எழிலமைந்த பெண் குழவியொன்று தோன்றியது. ஆடித்திங்கட் பூர நன்னாளிலே பூமிப் பிராட்டியின் திருவமிசமாய்த் தோன்றிய அத் தெய்வக் குழந்தையைக் கண்ணுற்ற பட்டர் பிரான் பெரிதும் வியப்பும், விம்மிதமும் உடையராய், ஈதென்ன, பண்டு மிதிலை நாட்டரசனாகிய சனகன் வேள்விபுரிதற்கு உழுத நிலத்திலே, திருமகளாகிய சீதா பிராட்டி அவதரித்தாற்போல் ஈண்டு இப் பெண் குழவி அவதரித்துளதே என்று அகமகிழ்ந்து எடுத்துப் பாராட்டினர்.

பெரிதும் வறுமையாற் பற்றப்பட்ட ஏழையொருவன் மிகப்பெரிய நிதிக்குவையைக் கண்டாற்போல உளமகிழ்ந்த பெரியாழ்வார் தாம் கண்டெடுத்த கண்மணியனைய அம்மகவிற்குக் "கோதை" எனத்திருப்பெயரிட்டு மிகவும் அருமையாக வளர்த்து வந்தார். வளர்பிறையைப் போல நாளும் நாளும், அறிவுந் திருவும் ஒருங்கு வளர்ச்சியெய்திக் காண்போருள்ளம்

களிப்பெய்த நிலவிய கோதையார் நெடியோன் அன்பிலும் தலைசிறந்து நிற்றலைக் கண்ணுற்று அவரைப்பெற்ற ஞான்றி னும் பெரிதுவந்த புதுவை நம்பியார், தம்மகள் மாயவன் பண்பையுள்ளவாறு அறிந்து வழிபடுமாறு அவர்க்குத் திருமாலினுடைய ஐவகையிலச்சினைகளையும் இட்டுப் பரம ஞானத்தை உணர்த்தியருளினர்.

திருத்துழாய்ச்செடி பூமியிலிருந்து முளைக்கும்பொழுதே நறுமணத்துடன் தோன்றுதல்போலப் பிறவியிலேயே கடவுள் மணங்கமழத் தோன்றிய சுரிகுழற்கோதையார் தந்தையாரிடம் பரஞானம் பெற்ற பின்னர், தம்பெருமானுடைய புகழையும், பெருமையையும் பேசியுந் துதித்தும் பத்திப் பெருவேட்கை யுடையராய்த் திருமாலடியார்களிற் சிறந்தோரான தம் தந்தை விட்டுசித்தர் முதலியோரே வியக்குமாறு மெய்யறிவுதலைக்கூடப் பெற்று விளங்கினர்.

மாயவனையன்றி மற்றொருவரையும் மணப்பதில்லையென்று இளமையிலிருந்து உறுதிகொண்டிருந்த அந்நங்கையார், தம்மை ஆடை அணி முதலியவற்றால் நன்கு அலங்கரித்துக் கொண்டு, தந்தையார் பெருமானுக்குச் சாத்துமாறு தொடுத்து வைத்திருக்கும் மலர்மாலையை அவர் அறியாமல் எடுத்து சூட்டிக்கொண்டு பெருமானுடைய திருக்கோலத்திற்குத் தம் எழில் ஒத்திருக்கின்றதோ என்று தம்முடைய ஒப்பனையழகைக் கண்ணாடியிலே பார்த்துக்களிப்பர். பின் தந்தையார் காணாமல் மாலையைப் பந்தாகச்சுற்றி முன்போலவே வைத்துவிடுவார்.

சுரிகுழற்கோதையார் நாடோறும் இன்னணம் மாலையை அணிந்து அழகு பார்ப்பதும், தந்தையறியாமல் வைத்து விடுவதுமாக ஒழுகும்நாளிலே ஒருநாள் அவருடைய தந்தை யார் வந்து, தம்மகள் கடவுளுக்குச் சாத்துதற்கு வைத்திருந்த மாலையைத் தரித்திருப்பதைக் கண்டுவிட்டார். உடனே

அவருக்கு மிகுந்த சினமுண்டாயது. புதல்வியை நோக்கி, நங்காய்! நீ இவ்வாறு செய்யலாமா? இது சாமிக்குச் சாத்த வைத்திருந்த மாலேயாயிற்றே! நித்தலும் இப்படியே செய் திருக்கின்றனேயோ? இது எவ்வளவு தீயசெயலாகும். இதற்குக் கழுவாய் ஏது, இனி இவ்வாறு செய்யாதே என்று அறிவுறுத்தினர்.

பின், அன்று வடபெருங் கோயிலுடையானுக்கு மாலே சாத்தும் திருப்பணிக்கு இடையூறு நேர்ந்தமையைக் குறித்து மிகுந்த வருத்தமுடையராய்த் துயில் கொண்டனர். அப் பொழுது பாற்கடற்பள்ளிமேயோன், ஆழ்வாருடைய கனவில் எழுந்தருளி, அன்பனே நீ இன்று நமக்குத்திருமாலேகொண்டு வாராததென்னே? என வினவ, விட்டுசித்தர், அவரை வணங்கித் தம் புதல்வியாருடைய பொருந்தாச் செய்கையை விண்ணப்பித்தனர்.

அதுகேட்ட கடல் வண்ணன் அவள் சூடிக்கொடுத்த பூந்தொடையலே நமக்கு இன்பந்தருவதாம், இனி அத்தகைய மாலேயையே கொண்டு வருவாயாக எனத் திருவாய் மலர்ந் தருளி மறைந்தனர். என்னே அன்பின் திறம்!

உலகில் உண்மையறிவு கைவரப்பெற்ற பெருமக்கள் தாம் எத்தகைய கடவுள் வடிவத்தை வழிபடினும், அவரிடத் துண்டாம் அன்பின் மிகுதிப்பாட்டினுல் எத்தகைய செயலேப் புரிந்தாலும், அது அக்கடவுளர்க்கு இன்பந்தரும் நற்செய லாகவே தோன்றும். அதனுலன்றே ஒவ்வொரு சமயத் தவரும் தாம் வழிபடுகடவுளே அன்புருவினன் என அறை கின்றனர்.

இதனே அன்பேவடிவெடுத்தாற்போன்றவராகிய கண்ணப்ப நாயனுர் தம் எல்லேயில்லா அன்பின் பெருக்கால் தமது தலே மயிரிற்செருகிக் கொணர்ந்திட்ட பூவும், வாயில் கொணர்ந்த

திருமஞ்சனமும், சுவைத்துமிழ்ந்த இறைச்சியும் சிவபெருமானுக்குப் பெரிதும் உவப்பாயினமை கூறப்படுதலானும் அறிக.

திருமாலுடைய திருமொழிகேட்ட பட்டர்பிரான் உடனே விழித்தெழுந்து வியப்பெய்தி, தம் அருந்தவப் புதல்வியாகிய கோதையார் கடல்வணன் காதல் செயும் பின்னைப் பிராட்டியோ? அன்றி மண்மகளோ? மலர்மகளோ? யாவரென்றறியேன் என்று அவர் திறத்து அளவிலன்பு கொண்டனர். பின் தம்முடைய ஆண்டவனால் விரும்பியேற்றற்குரிய அன்னையின் அமிசமாய்த் தோன்றிய அவர், தம்மை ஆட்கொள்ள வந்தவதரித்தவர் என நினைந்து, ஆண்டாள் என்றும் மாதவன் புனைதற்குரிய பூமாலையைத் தாம் அணிந்து அழகு பார்த்துக் கொடுத்தமையால் சூடிக்கொடுத்த நாச்சியார் என்றும் திருப்பெயரிட்டு அழைத்தனர்.

ஆண்டாள் திருவளரும் தமது பருவ வளர்ச்சிதோறும் மெய்யறிவும், உண்மையன்பும் உடன் வளரப்பெற்றுக் கலை நிரம்பிய மதியெனத் திகழ்ந்தனர். அக்காலத்து அவர் தம் கருத்திற்கிசைந்த காதலனாகக் கருதிய கடல்வணன்பாலெழுந்த வேட்கை விஞ்சியவராய் இமைப்பொழுதும் தம் தலைவனைப் பிரிந்துறைதற்கியலாமல் அவலமுற்றனர்.

சிறந்த கல்வியும் மெய்ஞ்ஞானமும் கடவுளன்பும் ஒருங்குடைய உத்தம மகளிர், தம் பேரறிவால் இன்னலை நீக்கி இன்பமெய்துவர் என்பது ஒருதலையன்றோ? கண்ணபிரானுடைய பிரிவையாற்றாத யதுகுலமகளிரைப் போல சூடிக்கொடுத்த மெல்லியலாரும், நோன்புநோற்றி உயிர்தரிக்க உன்னினர். பன்னருஞ் சிறப்புடைய நாச்சியார் இன்னிசைச் செழுந்தமிழ்ப்பாக்களை யாக்கவல்ல அருந்தமிழ்ப் புலமையுடையராகலின், அவர்தம் உள்ளத்தெழுந்த பெருங்காதல் வெள்ளத்தைத் தம் பெருமானுக்கு அறிவிக்கும் பாமாலை

களாகப் புனைந்து உருகினர். சூடிக்கொடுத்த நாச்சியாரின் திருவுள்ளத்துக் கசிந்தெழுந்த பைந்தமிழ்ப் பாக்களே, திருப்பாவை, நாச்சியார் திருமொழி என நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்துள் வழங்கப்படுகின்றன. இங்ஙனம் இவர் கண்ணன்பால் காதல் கொண்டொழுகினமையால், ஏனைய ஆழ்வார்களினும் இவருடைய பத்திப் பெருமையும், திருவடித் தொண்டும் மிகச்சிறப்புற்றிலங்கின. உலகில் எழிலும் இளமையும் பொருந்திய நங்கையொருத்தி, அழகும் ஆண்மையும் பொருந்திய நம்பியொருவனை அவாவுதல் சிறப்பிக்கப் படுமாறுபோல, கோதை நாச்சியாரின் குற்றமற்ற பத்தியும் ஒழுக்கமும் புகழ்ந்து பேசப்படுவதாம்.

கடவுளருள் பெற்று மெய்நெறிகைவந்த திருவுடைப் பெரியோர் பலர், தம்மைத் தலைவியாகவும், ஆண்டவனைத் தலைவனாகவும் வைத்துத் திருவருளை வேண்டிநின்று பரவி இறையொடு கலத்தலாய பேரின்பத்தை யெய்தினர். இன்னணம் ஆன்றோர் பத்திபூண்டொழுகும் பெருநெறி ஆண்டவனை அடைதற்குரிய வழிகளில் ஒன்றாகிய பத்திமார்க்கம் எனப் பெயர்பெறும். சைவசமயாசாரியர்களும் வைணவ ஆழ்வாராதியரும் இவ்வாறு இறைவனைத் தலைவனாகக் கொண்டு பாடியிருக்கின்றனர்.

எடுத்துக்காட்டாக சைவசமய குரவருள் ஒருவராகிய மணிவாசகப்பெருமானும், வைணவ ஆழ்வார்களுள் ஒருவராய நம்மாழ்வாரும், முறையே குயில், நாரை முதலியவற்றை சிவபிரானிடத்தும், திருமாலிடத்தும் தூதுவிட்டதாகப் பாடிய பாக்களினின்றும் அவர்கள் தம் கடவுளைத் தலைவனாகவும், தம்மைத் தலைவியாகவுங்கொண்டு வழிபாடியற்றி அந்தமில் இன்பத்தில் ஆழ்ந்தமை பெறப்படும்.

ஈண்டு ஆண்டாளோ இயற்கையிலேயே மாதவனின் மனைவியாதற்குரிய நிலமகளின் திருவமிசமாய்த் தோன்றிய

பெருந்தகவுடையவர். எனவே இவரது காதற்கிழமையும், பள்ளத்து வழி வெள்ளம்போல நீலமேனி நெடியோன்பால் இவரை ஈர்த்துச் செல்வதாயிற்று. மாயவனையன்றி மற்றொரு வனையும் மணப்பதில்லையென்று உறுதிகொண்ட நாச்சியார், இங்ஙனம் ஒழுகி வரும் நாட்களில், ஆழ்வார் தம் அருமைப் புதல்வியின் எழில்மிகுந்த மணப்பருவத்தைக் கண்ணுற்று அவர்க்கு ஏற்ற கொழுநனைத் தேட உன்னினர்.

அனைத்து நலனும் நிரம்பிய நங்கைக்குத்தக்க நம்பியைக் காண வியலாமையான் விட்டு சித்தர், பண்டு சீதா பிராட்டி யின் எழிலுக்கேற்ற மணமகனைக்காணுமல் மனமுடைந்திருந்த சனக மன்னனைப்போலக் கவலையுற்றிருந்தனர். பின் ஒரு வாறு தேறி புதல்வியையழைத்து, மகளே, நீ யாரை மணக்க விரும்புகின்ருய் என வினவினர். அதுகேட்ட நங்கை எந்தையே, அடியேனை மனிதர்க்கு மணஞ்செய்விப்பது என் றுரைப்பின், உயிர்வாழ ஒருப்படேன் என உறுதி மொழிந் தனர். பட்டர்பிரான் மகளுரை செவியேற்று நங்காய், நின் கருத்து இதுவாயின் இனிச் செய்யவேண்டியது என் என, சூடிக்கொடுத்த நாச்சியார் தந்தையே, யான் கடல்வண்ண ஞகிய எம்பெருமானுக்கே உரியவளாவேன் என்றுரைத்து நாணி நின்ருர்.

தம் அரும்பெறற் புதல்வியின் மனப்பான்மையை யுணர்ந்த தந்தையார் மகளை நோக்கி, நின் எண்ணம் இது வாயின், நூற்றெட்டுத் திருப்பதிகளிலுள்ள பெருமான் றிரு வுருவங்களில் எவ்வுருவத்தை நின் அன்புக்குரிய மணமகனுகத் தேர்ந்தெடுக்கப் போகின்ருய் என வினவினுர்.

கோதையார் அம்மூர்த்திகளுடைய பெருமையை விளங்க வுரைத்தல் வேண்டும் எனப் பணிந்தார். ஆழ்வாரும் அவ் வாறே ஒவ்வொரு திருப்பதியின் சிறப்பையும், அங்கு எழுந்

தருளியிருக்கும் திருமால் பெருமையையும் முறையே கூறி வந்தனர். ஆண்டாள் மிகுந்த அன்போடு அவற்றைக்கேட்டு வரும்பொழுது, வட மதுரையில் கோயில்கொண்டிருக்கும் கண்ணபிரானுடைய வரலாற்றைக் கேட்டவுடன் மயிர்க்கூச்சலும், திருவேங்கமுடையானது பெருமையையுணர்ந்தபொழுது முக மலர்ச்சியும், திருமாலிருஞ்சோலை மலைப்பெருமான் திருமேனியழகைச் செவியேற்ற மாத்திரத்தில் உள மகிழ்ச்சியும் எய்தி திருவரங்க நாதன் பெருமையை யறிந்தவுடன் எல்லையில்லா மகிழ்ச்சியுடன் இன்புற்று நின்றனர்.

அரங்கநாதனுடைய திருமேனி யழகிலீடுபட்டுருகிய ஆண்டாள் நிலையையுணர்ந்த ஆழ்வார் இந்நங்கைக்கு ஏற்ற மணவாளர் நம் பெருமாளே என்று அகமகிழ்ந்தாரெனினும், மண்ணுலகில் மக்கட் பிறவியில் வந்துற்ற திருமகளாரை அரங்கச் செல்வன் மணம்புரிதல் கூடுமோ என்று ஐயுற்றவராய்க் கவலையுளாழ்ந்திருந்தனர்.

ஆண்டாளும் தம் கருத்திற்கிசைந்த காதலனாகிய அணியரங்கன்பால் அளவற்ற அன்புடையராய், அவன் தம்மை மணம்புரியும் காலத்தை எதிர்நோக்கிக் கண்ணினும் உளத்தினும் அவனுடைய எழிலும், இனிய பண்புமே என்றும் குடிகொண்டிலங்கப் பத்திபூண்டொழுகினர்.

## அரங்கநாதன் ஆழ்வார் முதலியோர் கனவிலெழுந்தருளல்.

நிறைதவருத் தூய்மையுடைய பத்தினிப் பெண்டிற்கு அடைதற்கரிய பொருளும் உளதாமோ? அவ்வம்மையின் பெருமையையும், ஆராத காதலையும் உலகினர்க்கு அறிவுறுத்தத் திருவுளங்கொண்ட திருவரங்கன், ஆழ்வாருடைய கனவிலே தோன்றி, உம் புதல்வி கோதையை மணவணியுடன் திரு

வரங்கத்திற்கு அழைத்து வாரும். நாம் அங்கே அனைவரும் காண அவளை மணம் புரிவோம் என்றுரைத்தருளினன்.

விழித்தெழுந்த பட்டர்பிரான் தம் அருமை மகளின் ஒப்பிலாப் பெருமையையும், அவளைக் கடிமணம்புரியத் திருவுளங்கொண்டு கனவிலருள்செய்த மாயவனுடைய திருவருளையும் நினைந்து பெருமகிழ்வெய்தினர்.

பின்னர், அரங்கநாதன் திருவரங்கத்தில் உள்ள கோயிற் பொறுப்பாளராதியோர் கனவிலே தோன்றி நீவிர் எல்லீரும் பல்வகை வாச்சியங்களுடனும், விருதுகளுடனும் வில்லிபுத்தூருக்குச் சென்று, ஆண்டாளை நம்முடைய மணிச்சிவிகையில் ஏற்றி அழைத்து வாருங்கள் எனப்பணித்தருளினர்.

அரங்கன் அருளப்பாடு கேட்ட கோயிற்பரிசனத்தாரனைவருஞ் சேர்ந்து, நகர் புடைசூழப் பெருமகிழ்ச்சியுடனும் பேரியங்களுடனுஞ் சென்று, வில்லிபுத்தூரையண்மி, ஆழ்வார் திருமுன்னிலையில் பெருமாள் திருப்பணியை விண்ணப்பித்தார்கள். அமிழ்தமனைய அவ்விழுமிய மொழிகளைச் செவியேற்ற விட்டுசித்தர், கழிபேருவகை பூத்துக் கடல்வணன் திருவருளை வியந்து வழுத்தினர்.

## நாச்சியார் மணவணியுடன் புறப்படல்.

பின் அழகிய மணவாளனுடைய அருளப்பாட்டைத் தாம் வழிபடுகடவுளாகிய வடவெருங் கோயிலுடையானிடஞ்சென்று விண்ணப்பித்து, அவரிடம் விடைபெற்றுப் புறப்படலாயினர். நாச்சியார் திருவரங்கத்திற்கு எழுந்தருள்வதைக் கேள்வியுற்ற பாண்டிய மன்னவன் வல்லபதேவன் என்பான், கோதை நாச்சியார் அரங்கநாதற்கு மாலையிடும் அரிய திருமணத்தைத் தாமும் உடனிருந்து கண்டு உய்திபெறும் எண்ணமுடையவனுய்த் தன்னுடைய பரிவாரங்களைக் கொண்டு, புதுவை

நகரத்தையும், திருவரங்கத்தையும் நன்கு அலங்கரிக்கச் செய்து, இருநகரத்திற்கும் இடையிலுள்ள பெருவழியிலும், நடைப்பந்தலிட்டும், உயரிய தோரணங்களை நாற்றியும், வாழை, கமுகு முதலியவைகளை நட்டும் அழகுபடுத்தி நால் வகைச்சேனைகளும் சூழ ஆழ்வாரையண்மினன்.

பெரியாழ்வார் தம் அருமைப்புதல்வி கோதையாரைத் திருமணிப்பல்லக்கில் எழுந்தருள்வித்து, பல்வகை இயங்களின் மங்கல முழக்கத்துடன், 'ஆண்டாள் வந்தாள்' 'சூடிக்கொடுத்த சுடர்க்கொடி வந்தாள்' 'சுரும்பார் குழற்கோதை வந்தாள்' 'திருப்பாவை பாடிய செல்வி வந்தாள்' 'பட்டர்பிரான் புதல்வி வந்தாள்' 'வேயர்குல விளக்கு வந்தாள்' என இன்னிசைச் சின்னங்கள் பல இயம்ப, மெய்காவலர் புடைசூழத் தாமும், அரசனும் பல்லக்கின் இருபுறமும் கண்ணினைக் காக்கும் இமை யென அகலாதிருந்து அழைத்து வந்து திருவரங்கப் பெரு நகரையடைந்தனர்.

மங்கைப் பருவமெய்தி மணமுடியாத நற்குடி மகளிர் இல்லிகவாப் பெருந்தகவுடையர்; மற்றும் அவர் மணமுடியு மளவும் ஆடவர்கண்ணில் அகப்படா தொழுகல் பண்டைத் தமிழர் இயற்கையும் ஆம். ஆகலின் மணிச்சிவிகையில் சுற்றிலுந் திரையிட்டு மறைத்துத் தாமும் புடைநின்று காத்து வந்தனர்.

## திருமணம்.

அரங்கநாதன் திருக்கோயிலை அண்மியவுடன் நாச்சியா ரைப் பல்லக்கினின்றும் இறக்கிப் பெருமானுடைய முன் மண்ட பத்திலே நின்று அழகிய மணவாளனும் அணியரங்கனைத் தரிசிக்கச் செய்தனர். திருவரங்கன் திருவுருவத்தைக் கண்ணுற்றவுடனே எல்லையில்லா இன்ப வெள்ளத்தில்

அழுந்திநின்று பணிந்துருகிய பாவையைச் செங்கணெடியோனின் திருமேனியெழில் ஈர்த்துச் சென்றது.

இரும்பைக் காந்தம் தன்னகத்திழுக்கின்றவாறுபோல, நாச்சியார் திருவுள்ளத்தைத் தன்பால் வலித்துக்கொண்ட மாயவனின் மேனியழகு சொல்லுந்தரத்ததோ? சூடிக்கொடுத்த சுடர்க்கொடியார் உடனே அனைவருங் காணுமாறு, உதறியுடுத்த பட்டாடையுடன் சிலம்பார்க்கச் சீரார் இடைகுலுங்க, கைவளை ஒலிக்கக், கயற்கண்பிறழ, அன்னமன்ன மென்னடை கொண்டு அழகிய மணவாளன் அருகிற்சென்று அளவற்ற மகிழ்ச்சியிற்றிளைத்து நின்றார். பின் திருமால் திருவடியைப் பிடிக்கும் பணியாற்றக் கருதி, அரவணையை மிதித்தேறி அரங்கன் அடிவருடி அவனது திருமேனியில் இரண்டறக் கலந்தனர்.

ஆண்டாள் தாம்கருதியவாறுஅரங்கநாதனையே மணவாளனாகக்கொண்டு இன்னணம் பெறற்கரும்பேறு பெற்றதனைக் கண்ட பெரியாழ்வாருள்ளிட்ட அனைவரும் பெருவியப்பெய்தித் தமக்குக்கிடைத்த அரிய காட்சியை உன்னி மகிழ்ந்து நின்றார்கள். அப்பொழுது திருவரங்கப்பெருமாள், தம்மை வழிபடு குருக்கள் முகமாக ஆழ்வாரையருகழைத்து, நீர் பண்டு திருமகளை ஈன்றுதவிய பாற்கடலரையன்போல நமக்கு மாமனாராய்விட்டீர் என்று அவர் மனமகிழ இன்னுரை வழங்கியருளி மாலை, பரிவட்டம் ஆதியவற்றையும் ஈந்தனர். பின் அவரை நோக்கி, நீர் முன்போலவே வில்லிபுத்தூரையடைந்து வடபெருங்கோயிலுடையானுக்கே பணியாற்றி யிருப்பீராக என விடையளித்தருளினன்.

பெரியாழ்வார் தம் அருமைப் புதல்வி ஆண்டாள், கற்புடை மங்கையர் கருதியது முடிக்கும் ஆற்றலுடையர் என்ப

தனை உலகினர்க்குத் தெளிவுறுத்தி எய்தற்கரிய இன்ப வெள்ளத்தில் திளைத்த பெரும்பேறுகண்டு உவகைமீக் கூர்ந்தாராயினும், மகளைப் பிரிந்த ஆற்ருமை அவரைத் தொடர்ந்தமையின்,

"ஒருமகள் தன்னையுடையேன் உலகம் நிறைந்த புகழால்
திருமகள்போல வளர்த்தேன் செங்கண்மால் கொண்டுபோனுன்
பெருமக ளாய்க்குடி வாழ்ந்து பெரும்பிள்ளை பெற்ற வசோதை
மருமகளைக் கண்டுகந்து மணுட்டுப் புறஞ்செய்யுங் கொலோ"

என்று பாடி அரிதிற்பிரிந்தனர்.

மணிவண்ணனை மருகனுகப்பெற்று விட்டுசித்தர், வில்லி புத்தூரையடைந்து முன்போலவே அன்றலர்ந்த நறுமலர் கொண்டு தம் ஆண்டவற்கு மாலையாதியன தொடுத்துச் சாத்தித் தொண்டுசெய்திருந்தனர். மலர்மாலையே யன்றி, அவர் அகத்தெழுந்த அன்பெனும் இன்புறு சொன்மலர் களாற் பாமாலையையும் புனைந்து, பாம்பணை மேவிய பெருமாற்குச் சாத்தி வாழ்ந்திருந்து, திருமால் திருவடிப் பேற்றையெய்தி யின்பவாழ்விலிருந்தனர்.

நாச்சியார் வரலாற்றை ஒருவாறு நமக்கு அறிவிக்கும் அருமைப் பாவொன்றையும் ஈண்டுக் காட்டுதும்:

"திருவாடிப் பூரத்துச் செகத்துதித்தாள் வாழியே
திருப்பாவை முப்பதும் செப்பினுள் வாழியே
பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே
பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னுனுள் வாழியே
ஒருநூற்று நாற்பத்து மூன்றுரைத்தாள் வாழியே
உயரரங்கர்க்கே கண்ணி யுகந்தளித்தாள் வாழியே

*மருவாரும் திருமல்லி வளநாடி வாழியே*
*வண்புதுவை நகர்க்கோதை மலர்ப்பதங்கள் வாழியே"*

## ஆராய்ச்சிக் குறிப்பு — காலம்.

தமிழ்நாட்டிலே முற்பிறப்பின் நற்றவத்தாற்றோன்றித் திருமால் பத்தியிற் சிறந்து, தண்டமிழ்ப் பாமாலைகளை யாத்தருளிய தவஞானச் செல்வர்கள் ஆழ்வார் எனப்படுவர். அவர்களுள் விட்டுசித்தர் எனப்பெயரிய பெரியாழ்வாருக்குப் புதல்வியாகத் தோன்றியவர் ஆண்டாள்.

ஆழ்வார்கள் பன்னிருவர் எனத் தொகையாகக் கூறப்படினும், சூடிக்கொடுத்த நாச்சியாரையும் அவருடன் சேர்த்தே மொழிவர். ஆழ்வார்களுடைய வரலாறு திவ்விய சூரி சரிதை, குருபரம்பரை, ஆழ்வார்கள் வைபவம், முதலிய பல நூல்களிற் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் சிலவற்றில் முதலாழ்வார் முதலிய சிலருக்குப்பின் பட்டர்பிரான் வரலாறு கூறப்பெற்றுளது. அதையடுத்து ஆண்டாள் வரலாறும் மொழியப்படுகின்றது. பெயர்மாத்திரையில் உரைத்துப்போகும் சில நூல்களின் ஆசிரியர் பெரியாழ்வாருக்குப் பின் ஆண்டாள் பெயரை மொழியாதும் விட்டிருக்கின்றனர். எனினும் தந்தை பெயர் உரைக்குமிடத்து மகளையும் வைத்தாராகவே கருத வேண்டும்.

குருபரம்பரையில் ஆருவதாகப் பெரியாழ்வாரும், ஏழாவதாகக் கோதையாரும் கூறப்பட்டிருக்கின்றனர். ஆனல் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்துள் முதற்கண் பெரியாழ்வார் பாடல்களும், அதையடுத்து ஆண்டாள் பிரபந்தமும் சேர்க்கப் பெற்றுள்ளன. ஆழ்வார்கள் வைபவம் என்னும் நூலில் இம் முறையைப் பின்பற்றி இவர்கள் வரலாறு உரைக்கப்படுகின்றது.

திவ்வியசூரிசரிதை, உபதேசரத்தின மாலை முதலிய வற்றில் ஆழ்வார்கள் பிறந்த ஊர், ஆண்டு, மதி, நாள் முதலியன விளக்கமாகக் கூறப்படுகின்றன. ஆண்டாள், கலியுகம், தொண்ணூற்றெட்டினதாய நள ஆண்டு, ஆடித் திங்கள், சுக்கிலபக்கம், சதுர்த்தசி, செவ்வாய்க்கிழமை; பூரம் இவை கூடிய நன்னாளில் அவதரித்தாராக இந்நூல்களில் உரைக்கப்படுகின்றது.

இதுவரை வரலாற்றாராய்ச்சியான் துணிந்துரைக்கப் படாத இவர்கள் காலம் எந்த நூற்றாண்டினவாயிருப்பினும், திங்கள் நாள் முதலியனவெல்லாம் மேற்குறித்த நூல்களில் ஒரு பெற்றியேயுரைக்கப்படுதலான் அவற்றைக் கடைப்பிடித் தலில் இழுக்கொன்றுமில்லை. ஆனால் இவர் தமிழில் வட சொற்கள் மிகுதியாகக் கலக்கத் தலைப்பட்ட காலமாகிய ஒன்பது, அல்லது பத்தாம் நூற்றாண்டில் இருந்திருப்பர் என்று கொள்ளுதலே பொருத்தமாகத் தோன்றுகிறது.

## இடமும், குலமும்.

இவர் பாண்டிநாட்டில் வில்லிபுத்தூரில் அவதரித்தவர் என்பது, இவரது தந்தையாராகிய விட்டுசித்தர் அங்கே வாழ்ந்திருந்தமையால் பெறப்படுகின்றது. திருமல்லிவளநாடி எனவுரைக்கப்படுதலால் பாண்டி நாட்டின் உட்பகுதியாய மல்லிவள நாட்டில் வில்லிபுத்தூர் இருந்தது என்று கொள்ள வேண்டும் போலும்.

இவரைப் 'புதுவையாண்டாள்' 'புதுவைநகர்க் கோதை' என மொழிவதாலும், இவர் ஊர் வில்லிபுத்தூர் என்பது தெளிவாகின்றது. பெரியாழ்வார் வேயர் குலத்துதித்தவர் என்று கூறப்படுதலால் இவரது மரபும் விளங்கும்.

இனி, இவரது பிறப்பு நம்மனோர்க்கு வியப்பைத் தரும் வகையில் குறிக்கப்பட்டுளதை நோக்குவோம். மன்னர் மன்னனாகிய தயரதனுக்கு மருகியாயும், இராமபிரானுக்கு வாழ்க்கைத் துணைவியாயும் தோன்றிய சீதா பிராட்டியார் திருமகளின் அமிசமாய் சனக மன்னன் வேள்வியின்பொருட்டு உழுத படைச்சாலில் அவதரித்தனர் என இராமாயணம் முதலியவைகளில் கூறப்படுதற்கிணங்க, திருவரங்கப் பெருமானை மணவாளனாகப்பெறுதற்குரிய மாதவத்தினராகிய கோதை நாச்சியாரை நிலமகளின் அமிசமாய்ப் பெரியாழ்வார் கொத்தின பூமியில் அவதரித்தனர் என்றுரைக்கப்பட்டது போலும். அவர் பிறப்பு எவ்வாறாயினும் மண்ணுலகில் மானுடப் பெண்ணாய் விளங்கி தம்மனத்திற்கிசைந்த மணாளனை யடைந்தனர் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

## பிரபந்தம்.

செந்தமிழ்க் கல்வியிற்சிறந்து விளங்கிய இவரியற்றிய நூல்களுள், 'திருப்பாவை' என்பது எட்டடியான் முடிந்த முப்பது கொச்சகக்கலிப்பாக்களினால் யாக்கப் பெற்றது. இந் நூல் மார்கழித் திங்களில் வைகறையெழுந்து ஆயர் மகளிர் கண்ணபிரானுடைய திருவிளையாடல்களையும், பெருமைகளையும் புகழ்ந்து பாடிக்கொண்டு ஒருவரையொருவர் அழைத்து நீராடச் செல்வதாக இயற்றப்பட்டதாகும்.

மகளிர் இவ்வாறு மார்கழித் திங்களில் விடியற்கால மெழுந்து, ஒருவரையொருவர் துயிலெழுப்பி, தாம் வழிபடு கடவுள் சீர்பாடி நீராடும் வழக்கம், தமிழ்நாட்டில் நிலவியமை, திருவாதவூரடிகள் அருளிய திருவெம்பாவையானும் உணரப் படும்.

நாச்சியார் ஒவ்வொரு பாவிலும் மணிவண்ணனுடைய செயற்கருஞ் செயல்களைப் புகழ்ந்து பாடுவதுடன், புட்குலங்களின் காலையொலியும், ஆய்க்குல மகளிர் நாட்காலையில் தயிர் கடையும் முழக்கமும் துயிலெழுப்புதற்குத் துணையாயிருப்பதனையும் குறிப்பிடுகின்ருர்.

இன்னணம் வைகறையிலெழுந்து உலகளந்த உத்தமன் சீர்பாடிப் பாவையர் நீராடின், நாட்டில் தீங்ககன்று, திங்கள் மும்மாரி பெய்யச் செந்நெல்வளஞ் சிறக்கும், அவ்வழி ஆனினங்கள் குடம் நிறையப் பால்பொழியும் என மொழிதலால் மார்கழி நீராடும் நோன்பின் பயனையும் விளக்குகின்ருர். ஒருபாவில் 'வெள்ளியெழுந்தது' 'வியாழமுறங்கிற்று' என வைகறையையுணர்த்தக் கூறிய மொழிகளின் விநயம் வியத்தற்குரியதாம். இன்னும் வைணவர்களால் பெருமாள்கோயில்களிலும், இல்லங்களிலும், மார்கழித்திங்கள் நாட்காலையில் நாச்சியார் திருப்பாவை பாடப்பெறுதலே இதன் பெருமைக்குச் சான்ருகும். இயற்றமிழ்ப் புலமையிற் சிறந்த இவரியற்றிய இந்த முப்பது பாக்களும், ஏறக்குறைய இருபத்தைந்து இராகங்களிற் பாடப்பெறுவனவாம் என்ருல், இசைத் தமிழிலும் இவர் மேம்பட்டிருந்தனர் என்று கருத இடமுண்டாகிறது. மற்றும் இப்பாக்களுள், நந்தகோபன், யசோதை, நப்பின்னை ஆகியோரை அடிக்கடியழைத்துப் பாடுவதோடு, நப்பின்னையையுரைக்குமிடத்துப் பெண்டிரின் இயற்கைப் பரிகாசந்தோன்ற மொழியுந்திறம் இன்பம் பயத்தற்குரியது.

இனி இவர் பாடிய வேறு செய்யுட்களெல்லாம் நாச்சியார் திருமொழி என்பதனுள் அடங்கும். திருமொழி பப்பத்துப் பாடல்கள் கொண்ட பதினன்கு பிரிவினவாகும். அவற்றுள் மூன்றில் பதினெரு பாக்களுண்டு. ஒவ்வொரு திருமொழியும்

முதற்சொல்லின் பெயராலேயே வழங்கப்படுவதாம். மார்கழி நீராடி நோன்புஞற்றி முடிந்த பின்னர் அடுத்தபடியாகத் தையொரு திங்களும் என்று தொடங்கும் திருமொழியைப் பாடினராகல் வேண்டும்.

இதனுள் தை, மாசி, பங்குனி ஆகிய மூன்று திங்களிலும், காமவேளைக்குறித்து தவங்கிடந்து, தாம் விரும்பிய மணாளனைக் கூட்டுவிக்குமாறு வேண்டிக்கொள்ளுதல் விளக்கப்படுகின்றது. இம்முதற்றிருமொழியின் ஐந்தாம் பாவில், விண்ணகத்துறையும் வானவர் பொருட்டு, மறையவர் வேள்வித் தீயில் வைத்த அவிப்பாலியை கானிடைத் திரியும் நரியொன்று கொள்ள விரும்பினாற்போல, "ஆழியும் சங்கமும் அங்கையிற்றாங்கிய ஆண்டவற்கெனத் தோன்றிய என் உடல் நலம், மானிடர்க் காவதென்றுரைப்பின் உயிர் வாழேன்" எனத் துணிந்துரைக்கும் சான்று, இவர் எத்தகைய உறுதியுடையவராயிருந்தார் என்பதைத் தெளிவுறுத்துவதாம்.

மற்றொரு பாவில்,

"கேசவ நம்பியைக் கால்பிடிப்பாள் எனும்
பேறு எனக்கருள் கண்டாய்"

எனக் கைப்பற்று மொழிகின்றார். ஏனைய திருமொழிகளிலும் தமது வேட்கைப் புலப்பட இயங்கு திணை நிலத்திணைக்கணுள்ள பலவேறு அஃறிணைப் பொருள்களையும், தூது போக்கியும், உரையாடியும் மொழியுமிடங்கள் பலவாம். எவ்வண்ணமும், மணிவண்ணனையே மாலை சூட்டக் கருதிய நாச்சியார் தாம் கனவு கண்டனவாக வுரைக்கும் பாடல்கள் மிக்க அழகுடையனவாம்.

இப்பகுதியில் மகட்பேசிக் காப்புநாண்கட்டல் முதலாக, அம்மி மிதித்து அருந்ததிகண்டு நகர்வலம் வருதலீறாகவுள்ள

மங்கலச் சடங்குகள் யாவும் நன்கு கூறப்பெற்றிருக்கின்றன. கனா முந்துறாத வினையில்லை என்ற பழமொழிக்கு எடுத்துக் காட்டாகவுள்ள ஆண்டாள் திருப்பாவினுள் ஒன்றைப் பார்ப்போம்.

"இந்திர னுள்ளிட்ட தேவர்குழா மெல்லாம்
வந்திருந் தென்னை மகட்பேசி மந்திரித்து
மந்திரக் கோடி யுடுத்து மணமாலை
சுந்தரி சூட்டக் கனாக்கண்டேன் தோழிநான்"

---

"கோலச் சுரிசங்கை மாயன் செவ்வாயின் குணம்வினவும்
சீலத்தினள் தென்திரு மல்லிநாடி செழுங்குழல்மேல்
மாலைத்தொடை தென்னரங் கருக்கீயும் மதிப்புடைய
சோலைக் கிளிஅவள் தூயநற்பாதம் துணைநமக்கே"

—திருக்கண்ணமங்கையாண்டார்.

15 W x
N56

நூல் முற்றிற்று.

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 112199
EGMORE, MADRAS

மகாலிங்கம் [illegible], தஞ்சை — போன் நெ, 123.

# குறிப்புரை.

பக்கம்

1 புலத்துறை — கல்வியறிவு, புலமை.
பூவையர் — பெண்கள்.
பெண்மை — பெண்களுடைய இயற்கைப் பண்புகள்
நெறியறியாது — வழி தெரியாமல்.
உழலும் — இடர்ப்படும்.

2 அழுங்குதல் — கவலைப்படுதல்.
உறைப்பால் — உறுதிப்பாட்டால்.
மழு — கோடரி.

3 அங்கையினெல்லி — உள்ளங்கையிலுள்ள நெல்லிக்கனி (தெளிவாக) விளக்கமாக.
பிற்றை நிலை — வழிபடல்.
ஒண்மை — தெளிவு (விளக்கம்)

4 மம்மர் — மயக்கம்.
பெற்றி — தன்மை.
திகழும் — விளங்கும்.
ஆன்று — ஆராய்ந்து.

5 புலமைத் திருவுடையார் — கல்விச் செல்வம் (மெய்யறிவின் பெருக்கம்)

ஆயுந்தொறும் — ஆராயும்தோறும்.
வீடு பேறு — முத்தி, மோட்சம்.

6 அறந்திறம்பா — அறத்தின் மாறுபடாத.
நல்லிசை — நல்ல புகழ்.
கேடில் விழுச்செல்வம் — அழிவில்லாத பெரிய செல்வம்

பக்கம்.

ஊழ் — வினைப்பயன்
ஏமாப்பு — பாதுகாப்பு.

7 வாலறிவன் — மெய்யறிவினையுடைய இறைவன்.
வள்ளுவப் பயன் — திருக்குறள்.
சாகம் — தளிர்.

8 மெய்ஞ்ஞானம் — உண்மையறிவு.
தரு — மரம். வானுலகிலுள்ளதொரு சிறந்த மரம்.
அவிர்சடைக் கடவுள் — ஒளி பொருந்திய சடையையுடைய சிவபெருமான்.

9 புலவராற்றுப்படை — பரிசில்பெற்ற புலவனொருவன் மற்றைய புலவர்களைத் தலைவனிடத்தே செலுத்தல். புலவர்களை வழிப்படுத்தல்.
சந்தனப் பொதியிற் செந்தமிழ் முனி — அகத்திய முனிவர்.

புரைகுநர் — ஒப்பாவார்.

10 நுனித்துணர்வு — நுண்ணிய அறிவு.
இணருழ்த்து — கொத்துக்களில் மலர்ந்து.

11 நிச்சமும் — நித்தலும், எப்பொழுதும்.

12 இழுக்கு — குற்றம்.
பண்படுத்த — நெறிப்படுத்த.
முனைவன் — முன்னவன், கடவுள்.

13 பயிர்ப்பு — கற்பு, நிறையுடைமை.
தணவா — நீங்காத.

14 வாமனன் — திருமால்.
தமிழ் மறை — திருக்குறள்.

18 நோன்காழ் — வலிய காம்பு.
நுதி சிதைந்து — நுனி மழுங்கி (ஒடிந்து)
குற்றில — குறுகிய இல்லம்.

பக்கம்.

19 மறக்கற்பின் மாண்பு — வீரக்கற்பின் சிறப்பு.
மாசென்று வீசினேன் — குற்றமென்று விடுத்தேன்.

20 கரையிகந்த — கரைகடந்த, (வரம்புமீறிய)
ஈன்ற ஞான்றினும் — பெற்ற பொழுதைவிட.
செருப்பறை — போர்முரசம் (போர் ஒலி)

22 மூவர் — சேர, சோழ, பாண்டியர்.
பொழில் வரைப்பு — நிலவெல்லை.

23 புனல் நாட்டை — சோழ நாட்டை.
செம்பியன் — சோழன்.

24 புலிப்பொறி — புலியிலச்சினை (அடையாளம்)

25 கச்சித் திருப்பதி — காஞ்சிமாநகரம்.

26 ஒக்கலும் — உறவினரும்.
இலங்குஎழில் — விளங்குகின்ற அழகு.

28 முன்றுறை — ஆற்றில் நீராடுதற்குரிய துறை.

29 நிறைமதி — பௌர்ணமி.

30 வௌவிக்கொண்டு — களவாடிக்கொண்டு.
எல்லியும் எல்லும் — இரவும் பகலும்.
அண்மி — அடைந்து, (சமீபித்து)

31 அலக்கணுற்று — துன்பமுற்று.

32 கற்பின் பொற்பு — கற்பின் அழகு.
காவிரி நீத்தத்தில் — காவிரி வெள்ளத்தில்.

36 அலமந்து — சுழன்று (துன்புற்று)
பேதுற்று — அறிவு மயங்கி.

38 திப்பிய நூல் — திவ்ய நூல் (தூய நூல்)
தெய்வத்தன்மை பொருந்திய நூல் எனினும் ஆம்.

பக்கம்

39 அருண்மொழித் தேவர் — சேக்கிழார் பெருமான்.

40 நாளங்காடி — பகற்கடைத்தெருவு.
அல்லங்காடி — இரவுக் கடைவீதி.
நுகத்துப்பகல்போல — நுகத்தடியின் நடுவில் இருப்பதொரு ஆணி, தான் இடைநின்று இருபகுதியாகச் சமப்படுத்தலான் பகல் எனப் பெயர்பெற்றது
வங்கம் — கப்பல்.

41 போலாது — போல் அல்லாமல்.

42 பாம்பணி பரமன் — பாம்புகளை ஆபரணங்களாக அணிந்த சிவபெருமான்.
ஓவியத்தெழுதவொண்ணு வுருவம் — சித்திரத்தில் எழுத முடியாத அழகுடைய வடிவம்.

44 இல்லிகவாப் பருவம் — வீட்டைவிட்டு வெளியேருத மங்கைப் பருவம்.
அட்டிற்ருெழில் — சமையல் வேலை.
குடும்ப வினை — வீட்டு வேலை.

'45 குடிமை — குலம்.
வதுவை முடிக்க — மணம் முடிக்க.
மகட்கொடை — பெண் கொடுத்தல்.

46 தாரகை நடுவண் தண்மதிபோல-விண்மீன்களினிடையே ஒளிவிடும் குளிர்ச்சிபொருந்திய சந்திரன்போல.

47 சேய்மையில் — தூரத்தில்.
சூழ்வாராயினர் — ஆராய்வாராயினர்.
இந்திர திருவும் — தேவேந்திரனுடையசெல்வம்போன்ற செல்வமும்.
அந்தமிலின்பமும் — அழிவில்லாத மகிழ்ச்சியும். (இறுதியிலா இன்பம்)

பக்கம்.

48 உன்னினன் — நினைந்தான்.
பெருநாவலர் — திருவள்ளுவர்.

49 இழுக்காது — குற்றமாகாது.
குலவிச்சை — குலத்தொழில் (விச்சை-வித்தை)
பாகம் படும் — செம்பாதி வரும்.

50 மாட்சிகளாவன — சிறப்பியல்புகளாவன.
அடிசிலூட்டுதல் — உணவூட்டுதல்.
கொழுநனிடம் — கணவனிடம்.
எள்ளி — இகழ்ந்து
ஏதந்தருவதாம் — துன்பந்தருவதாம்.

51 இயக்கவல்ல — நடத்தவல்ல, ஏவவல்ல.
வளவர் பெருமகள் — சோழவரசன் மகள்.
தென்னவன் — பாண்டியன்.
அறமோம்பி — தருமம் செய்து.
உம்பருள் — தேவருள்.

52 வேளாண்மை — உபகாரம்.

56 மிளிர்வது — விளங்குவது.

57 உண்கண் — மைதீட்டிய கண்.
குய்ப்புகை — தாளிப்பினலுண்டாகிய புகை.
தான்றுழந்தட்ட — தான் வருந்திச் சமைத்த.
தீம்புளிப்பாகர் — இனிய புளிப்பதம் அமைந்த குழம்பு.

58 எஞ்சியிருந்த — மிகுந்திருந்த.
விடையவர் — இடப வாகனத்தையுடைய சிவபிரான்.

59 உற்றவிடத் தூறு தீர்ப்பான்—துன்பம் நேர்ந்தபொழுது அக்குறையை நீக்குகின்றவன்.
மடவரல் — புனிதவதியார் (பெண்)

60 மழக்கை — இளங்குழந்தையினுடைய மெல்லிய கை.

பக்கம்.

61 வாதுற்றன — போராடின.

62 நறுமலர்மேற்றிருவனைய — மணம்பொருந்திய தாமரை மலரில் வீற்றிருக்கும் இலக்குமிபோன்ற
உடனுறைவு — சேர்க்கை.

63 அரும்பெறல் — பெறுதற்கரிய
ஒருப்படவில்லை — ஒற்றுமைப்படவில்லை. துணிவுகொள்ளவில்லை.
பிரிந்துறைவதையே — பிரிந்து வாழ்வதையே

64 இலக்காய் — எடுத்துக்காட்டாய்

65 அலக்கணுட்படுத்தி — துன்பத்திற்குள்ளாக்கி
கரந்தொழுகினன் — மறைந்து வாழ்ந்தான்.
இருநிதி—சங்கநிதி, பதுமநிதி என இரண்டுவகைப்பட்ட பொருட்குவை.

66 அளகை வேந்தன் - அளகாபுரிக்கு அரசனாகிய குபேரன்
கிளைஞர் — உறவினர்

68 தசைப் பொதியாய — மாமிச பிண்டமாகிய

69 கண்ணுதற்பரமன் — நெற்றியிற்கண்ணுடையராய சிவ பிரான்.

70 எள்ளி — இகழ்ந்து
பிஞ்ஞகன் — பெருமான்
உய்தியடையுங்காலத்து — விடுதலைபெறும்பொழுது (வீடுபேறு உண்டாம்பொழுது)
உண்மையறிவு — மெய்ஞ்ஞானம்
பகலவன் — சூரியன்

71 அச்சுறுத்து — பயமுறுத்தி
ஈமக்காட்டில் — சுடுகாட்டில்
வரன துந்துபி — விண்ணுலக வாத்தியம்

பக்கம்.

72 முப்புரம் — ஆகாயத்தில் அசுரர்கள் பொன், வெள்ளி, இரும்பு ஆகியவற்ருல் அமைத்திருந்த மூன்று நகரங்கள்.

உம்பர் பெருமான் — தேவர் தலைவனாகிய சிவபிரான்.

73 இமயவல்லி — இமயமலையரசன் புதல்வியாகிய பார்வதி தேவியார்.

76 பிறப்பிறப்பில்லாப் பெரியோன் — சிவபெருமான் (தோற்றமும் முடிவும் இல்லாத இறைவன்)

78 அம்பலவாணன் — நடராசப் பெருமான்

80 கைவருமாறு — கைகூடும்படி

82 விழுமிய — சிறந்த
மைஞ்ஞான்ற கண்டம்—நீலகண்டம் (கருமை பொருந்திய கழுத்து) நஞ்சுண்ட கண்டம்.

85 அணித்தாக — சமீபமாக

86 ஆலவனம் — திருவாலங்காடு
அரங்கினியலும் — நாடகமேடையின் இலக்கணமும்
இயங்களின் வகையும் — இன்னிசைக் கருவிகளின் வகையும்.

87 பல்பதியம் — பல பதிகங்கள் (பல பாக்கள்)
திரிபுரமெரித்த — முப்புரங்களை எரித்தருளிய
குன்றமெறிந்த — கிரவுஞ்சமென்னும் மலையைப்பிளந்த
வடபெருங்கோயில் — வில்லிபுத்தூரிலிருக்கும் திருமால் திருக்கோயில்.

நெடுமால் ஊர்தி — திருமாலின் வாகனமாகிய கருடன்.
விட்டு சித்தர் — பெரியாழ்வார்.
பொற்கிழி — பொன் முடிப்பு.

88 நாண்மலர்களால் — அன்றலர்ந்த பூக்களால்

பக்கம்.

89 ஐவகையிலச்சினை — திருமாலுடைய சங்கு, சக்கரம், வில், வாள், தண்டு என்னும் ஐந்துவகை அடையாளம்.
ஒப்பனை — அலங்காரம்

90 கழுவாய் — விமோசனம், (பிராயச்சித்தம்)
பாற்கடல் பள்ளிமேயோன் — திருப்பாற்கடலில் துயில் கொள்ளும் திருமால்.
கடல்வண்ணன்—கடல்போன்ற கரியநிறமுடைய திருமால்

91 வேட்கை விஞ்சியவராய் — அவாமிக்குடையராய்
நோன்புஞற்றி — தவம்புரிந்து

93 காதற்கிழமை — அன்புரிமை

95 ஈர்த்து — இழுத்து
அருளப்பாடு — கட்டளை

96 ஆண்டாள் வந்தாள் —அரங்கநாதனுல் ஆட்கொள்ளப் பெற்றவள் வந்தாள்.
புடைநின்று — பக்கத்தில் நின்று.

97 கயற்கண் பிறழ — கயல்மீன்போன்ற கண்கள் பிறழ
இரண்டறக் கலந்தனர் — பேதமறக் கலந்தனர் (அத்துவிதமாதல்)

98 மணிவண்ணனை — நீலமணிபோன்ற நிறமுடைய திருமால்.

101 திருவாதவூரடிகள் — மாணிக்கவாசகப் பெருமான்

102 உலகளந்த உத்தமன் — மாபலிச்சக்கரவர்த்தியிடம் மூன்றடி மண் வேண்டி உலகத்தையே அளந்தமையால் திருமாலுக்கு எய்திய பெயர்.

103 வேள்வி — யாகம்
அவிப்பலி — தேவர்களுக்காக வைக்கப்படும் உணவு.
ஆழி — சக்கரம்
இயங்குதிணை, நிலத்திணை — சராசரங்கள் நிற்பனவுஞ் சஞ்சரிப்பனவும்.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 15 | 7 | அந்நாளில | அந்நாளில் |
| 27 | 13 | சிறந்தது | சிறந்து |
| 27 | 18 | புகழப்பெற்ற | புகழப்பெற்று |
| 28 | 5 | மனனவன | மன்னவன் |
| 30 | 3 | இனப | இன்ப |
| 30 | 19 | தலைவர் | தலைவா |
| 31 | 13 | நிகழ்ச்சிக் | நிகழ்ச்சி |
| 31 | 24 | தலைவிக் | தலைவி |
| 32 | 14 | உள்ளத்தனளாய்த் | உள்ளத்தினளாய்த் |
| 40 | 13 | நன்னெஞ்சினிராய | நன்னெஞ்சினராய |
| 53 | 17 | பயந்தாங் | பயந்தாஅங் |
| 61 | 24 | இதுவர | இவரது |
| 62 | 13 | உடனுறை | உடனுறைவு |
| 64 | 26 | மகளாம் | மகளாய் |
| 70 | 3 | ஒவ்வாத | ஒவ்வாது |
| 77 | 20 | நல்வினைத் | நல்வினை |
| 92 | 11 | பேசப்படுவதாம் | பேசப்படுவனவாம் |
| 93 | 24 | மணமகளாகத் | திருவுருவமாகத் |
| 94 | 23 | பெண்டிற்கு | பெண்டிர்க்கு |
| 103 | 10 | அவிப்பாலியை | அவிப்பலியை |
| 103 | 19 | கைப்பற்று | கையற்று |
| 103 | 20 | வேட்கைப் | வேட்கை |
| 104 | 8 | சுந்தரி | அந்தரி |